இன்றைய காலநிலை
கூடிய வெப்பநிலை 33 c°
குறைந்த வெப்பநிலை 27 c°
வெப்பமான காலநிலை

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 | கதிர்: 119 | வள்ளுவர் ஆண்டு: 2045 | பங்குனி 11, செவ்வாய் 25.03.2014

25 MAR 2014

# மேலும் வலுவான இறுதி வரைவு ஐ.நா.சபையில் நேற்று சமர்ப்பிப்பு

## நல்லிணக்க ஆணைக்குழு விசாரணை நடத்திய காலப்பகுதிக்குள் சர்வதேச விசாரணை நடத்த வலியுறுத்துகின்றது

ஜெனிவா, மார்ச் 25
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளினால் முன்வைக்கப்படும் தீர்மானத்தின் இறுதி வரைவு நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. வலுப்படுத்தப்பட்ட இரண்டாவது வரைவில் இருந்து சிறிய திருத்தத்துடன் இந்த இறுதி வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. இறுதிப்போரின்போது இரண்டு தரப்புகளாலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சுயாதீனமான விசாரணை ஒன்றை நடத்தவேண்டும் என்று இரண்டாவது வரைவில் கேட்டிருந்த நிலையில் இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை நடத்திய காலப்பகுதிக்குள் மனித உரிமை ஆணையாளரின் விசாரணைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் மூன்றாவதும் இறுதியுமான வரைவு வலியுறுத்துகின்றது.
தற்போது நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் அமெரிக்கா உட்பட 5 நாடுகள் இணைந்து இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானத்தை சமர்ப்பித்துள்ளன. குறித்த தீர்மான வரைவு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதாக அமையவில்லை என்று பல்வேறு தரப்புகளாலும் சுட்டிக்காட்டப்பட்டது.

21 ஆம் பக்கம் பார்க்க

## பிரேரணை தொடர்பாக விளக்குவார் பீரிஸ்

கொழும்பு, மார்ச் 25
இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அமெரிக்கப் பிரேரணை குறித்து இலங்கை தரப்பில் எதிர்வரும் 26ஆம் திகதி விளக்கமளிக்கப்படவுள்ளது. வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இந்த விளக்க உரையை ஜெனிவாவில் நிகழ்த்தவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.
இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளால் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணை மீது எதிர்வரும் 28 ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.
இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன. அது தொடர்பில் விசா

21 ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸாரின் அசிரத்தையைக் கண்டித்து நுண்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்



*போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுடன் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் கலந்துரையாடுகிறார்.*

யாழ்ப்பாணம், மார்ச் 25
யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக இறுதியாண்டு மாணவரொருவரைப் பல்கலைக் கழகத்துடன் தொடர்புபடாத பலர் தாக்கினர் எனக் கூறப்படும் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்தும் மருதனார்மடத்திலுள்ள

21 ஆம் பக்கம் பார்க்க

## விபூஷிகாவும் சந்தேகநபரே

யாழ்ப்பாணம், மார்ச் 25
கிளிநொச்சியில் தருமபுரத்தில் கைது செய்யப்பட்ட 13 வயதான விபூஷிகாவையும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் சந்தேக நபராகவே தமது குற்றப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளனர். அதனால் அவரை விடுவிப்பதற்காக அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
கிளிநொச்சி தருமபுரத்தில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்

21 ஆம் பக்கம் பார்க்க

## பரந்தனில் மீட்கப்பட்ட சடலம் புதைப்பு?

யாழ்ப்பாணம், மார்ச் 25
பரந்தன் ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள பற்றைக்குள்ளிருந்து கடந்த 13 ஆம் திகதி மீட்கப்பட்ட சடலத்தைப் புதைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.
கிளிநொச்சி தருமபுரத்தில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற அன்றையதினம், மாலை

21 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை இராணுவத்தினர் கண்ணியம் மிக்கவர்கள்

### இப்படிச் சொல்கிறார் இராணுவப் பேச்சாளர்



*ருவான் வணிகசூரிய*

கொழும்பு, மார்ச் 25
பிரிட்டனில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் தம் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை தாம் முற்றாக நிராகரிப்பதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.
கடந்தவாரம் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில், இலங்கையில் தமிழ் கைதிகள் இராணுவத்தினரால் தொடர்ந்தும்

21 ஆம் பக்கம் பார்க்க

## முற்றுகைக்குள் முடங்கியது தமிழக ஆளுநர் மாளிகை

சென்னை, மார்ச் 25
இலங்கை அரசு ஈழத் தமிழர்கள் மீது நடத்திய இனப் படுகொலை, மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நா மனித உரிமைகள் சபையில் இந்திய அரசு உடனடியாக தனித் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தி தமிழக ஆளுநர் மாளிகை முன்பாக நேற்று நடத்தப்பட்ட போராட்டத்தால் ஆளுநர் மாளிகையின் வழமையான செயற்பாடுகள் அனைத்தும் முடங்கின.

விரிவான செய்தி 20 ஆம் பக்கத்தில்

## தேடப்படும் கோபியின் சகாவே வட்டுக்கோட்டையில் கைதாம்

### *பொலிஸ் பேச்சாளர் கூறுகின்றார்*

கொழும்பு, மார்ச் 25
வட்டுக்கோட்டையில் நடந்த சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின

21 ஆம் பக்கம் பார்க்க

## தேடப்படுவோர் பட்டியலில் தேவியனும் சேர்க்கப்பட்டார்

### *புலிகளின் முன்னாள் விமானி*

கொழும்பு, மார்ச் 25
தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானியாக இருந்தார் என்று கூறப்படும் தேவியன் என்பவர் தொடர்பான தகவல்களை வழங்

21 ஆம் பக்கம் பார்க்க

## இருநாட்டு மீனவர் பேச்சு மீண்டும் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 25
இலங்கை - தமிழக மீனவர்களிடையேயான இரண்டாம் சுற்றுப் பேச்சு இன்று நடைபெறவிருந்த நிலையில் பேச்சு நிறுத்தப்பட்டுள்ளது என்று கடற்தொழில் நீரியல்வளத் துறை அமைச்சு அறிவித்துள்ளது என்று தெரிவித்துள்ளார் வடபகுதி மீனவர்கள் சார்பாக பேச்சில் கலந்துகொள்ளவுள்ள பிரதிநிதியான ஜஸ்ரின்.
இருநாட்டு மீனவர்களிடையே இரண்டாம் சுற்றுப் பேச்சு கடந்த 13 ஆம் திகதி இடம்பெறவிருந்த நிலையில், திடீரென இன்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில் இன்று நடைபெறவிருந்த பேச்சும் திகதி குறிக்

21 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கு ஆதரவாக ஜெனிவாவில் போராட்டம்




ஜெனிவா, மார்ச் 25
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான சிறப்புத் தீர்மானம் அமெரிக்கத் தரப்பால் கொண்டு வரப்படுவதை எதிர்த்து ஜெனீவா ஐ.நா. முன்றலில் புலம்பெயர்

21 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு முதலமைச்சருக்கு உயர்நீதிமன்றம் நேற்றுத் தடை உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 25
வடக்கு மாகாண முதலமைச்சரினால், மாகாண நிர்வாக நடைமுறைகள் தொடர்பாக விடுக்கப்பட்ட சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு கொழும்பு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவை நேற்றுப் பிறப்பித்துள்ளது.
வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர். விஜயலட்சுமியால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பிலான வழக்கு நேற்றையதினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மேற்படி தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண முதலமைச்சரினால், வடக்கு மாகாண நிர்வாக நடைமுறைகள் தொடர்பான சுற்றறிக்கை ஒன்று

21 ஆம் பக்கம் பார்க்க

## காணொலி உண்மை; அதிலிருப்போர் தமிழ் பெண்களல்ல

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 25

இராணுவத்தில் பயிற்சிபெறும் பெண்களை, ஆண் பயிற்சியாளர்கள் கேலி செய்து - திட்டி, தாக்கி துன்புறுத்துவதாக வெளியான காணொலி உண்மையானதுதான். எனினும் அதில் துன்புறுத்தப்படும் பெண்கள் தமிழ்ப் பெண்கள் அல்ல என்று தெரிவித்துள்ளார் இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய.

இலங்கை இராணுவத்தில் பெண் இராணுவ பயிலுனர்களுக்கு பயிற்சி கொடுக்கும்போது, ஆண் பயிற்சியாளர்கள் அவர்களை கேலி செய்து-திட்டி, தாக்கி துன்புறுத்துவதாக அண்மையில் இணையதளங்களில் காணொலி வெளியாகியிருந்தது. குறித்த காணொலியில் ஆண் இராணுவ பயிற்சியாளர்கள், பயிற்சிபெறும் பெண்களை கேவலமான வார்த்தைகளைப் பாவித்து பேசுவதும், தடியால் அவர் களை அடிப்பதும், அவர்கள் அழும்போதும் மீண்டும் மீண் டும் அடிப்பதும் பதிவாகியுள்ளது.

அந்தக் காணொலி குறித்துக் கருத்துத் தெரிவித்திருந்த இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய,

"குறித்த பயிற்சி பெறும் இராணுவ வீராங்கனைகள் நடத்தப்பட்ட விதம் தொடர்பில், இராணுவ சட்டவிதிகளுக்கு முரணாக நடந்துகொண்ட, இராணுவ பயிற்சியாளர்களுக்கு இராணுவ சட்டத்தின் கீழ் தண்டனை அளிக்கப்படும்.

2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் அனுராதபுரத்தில் பெண் இராணுவ அணியொன்றுக்கு பயிற்சி அளிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட காணொலிக் காட்சியே அது. குறித் காணொலியை எடுத்தவரும் இருக்கிறார். அதில் வருகின்ற இராணுவ வீரர்களும் தாங்கள் தான் என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதன்மூலம் காணொலி உண்மையானது தான் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும், வெளியாகியுள்ள காணொலியில் துன்புறுத்தப்படும் பெண்கள் தமிழ் பெண்கள் அல்ல. தமிழ்ப் பெண்களை சேர்த்துக் கொள்ள முன்னரே இந்தச் சம்பவம் நடந்துள்ளது" - என்று தெரிவித்துள்ளார். (ற-5)

## வீடு புகுந்து தகாது நடக்க முயன்ற பொலிஸார் நேற்றிரவு மடக்கிப்பிடிப்பு

### *மல்லாவி பாலி நகரில் பரபரப்பு*

யாழ்ப்பாணம், மார்ச் 25

மல்லாவி பாலிநகர் பகுதியில் தனித்து வாழ்ந்த பெண் ஒருவரின் வீட்டுக்குள் நுழைந்து தகாத செயலில் ஈடுபட முயன்றார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸார் ஒருவரை மல்லாவிப் பொலிஸார் கைது செய்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொலிஸில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்ய சென்ற சமயம் குறித்த பெண்ணிடம் தொலைபேசி இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றை பெற்றுக் கொண்ட பொலிஸார் அதனடிப்படையில் நேற்றிரவு 10.30மணியளவில் அந்த வீட்டுக்குச் சென்றிருக்கிறார் என்று தெரியவந்தது

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

இரண்டு தினங்களுக்கு முன்னர் குறித்த பெண், பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் முறைப்பாடு ஒன்றை. பதிவு செய்வதற்காக மல்லாவி பொலிஸ் நிலையம் சென்றுள்ளார். அங்கு முறைப்பாட்டைப் பதிவு செய்த பொலிஸார் குறித்த பெண்ணிடம் தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுள்ளனர்.

அத்துடன் மறுநாள் தொலைபேசி ஊடாக அழைப்பை ஏற்படுத்தி தகாத வார்த்தைகளை பிரயோகித்ததாக குறித்த பெண் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் நேற்றிரவு அந்தப் பெண்ணின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார் ஒருவர் தகாத முறையில் நடக்க முற்பட்டபோது அந்தப் பெண்கூக்குரல் இட்டதால் அயலவர்கள் கூடி அவரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். சம்பவ இடத்துக்கு மாந்தை கிழக்கு பிரதேச செயலர், பாலிநகர் கிராமசேவகர் ஆகியோரும் சென்று நிலைமைகளை அவதானித்துள்ளனர்.

அத்துடன் இராணுவத்தினரும் பொலிஸாரும் அங்கு வந்து நிலைமையை சமாளிக்க முற்பட்டதாகவும் எனினும் ஊர் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் பொலிஸ் நிலையத்தில் நேற்றிரவு முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டதாகவும் உறுதிப்படுத்த முடிந்தது.

இந்தச் சம்பவம் குறித்தும் அதில் பொலிஸ் அதிகாரி சம்பந்தப்பட்டாரா என்பது குறித்தும் உறுதிப்படுத்துவதற்கு மல்லாவி பொலிஸ் நிலையத்துடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டபோது தமிழ் தெரியாது எனவும் சிங்களத்தில் பேசுமாறும் கோரப்பட்டது. அதே வேளை, ஆங்கிலத்திலும் அவர்கள் பதில் அளிக்கவில்லை. (ஐ)

# இனப்படுகொலை என்பதை ஏற்று ஐ.நாவில் தீர்மானம் நிறைவேற்றுக

### சர்வதேச நாடுகளை வலியுறுத்துகிறது மே பதினேழு இயக்கம்

சென்னை, மார்ச் 25

இலங்கையில் நடத்தப்பட்டது இனப்படுகொலைதான் என்பதை ஏற்று, அதனைத் தீர்மானமாக ஐ.நா.சபையில் நிறைவேற்றுவதற்கு சர்வதேச நாடுகள் முன்வரவேண்டும் என்று மே பதினேழு இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ் அமைப்புகள், சர்வதேச சட்டத்தரணிகள், இராஜதந்திரிகளின் உதவியோடு ஈழத் தமிழர்களின் கோரிக்கைகளை உள்ளடக்கி தீர்மானம் ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. அந்தத் தீர்மானம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது மே பதினேழு இயக்கம்.

நேற்றுமுன்தினம் சென்னையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த மே பதினேழு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்களான திருமுருகன் மற்றும் உமர் ஆகியோர்,

"இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வில் கடந்த 3 ஆண்டுகளாக அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்துள்ளது. ஆனால் அதில் ஈழத்தமிழர்களுக்கு எந்தத் தீர்வும் இல்லை.

தற்போது பல்வேறு தமிழ் அமைப்புகள் இணைந்து சர்வதேச சட்டவாளர்கள், இராஜதந்திரிகள் உதவியோடு ஈழத் தமிழர்களின் கோரிக்கைகளை வைத்து ஒரு தீர்மானத்தை வடிவமைத்துள்ளனர். இதற்கு தமிழகத் தில் 18 தமிழ் அமைப்புகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்தத் தீர்மானத்தை ஐ.நா.வில் நிறைவேற்ற வேண்டும். இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை பதிவு செய்ய வேண்டும். அங்கு தொடர்ந்து நடக்கும் இராணுவ அடக்குமுறைகளை நிறுத்த வேண்டும், பெண்களுக்கு கருத்தடை செய்வதை நிறுத்த வேண்டும் என்பன உட்பட பல்வேறு அம்சங்களைக் கொண்டதாக இந்தத் தீர்மானம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தை ஐ.நா.விடம் நேரடியாக கொடுக்க முடியாது. ஐ.நாவில் உள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் மூலம் சர்வ தேச நாடுகளிடம் கொடுத்து வலியுறுத்த உள்ளோம். அதன் அடிப்படையில் இலங்கைக்கு எதிராக வலுவான தீர்மானத்தைக் கொண்டுவர முடியும்" - என்று தெரிவித்துள்ளனர். (ற-5)

## எதற்கும் சுதந்திரம்இல்லை

ருக்ஷி பெர்னாண்டோ

கொழும்பு, மார்ச் 25

பொய்யான குற்றச்சாட்டுக்களிடமிருந்தும், பொய்களிடமிருந்தும் என்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் இங்கு சுதந்திரமில்லை என்று தெரிவித்துள்ளார் அண்மையில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட ருக்ஷி வெர்னாண்டோ.

பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் கடந்த 16 ஆம் திகதி கிளிநொச்சியில் வைத்து, மனித உரிமை செயற்பாட்டாளர்களான அருட்தந்தை பிரவீன் மற்றும் ருக்ஷி பெர்னாண்டோ ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களது கைதுக்கு சர்வதேச ரீதியில் எழுந்த கடும் அழுத்தம் காரணமாக மூன்று தினங்களில் இலங்கை அரசு அவர்களை விடுவித்திருந்தது.

> **"16 ஆம் திகதி கிளிநொச்சியில் வைத்து, மனித உரிமை செயற்பாட்டாளர்களான அருட்தந்தை பிரவீன் மற்றும் ருக்ஷி பெர்னாண்டோ ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்தனர்.**

அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ள போதும், அவர்கள் ஊடகங்களுடன் பேசுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்களது கடவுச்சீட்டுக்கள் (பாஸ் போர்ட்) பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.


இந்த நிலையில் கடந்த 22 ஆம்திகதி, ருக்ஷி வெர்னாண்டோ தனது முகநூலில் பின்வருமாறு பதிவிட்டுள்ளார்.

"விடுவிக்கப்பட்டுள்ளேன். பயத்திலிருந்து விடுவிக்கப்படவில்லை. பயணம் செய்வதற்கு சுதந்திரமில்லை. பேசுவதற்கு சுதந்திரமில்லை. பொய்யான குற்றச்சாட்டுக்களுக்கும், பொய்களிடமிருந்தும் என்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் சுதந்திரமில்லை" என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

## திருட்டுச் சந்தேகத்தில் மூவர் கைது

மல்லாகம் சந்தியில் கைத் தொலைபேசி கடை ஒன்றில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம் பெற்ற திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவரை தாம் கைது செய்துள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைத் தொலைபேசிகள் சிலவற்றை யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்ய முற்பட்ட வேளை நேற்று இந்த மூவரும் கைது செய்யப்பட்டதுடன் தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன. (ஐ-86)



இந்தோனேசியாவின் போர்க் கப்பலொன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்தும் வகையிலேயே இந்தப் போர்க்கப்பல் இலங்கை வந்துள்ளது என்று இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது. குறித்த கப்பல் எதிர்வரும் 25ஆம் திகதி வரை இலங்கை கடற்பரப்பில் நங்கூரமிட்டிருக்கும். 90 மீற்றர் நீளமுடைய இந்தப் போர்க் கப்பலில் கடற்படை வீரர்கள், பணியாளர்கள் உட்பட 100 பேர் இலங்கையை வந்தடைந்துள்ளனர். (ற)

# சட்டத்துக்கு மேலானவர் எவரும் இல்லை; மீறுவோர் கைதாவர்

### பாதுகாப்பு அமைச்சு கூறுகின்றது

கொழும்பு, மார்ச் 14

எவரும் சட்டத்துக்கு மேலானவர்கள் அல்லர். எவராவது சட்டத்தை மீறினால் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் அவரைக் கைது செய்யவும் புலனாய்வை மேற்கொள்ளவும் உரித்துடையவர்களாவர் - இவ்வாறு தெரிவித்துள்ளது பாதுகாப்பு அமைச்சு. இதுதொடர்பாக அந்த அமைச்சு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ருக்ஷி பெர்னாண்டோ மற்றும் அருட்தந்தை பிரவீன் ஆகியோர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமை குறித்துப் பரந்த பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. அவர்கள் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் என்பதால் உடனடியாக விடுவிக்கும்படியும் கோரப்பட்டது என்றும் அந்த அறிக்கையில் பாதுகாப்பு அமைச்சு சுட்டிகாட்டியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

இங்கு தெளிவாகச் சுட்டிகாட்டப்படவேண்டியது என்னவென்றால் இலங்கை ஒரு ஜனநாயக நாடு, நாட்டை ஆள்வதற்குச் சட்டங்கள் உள்ளன, இலங்கையில் வாழும் அனைவருக்கும் அந்தச் சட்டங்கள் பொருந்தும் என்பதுதான். ஒருவர் இலங்கையில் வாழ்வாராயின், அவர் இலங்கைப் பிரஜையாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவர் இலங்கையின் சட்டங்களுக்கு உட்பட்டவரே. நாட்டின் சட்டத்தை ஒருவர் மீறுவாரேயானால் அவர் இலங்கை நாட்டுக்கு எதிரான கிரிமினல் குற்றம் இழைத்தவராகவே கருதப்படுவார்.

நாட்டின் சட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு கடப்பாடுடையது. சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது, சட்டத்தை மீறிய ஒருவரை, கைது செய்து புலனாய்வைத் தொடர்வதற்கு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிக்கு உரித்துண்டு. தங்களை வெறுமனே 'மனித உரிமைகள் செயற்பாட்டாளர்' என்று கூறிக்கொண்டு அதற்காகத் தங்களை விடுவிக்க வேண்டும் என்று யாரும் கோரவோ, அதற்காகப் பிரசாரம் செய்யவோ உரித்துக் கிடையாது.

அவர்களை ஏதேனும் கிரிமினல் செயற்பாடுகளுடன் தொடர்புபடுத்தும் சாட்சியங்கள் கிடைக்குமானால், உள்ள சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உரிமை உண்டு. மேற்படி விடுதலைக்காகக் கோருபவர்கள், இலங்கை முப்பது வருடங்களாக நீடித்த பயங்கரவாத நடவடிக்கைகளில் இருந்து இப்போதுதான் மீண்டு கொண்டிருக்கின்றது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த முப்பது வருட காலமும் புலிகளின் பயங்கரவாதத்துக்கு சிவிலியன்கள் மற்றும் சிவில் நிறுவனங்களின் உதவி, ஒத்தாசை கிட்டியே வந்துள்ளது. நிறுவனங்கள் மற்றும் அவர்களின் ஊழியர்கள், ஆயுதங்கள், வெடிமருந்துகள், நிதி, பிரசார ஆவணங்கள் போன்றவற்றை எடுத்துச் சென்று கொடுத்து வந்திருக்கின்றார்கள் என்பதைத் தொடர்படுத்தும் சாட்சியங்கள் தாராளமாகவே உள்ளன.

மனித உரிமைகள் நிறுவனங்களும் இதனுடன் தொடர்புபட்டிருக்கின்றன. இந்த நிறுவனங்களின் அங்கத்தவர்களும் முன்னர் கைது கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே ஆள்களைக் கைது செய்து விசாரிப்பது நாட்டினதும் அங்கு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் தரப்பினரதும் உரிமை. எனவே அவர்களை விடுவிக்கக் கோரி சர்வதேச மட்டத்தில் பூசிமெழுகப்படும் பிரசாரத்தினால் அந்த யதார்த்தத்தை புறந்தள்ளிவிடமுடியாது. மேற்படி இரு செயற்பாட்டாளர்களும் கைது செய்யப்பட்டதும் அவர்களை விடுவிக்கும்படி சர்வதேச சமூகத்திடமிருந்தும் மனித உரிமைகள் குழுக்களிடமிருந்து பலத்த கூச்சல் எழுந்தது. இறுதியில் பெர்னாண்டோவும் அருட்தந்தை பிரவீனும் விடு விக்கப்பட்டனர். எனினும் தங்கள் கைது தொடர்பாக ஊடகங்களுடன் பேசுவதற்கு அவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)


கலை நிகழ்வில் ஈடுபட்டுள்ள பெண்கள்

## நல்லூர் பிரதேச செயலகம் நடத்திய மகளிர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 25
நல்லூர் பிரதேச செயலகமும் கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசமும் இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நேற்று திங்கட்கிழமை நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் உதவி பிரதேச செயலர் திருமதி சுபாசினி மதியழகன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் ஜெய்ப்பூர் நிறுவனத் தலைவர் வைத்தியகலாநிதி திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மங்கல விளக்கேற்றி நிகழ்வைஆரம்பித்துவைத்தார்.
இந்த நிகழ்வில்பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன், வட மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் கே.கே.பெலிசியன், யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதிஎன்.ஏ.ஜெயராஜன், மாவட்டச் செயலக மகளிர் அபிவிருத்தி இணைப்பாளர் செல்வி உதயனிதவரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டுசிறப்புரையாற்றினர். நல்லூர் பிரதேச மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்களது கலை நிகழ்வுகள், பரிசில் வழங்கல், சிறந்த சங்க அங்கத்தவர்களுக்கான கௌரவிப்பு என்பனவும் இடம்பெற்றன. (வ-7)

## இந்தியா கட்டிக் கொடுத்த வீடுகளில் குடியமராதோர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 25
இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளில் உரிய பயனாளிகள் குடியமரா விடின் வீட்டுத்திட்டத்துக் கென வழங்கப்பட்ட நிதி உதவிகளை சம்பந்தப்பட்டவர்களிடமி ருந்து மீள அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். செயலகம் அறி வித்துள்ளது.
குறித்த வீட்டுத்திட்டத்தின் கீழ் கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளில் உரிய பயனாளிகள் குடியிருக்கின்றனரா? இல்லையா? என்ற விவரங்களைச் சேகரிப்பது தொடர்பாக கிராம அலுவலர்களிடம் யாழ்.செயலகம் விவரங்களைக் கோரியுள்ளது. (வ-7)



இயேசு ஜீவிக்கிறார் சர்வதேச ஊழியத்தின்
வெற்றிகரமான 36ஆவது சுவிசேஷ மாநாடு!
மார்ச் மாதம் 28ஆம் 29ஆம் 30ஆம் திகதிகளில்
தினமும் மாலை 5.00 மணிக்கு
நகரசபை மைதானம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.
(துரையப்பா மைதானம் அருகில்)
பிரியமானவர்களே !
அண்டசராசரத்தை ஆளுகை செய்யும் ஆண்டவர் ஒருவர் இருக்கிறார். அவருடைய வல்லமையை அளவிட முடியாது. அவரே தொடக்கமும் முடிவுமானவர். ஜீவியத்தில் நோய், துன்பம், கண்ணீர், சஞ்சலம், தோஷங்களிலிருந்தும், விடமுடியாத பழக்கவழக்கம், பாவ வாழ்க்கை, பொல்லாத ஆவிகளின் செய்வினை கட்டுகள், மாந்திரீகம், பில்லிசூனியத்திலிருந்தும் விடுதலை பெற இதோ ஓர் அரிய சந்தர்ப்பம் உங்களை நோக்கி வருகிறது. இச் சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள். இன்றே அற்புதத்தின் நாள். ஆசீர்வாதத்தின் நாள். உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தெய்வீக சுகத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள வாருங்கள்!
உங்களுக்காக பிரார்த்தனை செய்பவர்கள்,
கலாநிதி. M.R. இராஜேந்திரம் அவர்கள். C.V. இராஜேந்திரம் அவர்கள்.
36ஆவது வருட வேதாகம கருத்தரங்கு!
2014 மார்ச் 23 முதல் 30 வரை தினமும் காலை 8.00 - 2.00 வரை
நடைபெறும் இடம்:- A.O.G சபை மண்டபம், (C/12655)
68/2, ராசாவின் தோட்டம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். பிரவேசம் இலவசம்
For Information :- Jesus Lives Evangelical International Ministry
T.P. 2522608, Fax- 2525695, Web- Jesuslivesl k.com

# கருத்தடை செய்த தாய் உயிரிழப்பு; அறிக்கைக்கு காலஅவகாசம் வேண்டும்

## நீதிமன்றில் கோரியது பொலிஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 25
கிளிநொச்சியில் கட்டாயக் கருத்தடை செய்யப்பட்ட குடும்பப் பெண் உயிரிழந்தமை தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அது தொடர்பான உரிய மரண விசாரணை அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்க பொலிஸார் காலஅவகாசம் கோரினர். அதனையடுத்து அந்த வழக்கு எதிர்வரும் மே மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.
கிளிநொச்சி மலையாளபுரத்தைச் சேர்ந்த சதீஸ்குமார் மஞ்சுளா (வயது- 26) என்ற இரண்டு வயதுப் பிள்ளையின் தாயாரே கடந்த டிசம்பர் 12 ஆம் திகதி இவ்வாறு உயிரிழந்தார். யாழ். நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.
அது தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அவரது இறப்பு தொடர்பில் பொலிஸார் உரிய விசாரணை மேற்கொள்ளவில்லை என்று பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையான மனித உரிமைகள் இல்ல சட்டத்தரணி க.சுகாஷ் நீதிமன்றில் தெரிவித்தார். அதன் காரணமாக இந்த வழக்கின் தன்மையை மாற்றியமைக்க அல்லது திசைதிருப்புவதற்கான வாய்ப்புள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.
அது தொடர்பில் நீதிமன்று பொலிஸாரிடம் கேள்வியெழுப்பியது. அதன்போதே அது தொடர்பில் உரிய விசாரணையைச் சமர்ப்பிக்க தமக்கு மேலதிகமாக கால அவகாசம் தேவை என்று பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். அதனையடுத்தே வழக்கு எதிர்வரும் மே மாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.
கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் 50 பெண்களுக்கு கட்டாயக் கருத்தடை மேற்கொள்ளப்பட்டது. அதன்போதே குறித்த பெண்ணும் தனது கணவனுக்குத் தெரியாமல் மருத்துவ மாதுவின் நெருக்குதல் காரணமாகக் கடந்த செப்ரெம்பர் 7 ஆம் திகதி கருத்தடை செய்து கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு அவர் கருத்தடை செய்யும் போது அவரது வயிற்றில் கரு இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.
அதன்பின்னர் அவர் வயிற்று வலி காரணமாகக் கடந்த நவம்பர் 8 ஆம் திகதி கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் சென்று கருத்தடையை நீக்கியுள்ளார். எனினும் அவர் தொடர்ந்து வலியினால் அவதிப்பட்டுள்ளார். இந்நிலையில் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட அவர் கடந்த நவம்பர் 23 ஆம் திகதி கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மறுநாள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். பின்னர் தீவிரசிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட போதும் அது பயனளிக்காது கடந்த நவம்பர் 28 ஆம் திகதி உயிரிழந்தார். (ற)

# மாகாணசபைத் தேர்தலில் மனோவை ஆதரியுங்கள்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தன் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 25
தமிழ் மக்களுக்குக்காக, பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும் குரல் கொடுத்து வருகிறது ஜனநாயக மக்கள் முன்னணி கட்சி. எனவே நடைபெறவுள்ள மேல் மாகாண சபைத் தேர்தலில் அந்தக் கட்சியை தலைநகரில் வாழும் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் க.விந்தன் கோரியுள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
ஜனநாயக மக்கள் முன்னணி, கடந்த ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக நாட்டில் அடக்கப்பட்டு - ஒடுக்கப்படும் சமூகத்திற்காக குரல் கொடுத்து வருகிறது.
வடக்கு, கிழக்கிலும், தலைநகரிலும் பேரினவாத அரசுகளாலும், அரச ஆதரவுக் குழுக்களாலும், இனவாதக் குழுக்களாலும், படையினராலும் மேற்கொள்ளப்படும் அத்து மீறல்களுக்கு எதிராகவும் அரச பயங்கரவாதத்தால் மேற்கொள்ளப்படும் மனிதாபிமான, மனித நேய மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நீதி கோரியும், அரசியல் உரிமை கோரியும் பல்வேறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் தீவிரமாக முன்னெடுத்தும் வருபவர்கள் ஜனநாயக மக்கள் முன்னணியினர்.
எமது பிரச்சினைகளை சர்வதேசம் வரை எடுத்துச் சென்ற பங்கு ஜனநாயக மக்கள் முன்னணியினருக்கும் உண்டு.
இந்தக் கட்சிக்கு எதிர்வரும் மேல் மாகாணசபைத் தேர்தலில் ஆதரவு கொடுப்பது தமிழர்களாகிய எமது தார்மீக பொறுப்பும் கடமையுமாகும். வடக்கு, கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்து கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தங்களை வாக்காளர்களாக பதிவு செய்துள்ள தமிழ்பேசும் மக்கள் கட்டாயமாக ஜனநாயக மக்கள் முன்னணியின் ஏணிச் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்.
இது தான் தற்பொழுது வட - கிழக்கிலும் புலத்திலும் வாழும் தமிழர்களின் விருப்பமும் கூட. மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இது தொடர்பில் சரியானதொரு முடிவை விரைவில் எடுக்க வேண்டும் என்று, அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# பெயர் குறிப்பிட்டு கட்சி ஒன்றுக்கு கூட்டமைப்பு ஆதரவளிக்கக் கூடாது

## இப்படிக் கோருகிறார் சங்கரி

யாழ்ப்பாணம், மார்ச் 25
மலையகம் மற்றும் கொழும்பு பகுதிகளில் வேற்றுமையை வளர்க்காது மக்கள் முன்பு வாக்களித்ததுபோல தமக்கு விருப்பமானவர்களைத் தேர்ந்தெடுக்க ஜனநாயக முறைப்படி விட்டுவிடுவது நல்லது. அதை விடுத்து ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு மாத்திரம் ஆதரவு கோருவது எதிர்காலத்தில் கூட்டமைப்பின் நடவடிக்கைகளைக் கடுமையாகப் பாதிக்கும் என்று எச்சரித்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந் தசங்கரி, ஜனாதிபதித் தேர்த லின்போது விட்ட தவறை மீள வும் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
தந்தை செல்வா மலையக மக்களின் பிரச்சனைகளை முன் வைத்தே தமிழரசுக் கட் சியை உருவாக்கினார். அவர் களுக்குள் வேற்றுமை களையப் பட்டு ஒற்றுமை நிலை நாட்டப்பட வேண்டும் என்று தந்தை செல்வா விரும்பியிருந்தார். அதைவிடுத்து இன்று பல கட்சிகளாக பிரிந்து செயற் படும் - இந்திய வம்சாவளி மக்கள் மத்தியிலுள்ள கட்சிகளை மேலும் பிரிவடையச் செய்ய - ஒரு கட்சியினரை மட்டும் ஆதரிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிலர் கூறி வரும் கருத்துக்கள் வேதனையளிக்கிறது.
தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் இத்தகைய தீர்மானம் எதுவும் அனைத்துப் பிரதிநிதி களும் கூடி எடுக்கவில்லை. அடிப்படை உரிமைகளை முழுமையாக அனுபவிக்காத அந்த மக்கள் மத்தியில் ஒரு பகுதியினரை மட்டும் ஆதரிப் பதானது எமது மறைந்த தலைவர்களை அவமானப்படுத்துவது மட்டுமல்ல, அந்த தலைவர்களுக்கும் - அந்த மக்களுக் கும் செய்யும் துரோகமாகவே நான் எண்ணுகிறேன்.
வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் குறிப்பாக மலையகம் மற்றும் கொழும்பு பகுதிகளில் வேற்றுமையை வளர்க்காது மக்கள் முன்பு வாக்களித்தது போல தமக்கு விருப்பமானவர்களைத் தேர்ந்தெடுக்க ஜனநாயக முறைப்படி விட்டுவிடுவது நல்லது. இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைபு உறுப்பினர்கள் கவனம் செலுத்த வேண்டும் - என்றுள்ளது. (ஐ-5)

**ஜோதிடர் யாழ் வருகை**

திருநெல்வேலி சந்தி கொமர்ஷல் வங்கி அருகில் இந்தியாவின் பிரபல ஜோதிடர் C.M. சாமி (B.B.A, B.A) ஜாதக விளக்கங்களுடன் மலையாள மாந்திரீக முறைப்படி பிரச்சினைகளுக்கு தீர்வு காண

தொடர்பு : 077 7684406

## தகைமைகாண் பரீட்சைத் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25

வடமாகாண அரச திணைக்கள அலுவலகங்களில் இலங்கை தொழில் நுட்பவியல் சேவையில் சிவில் அல்லது படவரைஞர் தரங்களுக்கு ஆள்சேர்ப்பு செய்யப்பட்டவர்களை இலங்கை தொழில்நுட்பவியல் சேவை யின் சிவில் அல்லது படவரைஞர் வகுப்புII பிரிவு "ஆ" பதவிகளுக்கு நியமனம் வழங்குவதற்கான தகைமை காண் பரீட் சைக்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கான முடிவு திகதி கடந்த 11 ஆம் திகதி வரை என்று அறிவிக்கப்பட்டிருந்ததாகவும், அது தற்போது ஏப்ரல் 10 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் வடமாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் க.தெய்வேந்திரம் சம்பந்தப்பட்ட திணைக் களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார். (வ-9)

## மனித உரிமைகள் நிலை இலங்கையில் மோசம்

சமந்தா பவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 25

இலங்கையின் மனித உரிமைகள் நிலை தொடர்ந்தும் மோசமடைந்து வருகின்றது என்று தெரிவித்துள்ளார் ஐ.நாவுக்கான அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதி சமந்தா பவர்.

அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள குறிப்பொன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

"இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச் சாட்டுக்களை விசாரிக்கும் இலங்கைக் குடிமக்கள் கைது செய்யப் பட்டும், துன்புறுத்தப் பட்டும் வருகின்றனர். அங்கு மனித உரிமைகளின் நிலை தொடர்ந்தும் மோசமடைந்து வருகிறது. ஐ.நா மனித உரிமைகள் சபைத் தீர்மானத்துக்கு அனைவரும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்"- என்று குறிப்பிட்டுள்ளார். (ற)

**மஹோற்சவ கால தற்காலிக கடைக்கான நிலம் வழங்கல்**

29.03.2014 சனிக்கிழமை ஆரம்பமாகும் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டுத் தற்காலிக கடை அமைப்பதற்கான நிலம் நாளை (26.03.2014) புதன்கிழமை பி.ப 2 மணிக்கு வழங்க உள்ளதால் நிலம் பெறவிரும்புபவர்கள் ஆலய முன்றலில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், சண்டிலிப்பாய். (46030) (10) தம்பையா பரம்சோதி ஆதீன கர்த்தா.

## மரண அறிவித்தல்

### செல்வி றஜினாவதி மார்க்கண்டு (மானிப்பாய்)



சோதிவேம்படி வீதி மானிப்பாயைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மார்க்கண்டு றஜினாவதி நேற்று திங்கட்கிழமை (24.03.2014) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு -மகிழ்மலர் தம்பதியரின் அருமைப்புதல்வியும் சிவம், ஜெயம் (மெக்கானிக்), றஞ்சன் (மெக்கானிக்), சசி, கிருஷ்ணா, ஜமுனா, கெங்கா ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர்

சோதி வேம்படி வீதி, மானிப்பாய்.

## யாழ்.மாநகர சபை மாதாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்.மாநகரசபையின் மூன்றாவது மாதாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (ஒ)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111


**விற்பனைக்கு**

1) அவித்த கோதுமை மா - 110/=
2) ஆட்டா மா - 110/=

என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் கலப்படம் இல்லாமல் உடனுக்கு உடன் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு : பிருந்தா மில்ஸ்
No. 18, நக்கா றோட், யாழ்ப்பாணம்.
T.P : 077 9912304

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் நினைவு மலர் வெளியீடும்



### அமரர் நா. கந்தையா

(ஓய்வு பெற்ற அதிபர்)

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவுமலர் வெளியீடும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் இன்று (25.03.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணிக்கு யா/கைதடி கலைவாணி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது.

இந்த நிகழ்வுக்கு உறவினர்கள், நண்பர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு, கைதடி

குடும்பத்தினர்.


## நினைவலைகள்

5 ஆம் ஆண்டு



சோதிலிங்கம் பஞ்சலிங்கம்

3 ஆம் ஆண்டு




சோதிலிங்கம் இலட்சுமி காந்தன் BA.JP
(ஆசிரியர் அகில இலங்கை சமாதான நீதிவான் மண்டைதீவு)

கல்வி என்னும் சாலையில் ஆசிரியனாக
மாணவர்க்கு கலங்கரை விளக்கமாக
சேவையில் சமாதான நீதிவானாக
தாய்க்கு தலை மகனாக
தம்பியர்க்கு பாசமிகு அண்ணனாக
தரணியில் உயர்ந்தவரே யாம் மறவோம் என்றும்

கருவேலடி லேன். கொக்குவில்

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## சரவணமுத்து இராமநாதன் (கந்தசாமி)

( ஓய்வு பெற்ற பிரதம லிகிதர் - பொலிஸ் அலுவலகம்)

வேலணை கிழக்கு மணியகாரன் வீட்டடியைப் பிறப்பிடமாகவும், அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக இலக்கம் 130, ராசாவின் தோட்டம் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து இராமநாதன் (கந்தசாமி) நேற்று (24.03.2014) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலாயன்பென்சனியர் சரவணமுத்து - நாகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும் மண்டைதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதர் - சொர்ணம்மா தம்பதியரின் மருமகனும் செல்வலக்சுமியின் அன்புக்கணவரும் மனோரஞ்சிதம் (தங்கம்) இன் தந்தையும் காலஞ்சென்றவர்களான காசிலிங்கம், சாவித்திரிதேவி மற்றும் சுப்பிரமணியம் (ஓ.பெ. கூட்டுறவு பரிசோதகர் கொழும்பு) காலஞ்சென்றவர்களான லக்ஸ்மிஅம்மா (ஆச்சி), மகாலிங்கசிவம் (சிவம்) மற்றும் இரட்னேஸ்வரி (ஓ.பெ. ஆசிரியை் திருகோணமலை), நல்லநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற கோபாலபிள்ளை மற்றும் சரஸ்வதி (கொழும்பு ஓ.பெ. ஆசிரியை) காலஞ்சென்றவர்களான நடராஜா (ஓய்வு பெற்ற லிகிதர்), நவமணி (கொழும்பு), Dr. ராமச்சந்திரன் (திருகோணமலை) காலஞ்சென்றவர்களான நடேசானந்தன் கந்தையா (சிறாப்பர் வேலணை), இரத்தினசபாபதி ( முன்னாள் உப தபாலதிபர் J.P அல்லைப்பிட்டி), இராசம்மா (பிரான்ஸ்), புவனேஸ்வரி (பிரான்ஸ்) காலஞ்சென்ற சுயம்புலிங்கம், மங்கையற்கரசி (அல்லைப்பிட்டி), திருநாவுக்கரசு (மண்டைதீவு), ஆகியோரின் மைத்துனரும் காலஞ் சென்றவர் களான பரமேஸ்வரி, சிவயோகலக்சுமி, வேலாயுதபிள்ளை மற்றும் சிவரட்ணம் (பிரான்ஸ்), ஜெயசிறி (கனடா), நடேசபிள்ளை (அல்லைப்பிட்டி), பராசக்தி (மண்டைதீவு) ஆகியோரின் சகலனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.03.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வலக்சுமி (மனைவி), செ. நடேசபிள்ளை ( சகலன் - அல்லைப்பிட்டி),
இராமச்சந்திரன் (மைத்துனர் - திருகோணமலை), திருநாவுக்கரசு (மண்டைதீவு),
தொ.பே. 021 2225921

## நாற்பது பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

முல்லைத்தீவு, மார்ச் 25
முல்லைத்தீவு மாவட்ட குடும்ப புனர்வாழ்வு சேவைகள் நிறுவனத்தில் உளவளத் துணை சேவையைப் பெற்ற 40 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.
நிறுவன வடபிராந்திய இணைப்பாளர் வி.பிரேம்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உதவிப்பொருள்களை பயனாளிகளுக்கு வழங்கினார். (வ-9)



யாழ்.பொலிஸ் நிலையத்தை அது முன்னர் இயங்கிய இடத்தில் விரைவில் ஆரம்பிக்கும் முகமாக பண்ணை கடற்கரை வீதியில் துரையப்பா விளையாட்டு மைதானத்துக்கு முன்பாகப் புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் முனைப்புடன் நடைபெற்று வருகின்றன. (ஒ-135)

# கடும் வறட்சியில் ஊர்காவற்றுறை

### நீரை விரயம் செய்யாதீர்; பிரதேச செயலர் அறிவுரை

யாழ்ப்பாணம், மார்ச் 25
ஊர்காவற்றுறைப் பிரதேசம் தற்போது பெரிய அளவில் நீர்ப் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளது.
இதனால் மக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்வதாக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன்யோகநாயகம் தெரிவித்தார்.
சர்வதேச நீர்தின நிகழ்வு, ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலரது தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது.
இதில் தலைமையுரை ஆற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறுகை யில்; வறட்சியான காலநிலையின் போது தீவக மக்கள் தமக்குத் தேவையான நீரைப் பெறமுடியாது பெரிய நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். கால்நடைகள் கூடப் பரிதவிப்புக்கு உள்ளாகின்றன.
எனவே நீரின் முக்கியத்துவம் உணரப்பட்டுப் பொதுமக்கள் அதனைவீண் விரயம்செய் யாது பாதுகாக்க முன்வரவேண்டும்.
ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் முக்கியமான பிரச்சினையாகவுள்ள நீர்ப் பற்றாக்குறைக்கு நிரந்தரத் தீர்வு காண சமூக ஆர்வலர்கள் ஒருங்கிணைந்து செயற்படவேண்டும்.
பருவ மழையின்போது நீரைச் சேமிப்பதற்கான முயற்சிகளில் மக்கள் கவனம் செலுத்துவது அவசியம் - என்றார். (வ-7)




*சிறார்களுக்கும் முன்பள்ளிகளுக்கும் கழகத் தலைவர் த. இரவீந்திரன், செயலாளர் அ.கந்தையா ஆகியோர் பொருள்களை வழங்குகின்றனர். அருகில் மருத்துவர், முன்பள்ளி ஆசிரியைகள் ஆகியோர் காணப்படுகின்றனர்.*

## முன்பள்ளிச் சிறார்களுக்கான வாய்ச் சுகாதார நிகழ்வு

தென்மராட்சி, மார்ச் 25
கொடிகாமம் பிரதேச மருத்துவமனையின் ஏற்பாட்டில் தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழக அனுசரணையுடன் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகளில் பயிலும் சிறார்களுக்கான வாய் சுகாதாரதினநிகழ்வு கச்சாய், அன்னை திரேசா முன்பள்ளியில் அண்மையில் நடைபெற்றது.
பிரதேச மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மருத்துவர் திருமதி எஸ்.பிரேமலதா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த 23 முன்பள்ளிகளைச் சேர்ந்த 510 சிறார்கள் கலந்துகொண்டனர்.
இந்த நிகழ்வில் தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தால் சிறார்களுக்கு சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பற்பசைகளும் பற்தூரிகைகளும், கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (வ-9)

## யாழ். போதனா மருத்துவமனைக்கு செவிப்புலன் கருவிகள் அன்பளிப்பு

### வெள்ளவத்தை லயன்ஸ் கழகத்தினரால்

தென்மராட்சி, மார்ச் 25
யாழ்.மாவட்டத்தில் செவிப்புலன் குறைவானவர்கள் பயன்படுத்தும் 275 கருவிகள் வெள்ளவத்தை லயன்ஸ் கழகத்தினரால் யாழ்.போதனா மருத்துவமனை தொண்டை, காது, மூக்கு மருத்துவ நிபுணரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.
தலா 40 ஆயிரம் ரூபா பெறுமதியான குறித்த கருவிகளின் தேவையுடைய தென்மராட்சி பிரதேச மக்கள், அது தொடர்பாக சாவகச்சேரி லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் இ.ஜெயபாலுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை யாழ்.போதனா மருத்துவமனை பிரசவ விடுதியில் பிரசவ காலத்துக்கு முன்னர் பிறக்கும் (குறை மாதம்) பிள்ளைகளின் பராமரிப்புக்கான பல மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்களும் கருவிகளும் சர்வதேச லயன்ஸ் கழகத்தால் வழங்கப்படவுள்ளன.
சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1, மாவட்டத்தினரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து, இதற்கான கருவிகளையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்ய நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ தெரிவித்தார். (வ-9)

## மோ.சைக்கிள் மோதியதில் பெண் காயம்

தென்மராட்சி, மார்ச் 25
ஏ-9 வீதியின் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்துக்குச் செலுத்திச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் மீது எதிரே வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் பெண்ணொருவர் காயமடைந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பி.பி.3.30 மணியளவில் மீசாலை புத்தூர் சந்தியில் இடம்பெற்றது. கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டியைச் சேர்ந்த அருள்நாயகம் சறோஜா தேவி (வயது-53) என்பவரே காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதேவேளை கொடிகாமம் கோயிலாமனையைச் சேர்ந்த தங்கவடிவேல் திலகராணி (வயது-34) என்பவர் பாம்பால் கடியுண்டார். (வ-9)

## மீண்டும் புனரமைக்கப்படும் நெடுந்தீவு வெல்லை வீதி

யாழ்ப்பாணம், மார்ச் 25
நெடுந்தீவு வெல்லை வீதி, மீண்டும் உரிய முறையில் திருத்த வேலைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.
ஏற்கனவே குறித்த வீதி திருத்தியமைக்கப்பட்ட போதிலும் அது உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் மக்களால் தெரிவிக்கப்பட்டன.
அதை அடுத்து வீதி அபிவிருத்தித் திணைக்களம் குறித்த வீதியில் மீண்டும் திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.
வீதித் திருத்தத்துக்கென உவர் மண்ணைக் கொட்டிப் பரவியமை தொடர்பாக மக்கள் விசனம் தெரிவித்திருந்தனர்.
அதைத் தொடர்ந்து மீள் திருத்தம் இடம்பெறுகின்றது.
இதேவேளை கிழக்கு முருகன் ஆலடியில் இருந்து ஆலமாவனப்பிள்ளையார் கோயில் வரையான வீதித் திருத்தமும், தகுந்த முறையில் இடம்பெறவில்லை.
குறித்த வீதியில் உவர் மணல் பரவப்பட்டுள்ளது. இதனால் தற்போது வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் உள்ள இந்த வீதியால் மழை காலத்தில் சைக்கிளில் கூடச் செல்ல முடியாத நிலை ஏற்படும் என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (வ-7)



*கோப்புப்படம்*

**குறித்த வீதி திருத்தியமைக்கப்பட்ட போதிலும் அது உரிய முறையில் மேற்கொள்ளப் படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் மக்களால் தெரி விக்கப்பட்டன.**

## கடனாளியிடம் பணம் கேட்டால் சி.ஐ.டி.என்று மிரட்டுகிறாராம்

### மட்டுவில் வாசியின் புதிய தந்திரம்

யாழ்ப்பாணம், மார்ச் 25
கைமாற்றாகக் கொடுத்த பணத்தைத் தருமாறு கேட்டுச் சென்றவர்களைத் தான் சி.ஐ.டி என்றும், மீண்டும் பணம் கேட்டு வந்தால் பொலிஸில் பிடித்துக் கொடுப்பேன் என்றும் அச்சுறுத்துகிறாராம் மட்டுவில் மத்தியில் (பங்களாவடி) வசிக்கும் ஒருவர்.
இந்தப் பகுதியைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் அங்குள்ள விவசாயிகளிடமும் வெளிநாட்டுத் தொடர்புடையவர்கள் சிலரிடமும் கடனாகப் பணம் பெற்றுள்ளார். கடன் கொடுத்தவர்கள் பல தடவைகள் கேட்டபோது பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தாது காலம் கடத்தி வந்துள்ளார் அந்த ஆள். ஆனால் அண்மையில் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்கச் சென்றவர்களைத் தான் சி.ஐ.டி. எனக் கூறி மிரட்டி இருக்கிறார் அவர். இனிமேல் பணம் கேட்டுவந்தால் போலிக் காரணங்களைக் காட்டிப் பொலிஸில் பிடித்துக் கொடுத்து விடுவேன் என்று அச்சுறுத்தியுள்ளார்.
கடன்கொடுத்தவர்கள் தமது பணத்தைத் திரும்பப் பெறுவதில் சிக்கலை எதிர்நோக்கியுள்ளனர்.
முறையிடுவதற்கும் வழி தெரியாமல் அவர்கள் திணறிக் கொண்டிருக்கின்றனர் என்று பாதிக்கப்பட்ட விவசாயி ஒருவர் தெரிவித்தார். (ஒ-9)

**இனிமேல் பணம் கேட்டுவந்தால் போலிக் காரணங் களைக் காட்டி பொலிஸில் பிடித் துக் கொடுத்து விடு வேன் என்று அச்சு றுத்தியுள்ளார்.**

## வீதி அபிவிருத்தி அலுவலகம் கந்தர்மடத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 25
வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் அலுவலகக் கட்டட திருத்த வேலைகள் நடைபெறுவதால், தற்போது யாழ்ப்பாணம், கந்தர் மடம், பலாலி வீதி 280 ஆம் இலக்கக் கட்டடத்தில் தற்காலிகமாக அந்த அலுவலகம் இயங்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

# தீவிரவாதிகள் கைது மிகப் பெரிய வெற்றி

## ஷிண்டே பெருமிதம்

புதுடில்லி,மார்ச் 25
ராஜஸ்தானில் இந்தியன் முஜாகிதீன் தீவிரவாதிகள் 4 பேர் கைது செய்யப்பட்டிருப்பது தீவிரவாதத்துக்கு எதிரான பெரிய வெற்றி என்று மத்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே கூறியுள்ளார்.

பல்வேறு குண்டு வெடிப்புகளில் தொடர்புடைய பாகிஸ்தான் தீவிரவாதி வகாஸ் கைது செய்யப்பட்டிருப்பதால் தீவிரவாதிகளின் சதி குறித்து முக்கியத் தகவல்கள் கிடைக்கும்.

பல்வேறு குண்டு வெடிப்புகளில் உள்ள தொடர்புகள் குறித்த உண்மைகள் வெளிவரும். மேலும் பல தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுச் சதிச்செயல்கள் முறியடிக்கப்படும்.

**தீவிரவாதி வகாஸ் கைது செய்யப்பட்டிருப்பதால் தீவிர வாதிகளின் சதி குறித்து முக்கியத் தகவல்கள் கிடைக்கும்.**

பா.ஜ.க பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏதும் இல்லை. அவருக்கு தரப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏற்கெனவே மேம்படுத்தப்பட்டுள்ளன என்று ஷிண்டே தெரிவித்தார். (கு)



பெண்களுடன் உரையாடும் ராகுல்

# பழங்குடிப் பெண்களுடன் ராகுல் கலந்துரையாடல்

மத்தியப் பிரதேச மாநிலத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி, அங்கு எபனி இலை சேகரிப்பில் ஈடுபட்டிருந்த பழங்குடியினப் பெண்களிடம் கலந்துரையாடினார். அப்போது அவர்களின் பிரச்சினைகளைப் பொறுமையாகக் கேட்டறிந்தார்.

இந்தக் கலந்துரையாடல், பழங்குடியினர் பெரும்பான்மையாக வசிக்கும் மாண்ட்லா மாவட்டம் பட்பட்பாரா என்ற கிராமத்தில் நடந்தது. முன்னதாக எபனி இலைகள் காணப்படும் அருகில் உள்ள வனப்பகுதியில் சுமார் அரை மணி நேரம் கழித்தார் ராகுல். இந்த இலைகளைக் கொண்டு பீடி தயாரிக்கப்படுகிறது. இந்த இலை சேகரிக்கும் பணி இங்குள்ள மக்களுக்கு முக்கிய வாழ்வாதாரமாக உள்ளது.

அங்கிருந்த பெண்களிடம், நான் உங்களிடம் பேசப்போவதில்லை. உங்கள் பிரச்சினைகளைக் கூறுங்கள். கேட்டுக் கொள்கிறேன் என்றார் ராகுல். அப்போது அனுஷ்யா என்ற பெண், இந்த இலை சேகரிக்கும் பணி மிகவும் கடினமாக ஒன்று. இப்பணியால் குடும்பத்தையோ குழந்தைகளையோ கவனிக்க முடியவில்லை என்றார். மற்றொரு பெண், தங்கள் கிராமத்தில் குடிதண்ணீர் கிடைக்கவில்லை என்றார்.

லமிலிபாய் என்ற பெண் கூறுகையில்; 100 நாள் வேலைத் திட்டத்தில் அரசு அறிவித்துள்ளதை விடக் கூலி குறைவாகத் தருகின்றனர் என்றார். தன்னுடன் அப்பெண்கள் அச்சமின்றிப் பேசியதற்கு மகிழ்ச்சி தெரிவித்த ராகுல், பின்னர் அங்கிருந்து புறப்பட்டு ஜபல்பூருக்குச் சென்றார். மாநில காங்கிரஸ் தலைவர் அருண் யாதவ், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சத்யதேவ் கடாரே உள்ளிட்டோர் ராகுலுடன் இருந்தனர். (கு)


# தீவிரவாதிகள் 4 பேர் ராஜஸ்தானில் கைது

## மோடியைக் குறி வைத்தமை அம்பலம்

புதுடில்லி, மார்ச் 25
இந்தியன் முஜாகிதீன் தீவிரவாதிகள் 4 பேர் ராஜஸ்தானில் கைது செய்யப்பட்டுள்ளனர். மக்களவைத் தேர்தலின்போது தாக்குதல் நடத்த இவர்கள் திட்டமிட்டிருந்ததாகத் தெரிகிறது.

முக்கியமாக பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியை இந்த தீவிரவாதிகள் குறி வைத்துள்ளனர்.

டில்லி பொலிஸின் சிறப்புப் பிரிவு இவர்களைக் கைது செய்துள்ளது. இவர்களில் ஷியா உர் ரஹ்மான் என்ற வகாஸ், இந்தியன் முஜாகிதீன் அமைப்பின் முக்கிய தளபதி ஆவார். மேலும் இருவர் ராஜஸ்தானில் பொறியியல் படித்து வரும் மாணவர்கள். கைது செய்யப்பட்ட தீவிரவாதிகளிடம் இருந்து சில வெடி பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.



கைது செய்யப்பட்ட தீவிரவாதி ஒருவர்


பாகிஸ்தானை சேர்ந்தவர்
24 வயதாகும் வகாஸ் பாகிஸ்தானைச் சேர்ந்தவர். 2010 ஆம் ஆண்டு முதல்முறையாக இந்தியாவுக்கு வந்துள்ளார். வெடிகுண்டுகளைத் தயாரிப்பதில் கைதேர்ந்த இவருக்கு, 2010ஆம் ஆண்டு நிகழ்ந்த ஜம்மா மசூதி துப்பாக்கிச் சூடு சம்பவம், வாரணாசி குண்டு வெடிப்பு, 2011இல் மும்பையில் நிகழ்ந்த தொடர் குண்டுவெடிப்பு, 2012 புனே குண்டு வெடிப்பு, 2013 ஹைதராபாத் இரட்டைக் குண்டு வெடிப்பு ஆகியவற்றில் தொடர்பு உண்டு.

அஜ்மீர் ரயில் நிலையத்துக்கு வெளியே வகாஸ் கைது செய்யப்பட்டார். மும்பையில் இருந்து ரயில் மூலம் அவர் அஜ்மீர் வந்துள்ளார்.

மோடியை குறிவைத்து..
மக்களவைத் தேர்தலின்போது ராஜஸ்தான் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் குண்டு வெடிப்புகளை நிகழ்த்த இந்தத் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர். பா.ஜ.க வின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியைக் குறிவைத்து குண்டு வெடிப்பை நிகழ்த்தவும் இவர்கள் சதி செய்துள்ளனர்.

ராஜஸ்தானில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வரும் ஜெய்சால்மர், ஜோத்பூர் உள்ளிட்ட இடங்கள், றோயல் ரயில் ஆகியவற்றில் குண்டு வைக்கவும் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

டில்லி பொலிஸார் ராஜஸ்தானின் வெவ்வேறு நகரங்களில் கடந்த சனிக்கிழமை முதல் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். ஜோத்பூரில் தீவிரவாதி ஷாகிப் அன்சாரி என்ற காலித் (வயது-25) கைது செய்யப்பட்டார். அவருடன் இருந்த மற்றொருவர் தப்பியோடி விட்டார். பிரதாப் நகரில் நடத்தப்பட்ட சோதனையில் வாடகை வீட்டில் தங்கியிருந்த இரு தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர். பொறியியல் மாணவர்களான அவர்களிடம் இருந்து வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டன. அவர்களது பெயர் முகமது மஹரூப் (வயது -21), முகமது வக்கார் அன்சார் என்ற ஹனீப் (வயது-21) என்று விசாரணையில் தெரிய வந்தது. கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்து தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. அவர்களிடம் இருந்து கிடைக்கும் தகவல்கள் மூலம் மேலும் தீவிரவாதிகள் கைது செய்யப்படலாம் என்று தெரிகிறது. (கு)



திருவாரூரில் வைகோ தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். அவரை அவரது கட்சி ஆதரவாளர்கள் பெருமளவானோர் திரண்டு வரவேற்றனர். (கு)

# மதச்சார்பற்ற ஜனதா தளம் ஆத்மியுடன்

புதுடில்லி.மார்ச் 25
டில்லி மாநில மதச்சார்பற்ற ஜனதா தளப் பிரிவு ஆம் ஆத்மி கட்சியுடன் இணைந்துள்ளது.

இதன் மாநிலத் தலைவரும், அகில இந்திய முஸ்லிம் ஒற்றுமை இயக்கத்தின் தலைவருமான ஹாஜி இக்ராம் ஹசனுடன் நூற்றுக்கணக்கான தொண்டர்களும் கடந்த சனிக்கிழமை ஆம் ஆத்மியில் இணைந்தனர்.

இவர்கள் அனைவருக்கும் ஆம் ஆத்மி கட்சியின் தொப்பிகளை அணிவித்து தேசிய செயற்குழு உறுப்பினர்களான திலீப் பாண்டே, பேராசிரியர் ஆனந்த் சர்மா ஆகியோர் வரவேற்றனர். (கு)

# சரத் பவாரின் பேச்சால் சர்ச்சை

மும்பை,மார்ச் 25
சொந்த ஊர், பணியிடம் என இரண்டு இடங்களில் வாக்களியுங்கள் என்று தேசியவாதக் காங்கிரஸ் தலைவர் சரத் பவார் தெரிவித்துள்ளார்.

அவரது பேச்சு தேசிய அரசியல் வட்டாரத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சுமை தூக்கும் தொழிலாளர்கள் மாநாடு மும்பையில் நேற்று முன் தினம் நடைபெற்றது. மாநாட்டில் பங்கேற்ற தொழிலாளர்களில் பலர் மகாராஷ்டிரத்தின் சதாரா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

இதை மையமாக வைத்து சரத் பவார் பேசியதாவது:-
2009 மக்களவைத் தேர்தலின் போது சதாரா, மும்பைக்கு ஒரே நாளில் தேர்தல் நடைபெற்றது. இதனால் பெரும்பான்மையான தொழிலாளர்கள் சதாராவுக்கு வாக்களிக்கச் சென்றுவிட்டார்கள்.

இந்தமுறை சதாராவில் ஏப்ரல் 17ஆம் திகதியும் மும்பையில் ஏப்ரல் 24ஆம் திகதியும் வாக்குப் பதிவு நடைபெறுகிறது. முதலில் சதாராவில் கடிகாரம் சின்னத்தில் (தேசியவாத காங்கிரஸ் சின்னம்) வாக்களியுங்கள். பின்னர் மும்பைக்கு வந்து மீண்டும் கடிகாரம் சின்னத்தில் வாக்களியுங்கள். அதற்கு முன்பாக உங்கள் விரலில் இடப்படும் மையைக் கண்டிப்பாக அழித்துவிடுங்கள் என்று சரத் பவார் கூறினார்.

சரத் பவாரின் சர்ச்சைக்குரிய பேச்சு குறித்து தேர்தல் ஆணையத்திடம் முறைப்பாடு அளிப்போம் என்று ஆம் ஆத்மி கட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து மகாராஷ்டிர மாநில ஆம் ஆத்மி தலைவர் பிரீத்தி மேனன் கூறியபோது; பவாரின் பேச்சு ஜனநாயக விரோதமானது. அவர் கண்டிப்பாக தண்டிக்கப் பட வேண்டும். இதுதொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் எழுத உள்ளோம் என்று தெரிவித்தார். (கு)

# வெற்றுக் கதிரைகளைக் காட்டாதீர்

## ஊடகங்களிடம் சிரஞ்சீவி வேண்டுகோள்

புதுடில்லி,மார்ச் 25
காங்கிரஸார் நடத்தும் கூட்டங்களில் வெற்று நாற்காலிகளைக் காட்டி மனதை வேதனைப் படுத்தவேண்டாம் என மத்திய அமைச்சரும் ஆந்திர மாநில காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரசாரக் குழுவின் தலைவருமான கே. சிரஞ்சீவி ஊடகங்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காங்கிரஸ் கட்சி சார்பில் சீமாந்திரா பகுதிகளில் கடந்த 21ஆம் திகதி பஸ் யாத்திரை தொடங்கப்பட்டது. அதன்பிறகு ஆங்காங்கே பொதுக்கூட்டங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. விசாகப்பட்டினத்தில் சனிக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் கூட்டத்தில் சிரஞ்சீவி பேசியதாவது:

மாநிலப் பிரிவினையில காங்கிரஸ் கட்சியை மட்டுமே குறை கூறுவது சரியல்ல. அனைத்துக் கட்சிகளும் ஒப்புக்கொண்ட பின்னர் தான் மாநிலத்தைப் பிரிக்க காங்கிரஸ் கட்சி முடிவு செய்தது.


ஆனால் முன்னாள் முதல்வர் கிரண்குமார் ரெட்டி, மாநிலப் பிரிவினை குறித்து கட்சி மேலிடத்துக்குச் சரியான தகவல்களைக் கொடுக்காததால் தான் தற்போது இந்த நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது காங்கிரஸ் கட்சி சிக்கலான காலகட்டத்தில் உள்ளது.

எனது தம்பி பவன் கல்யாண் ஒரு சமத்துவவாதி. ஆனால் அவர் ஒரு மதவாதக் கட்சியுடன் கூட்டு சேருவது மிகவும் ஆச்சர்யமாக உள்ளது.

சந்திர பாபு நாயுடு பாஜகவுடன் கூட்டணி அமைப்பது அவரது பதவி மோகத்தைக் காட்டுகிறது-என்றார். (கு)

# இந்தியப் பெருங் கடலில் வெள்ளை நிறப் பொருள்

### காணாமற் போன விமானப் பாகமா?



பீஜிங்,மார்ச் 25
மாயமான மலேசிய விமானத்தைத் தேடும் பணியில் ஈடுப்பட்டுள்ள சீன விமானம் இந்தியப் பெருங்கடல் பகுதியில் வெள்ளை நிறத்தில், சதுர வடிவிலான ஒரு பொருளைக் கண்டுபிடித்துள்ளதாகவும், அது மலேசிய விமானத்தின் உடைந்த பாகமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 8 ஆம் திகதி மலேசியாவில் இருந்து சீனா புறப்பட்ட விமானம் திடீரென மாயமானது.

விமானம் குறித்து உறுதியான தகவல் ஏதும் கிடைக்காத நிலையில், விமானத்தின் உடைந்த பாகங்களாக இருக்கலாம் எனக் கருதப்பட்ட சில செயற்கோள் புகைப்படங்கள் அண்மையில் வெளியாகின.

அதன் அடிப்படையில் இந்தியப் பெருங்கடல் பகுதியில் தேடுதல் வேட்டை முடுக்கிவிடப்பட்டது.

இந்நிலையில், இந்தியப் பெருங்கடல் பகுதியில் விமானத்தின் உடைந்த பாகமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் ஒரு பொருளைச் சீன விமானம் கண்டறிந்துள்ளதாகச் சீன அரசின் சினுவா செய்தி நிறுவனம் தகவல் வெளி யிட்டுள்ளது.

தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்த சீன விமானம், இந்தியப் பெருங்கடலின் தென் பகுதியில் விமானத்தின் உடைந்த பாகத்தைக் கண்டுபிடித்ததாகக் கூறப்படுகிறது.

உடைந்த பாகங்களாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் பொருள் குறித்து ஆஸ்திரேலிய தகவல் மையத்துக்கும், தேடுதல் பணியில் உதவுவதற்காக இந்தியப் பெருங்கடல் நோக்கி விரைந்து சீனாவின் கொண்டிருக்கும் 'ஸ்னோ ட்ரகன்' கப்பலுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தேடுதல் பணியில் ஏற்பட்டுள்ள தற்போதைய தகவல் குறித்து ஆஸ்திரேலிய கடல்சார்

பாதுகாப்பு அதிகாரிகள் கூறுகையில்; கடலில் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படும் பொருள் இருக்கும் இடத்தில் இன்றே தீவிர தேடுதல் நடத்தப்படும். மோசமான வானிலை காரணமாகத் தேடுதலில் சற்று தாமதம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் தேடுதல் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றனர். (கு)

# மற்றொரு மலேசிய விமானத்தில் இயந்திர கோளாறினால் பரபரப்பு

### ஹொங்கொங்கில் அவசரமாகத் தரையிறக்கம்

கோலாலம்பூர்,மார்ச் 25
கோலாலம்பூரில் இருந்து புறப்பட்ட மலேசியன் எயார் லைன்ஸ் ஜெட் விமானத்தின் மின்பிறப்பாக்கியில் கோளாறு ஏற்பட்டதன் காரணமாக விமானம் ஹொங்கொங்கில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

முன்னதாக, ஹொங்கொங் விமான நிலையத்தில் தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டன. ஆனால் விமானம் அதிர்ஷ்டவசமாக விபத்துள்ளாகாமல் தப்பித்தது. பயணிகள் 271



அவசரமாக தரையிறங்கும் விமானம்

பேரும் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர்.

இது குறித்து மலேசியன் எயார் லைன்ஸ் கூறுகையில், எம்.எச்-066 என்ற அந்த விமானம் சீயோல் நோக்கிப் புறப்பட்டது. அப்போது விமானத்துக்கு மின்சாரம் விநியோகிக்கும் பிரதான மின்பிறப்பாக்கி.

செயலிழந்தது. இருப்பினும் துணை மின்பிறப்பாக்கி விமானத்துக்கு மின் விநியோகித்ததால் விமானம் பத்திரமாக தரையிறக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. (கு)





துருக்கியில் அரசு டுவிட்டருக்கு விதித்துள்ள தடையை எதிர்த்து அந்நாட்டு இளைஞர் ஒன்றியத்தினர் தலைநகர் அங்காராவில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அந்நாட்டுப் பிரதமருக்கு எதிரான பதாகைகளை அவர்கள் தாங்கியுள்ளனர். (கு)

# இந்தியர் ஒருவரை நேற்று நாடு கடத்தியது சிங்கப்பூர்

சிங்கப்பூர் சிற்றி,மார்ச் 25
தீவிரவாதக் கருத்தைப் போதித்து நண்பர் ஒருவரைச் சிரியாவுக்கு அனுப்பி வைத்ததாக, இந்தியர் ஒருவரைச் சிங்கப்பூர் அதிகாரிகள் நாட்டை விட்டு வெளியேற்றினர். சிங்கப்பூரின் நிரந்தரக் குடியுரிமை பெற்ற குல் முகமது எம். மரைக்கார் (வயது-37) என்ற இந்தியர், அங்கு கணனி நிபுணராகப் பணியாற்றி வந்தார். சிங்கப்பூரில் பல்பொருள் அங்காடி ஒன்றில் பணிபுரியும் ஹாஜா பக்ருதீன் உஸ்மான் அலி (வயது-37) என்பவர் இவரது நண்பர்.

இந்நிலையில் உஸ்மான் அலிக்கு, குல் முகமது தீவிர வாதக் கருத்துகளை போதித்து அவரை உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டுள்ள சிரியாவுக்கு அனுப்பி வைத்ததாகக் கூறப்படுகிறது. சிரியாவில் அதிபர் பஷார் அல் ஆசாத்துக்கு ஆதரவான படைகளை எதிர்த்துப்

> “ உஸ்மான் அலிக்கு, குல் முகமது தீவிர வாதக் கருத்துகளை போதித்து அவரை உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டுள்ள சிரியாவுக்கு அனுப்பி வைத்ததாகக் கூறப் படுகிறது.

போரிட உஸ்மான் அலி சென்றுள்ளதாக அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதன் தொடர் நடவடிக்கையாக குல் முகமது சிங்கப்பூரை விட்டு வெளியேற்றப்பட்டதாக அந்நாட்டின் உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. (கு)

# மாலைதீவு பொதுத் தேர்தலில் ஆளும் கூட்டணியினர் வெற்றி

### முகமது நஷீட்டுக்கு மீண்டும் தோல்வி

மலே,மார்ச் 25
கடும் சர்ச்சைக்கு நடுவே மாலைதீவில் சனிக்கிழமை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அந்நாட்டு அதிபர் அப்துல்லா யாமீனின் மாலைதீவு முற்போக்கு கட்சி தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றுள்ளது.

முன்னாள் அதிபர் முகமது நஷீட் தலைமையிலான மாலைதீவு ஜனநாயகக் கட்சி நகர்ப்புறங்களில் உள்ள இடங்களைக் கணிசமாகக் கைப்பற்றி உள்ளது. எனினும், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது, அந்தக் கட்சி வெற்றி வாய்ப்பை இழந்துள்ளது.

மாலைதீவு நாடாளுமன்றத்தில் மொத்தம் உள்ள 85 இடங்களுக்கு 302 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். மொத்தம் உள்ள 2.4 லட்சம் வாக்காளர்களில் 3இல் 2 பங்கு பேர் வாக்களித்ததாகவும் வாக்குப்பதிவு நியாயமாக நடைபெற்றதாகவும் தேர்தல் பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற முதல் சுற்று அதிபர் தேர்தலில் நஷீட் வெற்றி பெற்றார். ஆனால், இந்தத் தேர்தலை உயர் நீதிமன்றம் ரத்துச் செய்தது. இது போல அடுத்தடுத்து நடைபெற்ற 2 தேர்தலும் ரத்துச் செய்யப்பட்டன. பின்னர் கடந்த ஆண்டு நவம்பர் 16 இல் நடைபெற்ற தேர்தலில் யாமீன் வெற்றி பெற்று அதிபரானார். இந்த விவகாரத்தில் உயர் நீதிமன்ற உத்தரவை மதிக்கவில்லை எனக் கூறி, தேர்தல் ஆணையத்தின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகிய இருவரும் கடந்த 9 ஆம் திகதி பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

இந் நிலையில், உயர் பொறுப்பில் உள்ள அதிகாரிகள் பதவி வெற்றிடமாக இருப்பதால் தேர்தலை ஒத்தி வைக்க வேண்டும் என யாமீன் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இது தொடர்பாக நீதிமன்றம் எவ்வித உத்தரவும் பிறப்பிக்காததால், திட்டமிட்டபடி கடந்த சனிக்கிழமை வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (கு)

## உகண்டா படகு விபத்தில் அகதிகள் 19 பேர் சாவு

உகாண்டாவில் இருந்து கொங்கோவுக்குத் திரும்பிக் கொண்டிருந்த அகதிகளை ஏற்றிய படகு ஒன்று எல்பட் விலேகிலி நதியில் கவிழ்ந்ததில் 19 பேர் உயிரிழந்தனர்.

அனர்த்தில் சிறுவர்கள் பெண்கள் உள்ளிட்ட 33 பேர் காணாமற்போயுள்ளதாகச் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. படகில் 96 பேர் பயணித்துள்ள நிலையில் அவர்களில் 45 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

உள்நாட்டு மோதல் காரணமாக உகண்டா சென்ற நிலையில் மீண்டும்நாடுதிரும்பியகொங்கோ மக்களே இவ்வாறு அனர்த்துக்கு முகங்கொடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிரிய விமானம் வீழ்த்தப்பட்டது

தமது வான்பரப்பில் பறந்த சிரிய போர் விமானத்தைச் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாகத் துருக்கி தெரிவித்துள்ளது.

எனினும் துருக்கியின் இந்த செயலுக்கு அந்த நாடு அதிக விலை கொடுக்கவேண்டும் என்று சிரிய அரசு குறிப்பிட்டுள்ளது. எவ்வாறாயினும் தமது எல்லைப் பகுதியல் பறந்ததன் காரணமாகவே இவ்வாறு சுடப்பட்டதாகத் துருக்கி தெரிவித்துள்ளது. (கு)

# விமானம் புறப்பட முன் விமானிக்கு தொலைபேசி அழைப்பு

கோலாலம்பூர்,மார்ச் 25
காணாமல் போன மலேசிய எம்.எச்.370 விமானத்தின் விமானி சஹாரி அஹ்மட் சாஹ் அந்த

விமானத்தில் புறப்படுவதற்கு முன் அவருக்குக் கையடக்கத் தொலைபேசியில் அழைப்பு விடுத்த பெண்ணொருவர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அந்தக் கையடக்கத் தொலைபேசி இலக்கமானது போலியான அடையாளத்தைக் காண்பித்துப் பெறப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மேற்படி கையடக்கத் தொலை



தனது குடும்பத்துடன் விமானி அகமட்

பேசி எண்ணானது கோலாலம்பூரில் சிம் அட்டைகளை விற்பனை செய்யும் கடையிலிருந்து பெண்ணொருவரால் அண்மையில் போலி அடையாளத்தையும் பெயரையும் வழங்கிப் பெறப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இது சஹாரி அஹ்மட்டுக்குப் பயங்கரவாதத்துடன் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தை அதிகரிப்பதாக உள்ளதாகக் கூறப்படுகிறது. (கு)

# வடக்கில் திரண்டு வாக்களித்தது போன்று மேல் மாகாணத்திலும் அணி திரள்வோம்

## வடமாகாண போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

மன்னார், மார்ச் 25

வரவிருக்கும் மேல் மாகாண சபைத் தேர்தலுக்கு தமிழ் பேசும் மக்களாகிய நாங்கள் புத்தி சாதுரியமாக முகம் கொடுக்கக் வேண்டியுள்ளது. ஏனெனில் மேல் மாகாணத்தில் தமிழ்த் மக்களுக்காக குரல் கொடுக்க கூடிய ஒரே ஒரு சக்தியாக திகழ் பவர்கள் ஜனநாயக மக்கள் முன்னணியினர். அந்த வகையில் இம்முறை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயக மக்கள் முன்னணிக்கட்சியை ஆதரிப் பதற்கு தீர்மானித்துள்ளது. எனவே மக்கள் அனைவரும் ஒரே அணியில் ஒன்று திரண்டு ஜனநாயக மக்கள் முன்னணிக்கு வாக்களிக்குமாறு வட மாகாண சபை போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத் துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-


இக் கட்சியின் தலைவர் மனோ கணேசன், தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப் பவர். அவரது கரங்களை பலப் படுத்துவதோடு அவரோடு இணைந்து செயற்படும் நண்பன் குகவரதன் மற்றும் கட்சியின் வேட்பாளர்களின் வெற்றியையும் உறுதி செய்து மேல் மாகாணத்தில் புதுயுகம் படைக்க தமிழ் மக்கள் தீர்மானம் எடுக்கவேண்டும்.

தமிழ் மக்கள் தேர்தலில் தமது ஒற்றுமையை முழு உலகுக் குமே பறை சாற்றியுள்ளனர்.

மேல் மாகாணத்திலும் தமிழ னின் பாதுகாவலனாக குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனை வெற்றிபெறச் செய்வதோடு அவரது வலது கரமாக வலம் வரும்; குகவரதனையும் வெற்றிபெறச் செய்யுங்கள்.

தமிழ் மக்கள் தமது அமோக வாக்குகளை ஜனநாயக மக்கள் முன்னணியினருக்கு வழங்க வேண்டும். அவர்களது வெற்றி மேல்மாகாணத்தின் புரட்சி கரமான மாற்றத்துக்கான வெற்றியாக அமையும்.

வடக்கில் தமிழ் மக்கள் வெளிக் காட்டிய ஒற்றுமையை மேல் மாகாணத்திலும் வெளிக்காட் டுங்கள். தமிழின பாதுகாப்பை உறுதி செய்யுங்கள். உலகமே தமிழர்களை திரும்பிப் பார்க் கும் நிலைமையை ஏற்படுத் துங்கள் -என்றுள்ளது. (ஓ-56)




'ஊசல்' கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தியாகிகள் அறக் கொடை நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கர நேசனிடமிருந்து தியாகிகள் அறக் கொடை நிலைய அதிபர் நூலின் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்கிறார். (வ-7)

# சங்கிலியன் மன்றத்தின் ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்ததானம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

நல்லூர் சங்கிலியன் ம்ன்றம் தனது 69 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மூன்றாவது மாதத்துக்கான மக்கள் நலத் திட்டமாக இரத்ததானம் செய்யும் நடவடிக் கையை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை முன்னெடுத்தது. சங்கிலியன் மன்றக் கட்டடத்தில் இடம்பெற்ற இந்த இரத்ததான முகாமில் சுமார் முப்பதுக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.

வைத்திய கலாநிதி வை.தியாகராஜா இந்த நிகழ்வை மங்கல விளக்கேற்றி ஆரம் பித்து வைத்தார். (வ-7)



யாழ். போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், இளைஞர், யுவதிகளிடமிருந்து இரத்தம் சேகரிப்பதைக் காணலாம்.

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து
24.03.2014
மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
தயாகரன்-லோஜினி தம்பதியரின் செல்வப்புதல்வி
செல்வி அபிநயா
முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் நேற்று (24.03.2014) திங்கட்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடினார். இவர் வராகி அம்மன் அருளால் எல்லாச் செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, அத்தைமார், பெரியப்பா குடும்பம்.
மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்.



TEGOSL
ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

அதியுயர் ஊடக விருதுகள் 2013

சிறந்த ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் 15 ஆவது வருட விருது வழங்கல் நிகழ்ச்சி

அதியுயர் ஊடக விருது வழங்குவதற்காக இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பின்வரும் விருதுகளுக்கான விண்ணப்பங்களைக் அச்சு ஊடகத்துறை ஊடகவியலாளர்களிடமிருந்து கோருகின்றது.

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் சில்வா டி ஞாபகார்த்த விருது
- ஆண்டின் சிறந்த தனித்துவ செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த புலனாய்வுக்கான விருது
- ஆண்டின் சிறந்த சூழலியல் செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது
- ஆண்டின் சிறந்த விளையாட்டு செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான டென்சில் பீரிஸ் விருது (26 வயதுக்கு கீழ்)
- ஆண்டின் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
- ஆண்டின் சிறந்த வணிக செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த விவரண கட்டுரையாளருக்கான உப்பாலி விஜேவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிரிவர்தன விருது. (மும்மொழிகளிலும்)
- நெருக்கடி சூழலில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி ஞாபகார்த்த விருது

ஊடகத்துறையைச் சேர்ந்த சிறந்த அனுபவம் வாய்ந்த நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்கு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.



இதற்கான விண்ணப்பங்களையும் அறிவுறுத்தல் கையேட்டையும் இல: 96, கிருல வீதி கொழும்பு 05 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது www.slpi.lk, www.pccsl.lk என்ற இணையத்தளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவு திகதி 10 ஏப்ரல் 2014 ஆகும்.

(C 12373) (ஆ)

### கும்பாபிஷேகம்

கைதடி வடக்கு வாலாம்பிகை அம்மனின் புனராவர்த்தன நவகுண்டபஷ அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை9.07மணிதொடக்கம் 10.41 மணி வரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும்27 ஆம்திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (வ)

### சமய சந்நிதியில்

தொல்புரம் மடத்தடி பிள்ளையார் சுப்பிரமணியர் தேவஸ்தான மண்டலமஞ்சனபூர்த்தி தின வழிபாடுகள் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் நடைபெறும்.

விநாயகப் பெருமானுக்கு அஷ்டோத்தர (108) கலசாபிஷேகமும் பஞ்சமுக விநாயகருக்கு அஷ்டோத்தர (108) சங்காபிஷேகமும் நடைபெற்று, விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பிற்பகல் ஒரு மணிக்கு மகேஸ்வரபூசைநடைபெறும்.

மாலை 6 மணி முதல் பூசைகள் ஆரம்பமாகி முருகப் பெருமானுக்கு திருக்கல்யாணம் நடைபெற்று, தொடர்ந்து திருவூஞ்சல் இடம்பெற்று எம் பெருமான் முருகப் பெருமான் சமேதராக உள்வீதி, வெளிவீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (ஓ)

மாபெரும் மலிவு விற்பனை
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை 25.03.2014 முதல்14.04.2014 வரையும் சகல விதமான ஆடை வகைகளும் விசேட கழிவுடன் விற்பனை செய்யப்படும்.
தெரிவுகளுக்கு முந்துங்கள்
SVP சீலம்ஸ் ரெக்ஸரைல்ஸ்
முற்றிலும் குளிரூட்டப்பட்டது. (46086) (2.6.3)
நவீன சந்தை, 14 A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

உடனடியாகத் தேவை
உங்கள் வீடுகளில் உள்ள பழைய, புதிய O/L, A/L, மேல் பட்டப்படிப்பு, அதற்கு மேற்பட்ட வகுப்பிற்கும் தேவையான, சம்பந்தமான வேதியல் புத்தகங்கள், இராசயன புத்தகங்கள் கூடுதலாக தமிழ் விரும்பத்தக்கது. இல்லாத பட்சத்தில் ஆங்கிலம் என்றாலும் பரவாயில்லை. அத்துடன் வேதியல், இரசாயனம், ஆயுர்வேத, வேறு தமிழ் வைத்திய (மருத்துவ) அகராதிகள் முழுத் தமிழ் உம் ஆங்கிலம் / தமிழ். தமிழ் என்றா லும் விரும்பத்தக்கது. அப்படி இல்லாத பட்சத்தில் முழுத் தமிழ் அல்லது முழு ஆங்கிலம் என்றாலும் பரவாயில்லை. அவைகளை நாங்கள் உங்கள் வீடுகளுக்கு வந்து பணம் தந்து அல்லது நீங்கள் எங்கள் விலாசத்துக்கு நேரடியாகக் கொண்டு வந்து தந்து விட்டு புத்தகங்களின் விலையையும், போக்குவரத்து செலவையும் சேர்த்து முழுப்பணத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.
(46089) (10.6.3) தொடர்பு: 077 947 6685

பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்
இடம்: பாடசாலையின் பிரதான மண்டபம்
காலம்: 29.03.2014 சனிக்கிழமை மு.ப-9.00 மணி
தலைவர்: திருமதி சி.சுந்தராமி (அதிபர் யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை
நிகழ்ச்சி: இறைவணக்கம், தலைமை உரை, புதிய நிர்வாக சபைத் தெரிவு, ஏனைய பிற விடயங்கள், நன்றியுரை.
குறிப்பு: பாடசாலை நலனில் அக்கறையுடைய அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அதிபர்
(29792)(3.6.4)
யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.

# பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுங்கள்

### *பொது சுகாதார பரிசோதகர்களுக்கு சுகாதார அமைச்சர் ஆலோசனை*

வவுனியா,மார்ச் 25

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும். போது சுகாதார சேவைகளில் பெரும் பாதிப்புக்கள் ஏற்படும் பொதுமக்களைப் பாதிக்காத வகையில் தொழிற் சங்கங்கள் தமது உரிமைகளுக்கான போராட்டங்களை நடத்த வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம்.

வட மாகாண சுகாதார அமைச்சின் வவுனியா உப அலுவலகத்தில் அகில இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

சுகாதாரத்துறையென்பது பொதுமக்களுக்கான அத்தியாவசியமான சேவைகளில் ஒன்றாகும். எனவே நாம் அனைவரும் இத்தகைய சேவைகளைத் திறம்படச் செய்தல் வேண்டும். அடுத்து வரும் மாதங்களில் மழை பெய்யும் வாய்ப்புக்கள் உள்ளன. டெங்கு நுளம்புகளின் பெருக்கம் இதனால் அதிகரிக்கலாம்.



ப.சத்தியலிங்கம்.

அண்மையில் யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றமொன்றில் கடமையாற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் சுகாதார வைத்திய அதிகாரிக்குமிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முறுகல் நிலையாக மாறியதால் உள்ளூராட்சி மன்றத்தில் கடமையாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. இதனை ஆட்சேபித்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபடப் போவதாகத் தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாகவே இந்தச் சந்திப்பு இடம் பெறுகிறது. உங்களது உரிமையைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பொதுமக்களின் சுகாதார சேவைகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். (க-402)

## மின் விநியோகத்தில் ஏற்படும் இடையூறுகளை அகற்ற நடவடிக்கை

கிளிநொச்சி,மார்ச் 25

மின்சார சபையினர் கிளிநொச்சி நகரப் பகுதியிலுள்ள வீதிகளில் மின்சார விநியோகத்தைப் பாதிக்கும் வகையில் காணப்பட்ட மரக் கிளை களையும் மரங்களையும் அகற்றும் பணிகளில் நேற்றுமுன்தினம் முழுநாளும் ஈடுபட்டிருந்தனர்.

மின் மார்க்கங்களில் இடையூறு ஏற்படுத்தும் வகையில் தடைகள் காணப்பட்டதால் சீரான மின் விநியோகத்தை வழங்குவதில் மின்சார சபையினர் இடர்களை எதிர்கொண்டு வந்த நிலையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**மின் மார்க்கங்களில் இடை யூறு ஏற்படுத்தும் வகையில் தடைகள் காணப்பட்டதால் சீரான மின் விநியோகத்தை வழங்குவதில் மின்சார சபை யினர் இடர்களை எதிர்கொண்டு வந்தனர்.**

இந்த நடவடிக்கை காரணமாக நேற்றுமுன்தினம் காலை 8 மணி தொடக்கம் மாலை 6.15 மணி வரை அந்தப் பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

இந்த நடவடிக்கை காரணமாக இனிமேல் தமக்கு தடையற்ற மின்சாரம் கிடைக்குமென கிளிநொச்சி மக்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளதை அவதானிக்க முடிந்தது. (க-426)

## முத்துஐயன்கட்டுக் குளத்திலிருந்து நீரை திறந்து விடுமாறு கோரிக்கை

### *கால்நடைகளின் குடிதண்ணீர்த் தேவைக்காக*

முல்லைத்தீவு,மார்ச் 25

கால்நடைகளின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு 15 தினங்களுக்கு ஒரு தடவையாவது முத்துஐயன்கட்டுக் குளத்திலிருந்து நீரைத் திறந்து விடுமாறு பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் கடும் வறட்சியும், வெப்பமும் நிலவுகின்றது.

இதனால் நீர் நிலைகள் வற்றியதால் கால்நடைகள் குடிதண்ணீர் தேடி அலைந்து திரிகின்றன. வழக்கமாகக் கால்நடைகள் இங்குள்ள சிறுகுளங்களை நாடிச் சென்று நீர் அருந்துவது வழக்கமாக இருந்தது. ஆனால் அங்கும் தற்போது நீர் வற்றியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. மேலும் வெகு தூரத்திலுள்ள இத்தகைய குளங்களை நாடிச் செல்லும் கால்நடைகள் தமது பட்டிகளுக்குத் திரும்பி வராது அங்கேயே தங்கி நிற்பதும் வழக்கமாக மாறியுள்ளது. இதனால் அவற்றை உரிமையாளர்கள் இழக்க வேண்டிய நிலையும் தோன்றியுள்ளது.

இதனைத் தவிர்க்கும் பொருட்டு முத்துஐயன்கட்டுக் குளத்திலிருந்து நீரைத் திறந்து விடுமாறு கோரிக்கை எழுந்துள்ளது.

கடந்த ஆண்டும் வன்னிப் பிரதேசத்தில் கடும் வறட்சி நிலவியதால் குடிதண்ணீர் கிடைக்காத பல கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு இறந்தமை குறிப்பிடத்தக்கது. (க-500)



கிளிநொச்சி வேரவில் இந்து மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பெற்றோர்களுக்கான கட்டாயக் கல்விக் கருத்தரங்கும், தெருவெளி விழிப்புணர்வு நாடகமும் அண்மையில் இடம்பெற்றபோது பாடசாலை அதிபர், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். (க)

## செயற்கை அவயவங்கள் வழங்கும் நிகழ்வு

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்டு கை, கால்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவில் இடம்பெற்றது. இந்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட 59 ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் ஏ.எஸ்.டி விக்ரமரத்ன தலைமையில் நடைபெற்றது.

இதன்போது 59 ஆம் படைப் பிரிவின் ஏற்பாட்டில் மலேசியாவில் உள்ள பொன்ஸ்கோ அமைப்பு, மற்றும் 15 றோட்டரிக் கழகங்களின் நிதி உதவியுடன் 45 பேருக்கு செயற்கை அவயவங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மலேசியாவிலுள்ள பொன்ஸ்கோ அமைப்பின் தலைவர் எஸ்.குலசேகரம், றோட்டரிக் கழகத் தலைவர் தாருன் அப்துல்லாஹ், கொழும்பு றோட்டரிக் கழகத் தலைவர், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (க-402)

# வீதி புனரமைக்கப்படாததால் இன்னல்படும் கிராம மக்கள்

கிளிநொச்சி, மார்ச் 25

கிளிநொச்சி – முழங்காவில் வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாததால் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது.

இதனால் இந்த வீதியில் பயணிக்கும் மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதி, கிளிநொச்சி பஸ் நிலையத்தில் இருந்து கனகபுரம் பகுதியூடாக முழங்காவில் வரை செல்கின்றது. இந்த வீதியைப் புனரமைப்பதற்கான வேலைகள் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் கிளிநொச்சி பஸ் நிலையத்திலிருந்து புதுமுறிப்பு வரையான வீதியின் பகுதி மட்டுமே புனரமைக்கப்பட்டுள்ளது. ஏனைய பகுதிகள் சேதமடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

இதேவேளை இந்த வீதி ஊற்றுப்புலம், கோணாவில், ஸ்கந்தபுரம், ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம் போன்ற பெரிய கிராமங்களினூடாகவே முழங்காவில்வரைசெல்கின்றது.

ஆனால் இந்தப் பகுதிகளில் வீதி மோசமான நிலையில் காணப்படுவதால் இந்தப் பகுதி மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். புதுமுறிப்புக் குளத்துக்கு அருகில் உள்ள பெரிய பாலம் பழுதடைந்த நிலையில் உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய நிலையில் காணப்படுகின்றது.

இந்தப் பாலத்தை பஸ்களில் செல்லும் மக்கள் கடக்கும் போது அச்சத்துக்கு உள்ளாவதைக் காணமுடிகின்றது.

இந்த நிலையில் இந்தப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு யாழ்ப்பாணம் போன்ற தூர இடங்களிலிருந்து ஆசிரியர்கள் தினமும் வந்து செல்கின்றார்கள்.

இந்த வீதியின் மோசமான நிலை காரணமாக அண்மையில் கர்ப்பிணியொருவரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் வாகனத்தில் பிரசவம் இடம்பெற்றது.

இந்த வீதியை வடமாகாண சபை கவனம் செலுத்திப் புனரமைக்க ஆவன செய்ய வேண்டும்எனக்கோரப்படுகிறது. (க-426)

## வவுனியா கல்வாரித் திருத்தலத்தில் தொடர்ந்து சிறப்பு வழிபாடுகள்

கிறிஸ்தவர்களின் தவக்கால நிகழ்வின் ஒரு அங்கமாக வவுனியா பெரிய கோமரசன் குளம், கல்வாரித் திருத்தலத்தில் சிறப்பு வழிபாடுகள் இடம் பெற்று வருகின்றன.

இதில் கலந்துகொள்வதற்கென நாட்டின் பல பாகங்களில் இருந்தும் அடியவர்கள் வந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை பாத யாத்திரைக் குழுவொன்று நாளையதினம் புதன்கிழமை மன்னாரில் இருந்து புறப்பட்டு வெள்ளிக் கிழமை இந்த ஆலயத்தை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருப்பலி நற்கருணை, எழுந்தேற்றல் திருமணி ஆராதனை இடம்பெற்று பிற்பகல் 3 மணிக்கு சிலுவைப் பாதை சிறப்புத் திருப்பலி என்பன இடம்பெறவுள்ளன.

**பாத யாத்திரைக் குழுவொன்று நாளையதினம் புதன்கிழமை மன்னாரில் இருந்து புறப்பட்டு வெள்ளிக் கிழமை இந்த ஆலயத்தை வந்தடையுமென எதிர்பார்க்கப் படுகின்றது.**

மேற்குறிப்பிட்ட நாள்களில் இந்த ஆலயத்துக்கு வந்து செல்வதற்கு போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென ஆலயத்தின் பங்குத்தந்தை தெரிவித்துள்ளார். (க-421)

## தொடரும் சோதனை நடவடிக்கைகள்

வவுனியா, மார்ச் 25

வவுனியா சமயபுரம், கணேசபுரம், பத்தினியார் மகிழங்குளம் பகுதிகளில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் வீடு வீடாகச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

வவுனியாவில் அண்மைக் காலமாக இராணுவ சுற்றிவளைப்புக்களும் கைதுகளும் இடம்பெற்று வரும் நிலையில் நேற்று முன்தினம் வவுனியா சமயபுரம், கணேசபுரம் பத்தினியார் மகிழங்குளம், பகுதியில் உள்ள வீடுகளில் வசிப்போரின் விவரங்கள் பெறப்பட்டதுடன் வீடுகள், தோட்டங்களின் சோதனை நடவடிக்கைகளும் இடம்பெற்றன.

அதிகாலை சுற்றிவளைப்பு வேலையில் மேற்கொண்ட இராணுவத்தினர் பலரைக் கைது செய்து விசாரணை மேற்கொண்ட பின்னர் விடுவித்தனர் இதனால் அந்தப் பகுதிகளில் பெரும்பதட்டம் நிலவியது. (க-402)

# தனியான பஸ் சேவைக்கு பெற்றோர்கள் கோரிக்கை

### *கற்சிலைமடுவைச் சேர்ந்த மாணவர்களுக்கு*

முல்லைத்தீவு, மார்ச் 25

பாடசாலை மாணவர்களுக்கெனதனியானபஸ்சேவையை நடத்த வேண்டுமென கற்சிலைமடுவைச் சேர்ந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது இடமில்லையெனக் காரணம் கூறி பாடசாலை மாணவர்கள் பலரை ஏற்றாத நிலையில் பஸ்கள் செல்வதைக் காணமுடிகின்றது. ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் சேவையில் ஈடுபடும் பஸ்கள் பாடசாலை மூடப்படும் நேரத்தில் வருகின்ற போதிலும் இடநெருக்கடியைக் காரணம் கூறிப் பல மாணவர்களை ஏற்றிச் செல்வதில்லை. இதனால் இந்த மாணவர்கள் தமது கண்களில் தென்படும் வாகனங்களில் ஆபத்துக்கு மத்தியில் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

சில வேளைகளில் தொலைவிலுள்ள தமது வீடுகளுக்கு நடந்து கூடச் செல்கின்றனர். இதனால் இவர்கள் தாமதமாகவே தமது வீடுகளைச் சென்றடைகின்றனர். தமது பிள்ளைகள் வீடு வந்து சேரும் வரை பெற்றோர்கள் கலக்கத்துடன் இருப்பதைக் காண முடிகின்றது.

மேலும் மாணவர்களும் பாதுகாப்பு இல்லாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

எனவே இங்குள்ள பாடசாலை மாணவர்களுக்கென தனியான பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு பெற்றோரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-500)

# முன்பள்ளி ஆசிரியருக்கு சம்பளம் வழங்கத் திட்டம்

**கிழக்கில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

அம்பாறை,மார்ச் 25

கிழக்கு மாகாணத்தில் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு மாதாந்த சம்பளம் வழங்குவதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அதற்கான தீவிர முயற்சிகளில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீல் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும்போது கல்முனை மாநகர சபைக்குட்பட்ட அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் மாதாந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை களை மேற்கொள்வேன் என்று கல்முனை மாநகர முதல்வர் எம்.நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

கல்முனை மாநகரசபைக்குட்பட்ட 127 முன்பள்ளிப் பாடசாலை களிலும் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கு நான் உரிய நடவடிக்கைகளை எடுப்பேன் என்று அவர் கூறினார்.

முன்பள்ளி ஆசிரியர்களின் சேவை குறைத்து மதிப்பிட முடியாத ஓர் பணியாகும். அவ்வாறானவர்களின் நலன்கள் நிச்சயம் பேணப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ச)




மட்டக்களப்பு மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட காச நோய் விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று திங்கட்கிழமை ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவு வரை முன்னெடுக்கப் பட்டுள்ளது. இந்த ஊர்வலத்தில் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் வேள்ட் விஷன் நிறுவனத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# யானைகள் தாக்கி நால்வர் காயம்

மட்டக்களப்பு,மார்ச் 25

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று, திக்கோடை கிராமத்தின் குடியிருப்புக்குள் நுழைந்த காட்டு யானைகளின் தாக்குதல்களால் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் காயமடைந்தோர் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று பதில் வைத்திய அத்தியட்சகர் குணராஜசேகரம் தெரிவித்தார். காயமடைந்தவர்கள் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த இரண்டு பெண்களும் இரண்டு ஆண்களும் ஆவர். வீட்டினுள் அவர்கள் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# சம்மாந்துறையில் 12 வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு

அம்பாறை,மார்ச் 25

அம்பாறை , சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவின் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தால் நிர்மாணிக்கப்பட்ட 12 வீடுகள் பயனாளிகளுக்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை கையளிக்கப்பட்டன.

இந்தத் திட்டத்தின் பயனாளிகளாக 2013 ஆம் ஆண்டு சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள 12 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து 12 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டன.

ஒவ்வொரு வீடும் ஒரு லட்சத்து 60,000 ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டன என்று சம்மாந்துறைப் பிரதேச செயலர் ஏ.மன்சூர் தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேச செயலர் ஏ.மன்சூர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை கூட்டுறவு சமூக சேவைகள் அமைச்சர் எம்.ஐ.எம்.மன்சூர், உதவிப் பிரதேச செயலர் ஏ.எம்.அப்துல் லத்தீப் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)

# சமாதான மாயையைக் காட்டி தமிழினத்தை அடக்க முயற்சி

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் குற்றச்சாட்டு

நாட்டில் சமாதானம் நிலவு கிறது என்ற மாயைத் தோற்றத்தை உருவாக்கிஅரசு எமது இனத்தை அடக்க முற்படுகின்றது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபைஉறுப்பினர் த.கலையரசன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலப் போரால் தமிழர்கள் பல்லாயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். பலர் கடத்தப்பட்டு இருக்கின்றார்கள். இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் இதுவரைக்கும் கிடைக்கவில்லை.

அதனால்தான் இன்று ஜெனிவாவில் எமது பிரச்சினை முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளைக் காரணம் காட்டி பல இடங்களைக் கபளீகரம் செய்த அரசு, இன்று நாட்டில் சமாதானம் நிலவுகிறது என்ற மாயையை உருவாக்கி வைத்து எமது இனத்தை அடக்க முற்படுகின்றது.

எதிர்வரும் ஜெனிவா தீர்மானம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை தமிழ் மக்களுக்குச் சாதகமான விதத்தில் அமைய வேண்டும் என்பதற்காகத் தான் இன்று அகிம்சை வழியிலான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த மண்ணிலே நாங்கள் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு போராடவேண்டிய தேவை இருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் இன்றும் போரால் பாதிக்கப்பட்ட எத்தனையோ மக்கள் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று குடியமர முடியாதுள்ளனர். அவர்கள் எந்த அடிப்படைவசதிகளும்இன்றிவாழ்ந்து வருகின்றனர். எத்தனையோ இந்து ஆலயங்கள் உடைக்கப்பட்டு வருகின்றன.

எனவே ஜனநாயகவழியிலான போராட்டங்கள் மூலம்தான் எமது பிரச்சினைகளை சர்வதேச மட்டத்துக்குத் தெரியப்படுத்த முடியும். அதற்கு அனைவரும் ஒற்றுமையுடன் இருந்து செயற்படவேண்டும்- என்றார். (ச-31)

# நூலக உதவியாளருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுங்கள்

## கிழக்கு முதலமைச்சரிடம் வேண்டுகோள்

அம்பாறை, மார்ச் 25

கல்முனை மாநகர சபையின் கீழ் இயங்கும் பொது நூலகங்களில் பத்து வருடங்களுக்கு மேலாக நிரந்தர நியமனமின்றி கடமையாற்றி வரும் நூலக உதவியாளர்கள், ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள மனுவில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

கல்முனை மாநகர சபை நிர் வாகத்தின் கீழ் இயங்கி வரும் பொது நூலகங்களில் கடமையாற்றி வரும் நூலக உதவியாளர்கள், ஊழியர்கள் சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக நிரந்தர நியமனம் இன்றிக் கடமையாற்றி வருகின்றனர்.

இத்தகையவர்களுக்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றக் கட்டளைச் சட்டம் மற்றும் 01/86 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு அமைவாக நியமனங்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறு நியமன விதிமுறையின் கீழ் நியமிக்கப்பட்டவர்களுக்கு பல வருடங்கள் கடந்தும் நிரந்தர நியமனம் வழங்கப்படாமலிருப்பது அநீதியாகும். இவ்வாறு கடமை புரியும் நூலக உதவியாளர்கள், ஊழியர்களது விவரங்கள் தங்களது உள்ளூராட்சி அமைச்சுக்குப் பல தடவைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே பாதிக்கப்பட்டுள்ள இந்த ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

சேவை நலன் பாராட்டு
திருமதி சறோஜாதேவி சிவபாலன்
S.L.T.S-I
(பகுதித்தலைவர், சிரேஷ்ட விஞ்ஞான பாட ஆசிரியர்
யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்)




சேவை விவரம்

| | |
|---|---|
| யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி. | 16.05.1977-09.05.1978 |
| யா/இணுவில் இந்துக்கல்லூரி | 10.05.1978-20.01.1980 |
| யா/பலாலி ஆசிரியர் கலாசாலை | 21.01.1980-31.12.1982 |
| யா/அச்சுவேலி மத்தியகல்லூரி | 01.01.1983-14.01.1985 |
| யா/கோண்டாவில் இந்து மகா வித்தி. | 15.01.1985-01.10.2013 |

எமது பாடசாலையில் கடந்த மூன்று தசாப்தங்களாக மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய சிரேஷ்ட ஆசிரியை திருமதி சறோஜாதேவி சிவபாலன் தனது 36 வருட கால ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார். ஆசிரியை அவர்கள் ஓய்வு காலத்தில் ஆரோக்கியத்துடனும், சிறப்புடனும் வாழ இறை ஆசி வேண்டுவதுடன், இது நாள்வரையான அவரது சேவையயைப் போற்றி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்,
கோண்டாவில். (c/12928)(3.6.4)

அறைகள் வாடகைக்குண்டு
பருத்தித்துறை வீதி, சங்கிலியன் சிலைக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட அறைகள் படிக்கும் அல்லது தொழில் புரியும் பெண் பிள்ளைகளுக்கு வழங்கப்படும்.
தொடர்பு:071 233 1684
(45059)(3.6.4)


மணல் விற்பனைக்கு
யாழ்ப்பாணம், நாவற்குழிப் பிரதேசத்தில் 300 கியூப்புக்கும் அதிகமான மணல் விற்பனைக் குண்டு. சிறந்த விலையில் மொத்தமாகவோ, சில்லறையாகவோ பெற்றுக்கொள்ளலாம்.
உடனடித்தொடர்பு:077 233 0855
(சி/12551)(3.6.4)

மாபெரும் மலிவு விற்பனை
அம்பிகை புத்தக நிலையம்
T.P:077 887 5357
246, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
24.03.2014 முதல் 31.03.2014 வரை
1) பழைய புதிய மருத்துவ நூல்கள்
2) சட்டம், CIMA, சம்பந்தமான நூல்கள்
3) தமிழ், ஆங்கில பாடநூல்கள்
4) பழைய சஞ்சிகைகள்
5) பலவகையான அகராதிகள் உட்பட
இன்னும் பல வகையான இலங்கை, இந்திய நூல்கள்.
வாருங்கள் வந்து பாருங்கள்
15% - 20% - இற்கும் மேற்பட்ட விலைக்கழிவு.
(45997)(3.6.4)

# மாகாணசபைத் தேர்தலில் பிளாஸ்ரிக் வாக்குப் பெட்டி

கொழும்பு,மார்ச் 25

மாகாணசபைத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களில் பிளாஸ்ரிக் வாக்குப் பெட்டிகளைப் பயன்படுத்துவதற்கு தேர்தல்கள் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.



கோப்புப்படம்

கொழும்பு மற்றும் மொரட்டுவ மாநகர சபை எல்லை பிரதேசங்களுக்குள் நிறுவப்படும் வாக்களிப்பு நிலையங்களில் பிளாஸ்ரிக் வாக்குப் ஙீபெட்டிகள் பயன்படுத்தப்படவுள்ளன என்று பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்தார்.

இந்த வாக்களிப்பு நிலையங்களில் 250 பிளாஸ்ரிக் வாக்குப் பெட்டிகள் பயன்படுத்தப்படவுள்ளன என்று அவர் கூறினார். (ச)

# பிரேரணையை ஆதரித்தால் பொறுப்புக் கூற வேண்டும்

## இந்தியாவுக்கு நெருக்கடி வரும்; ஆங்கில நாளிதழ் தகவல்

**அனைத்துலக விசாரணை ஒன்று நடத்தப்பட்டால், இந்தியாவினது தலையீடுகள் குறித்தும் விசாரிக்க வேண்டிய நிலை ஏற் படும் என்று ஜனா திபதியின் செயலர் லலித் வீர துங்க ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருந்தார்.**

கொழும்பு,மார்ச் 25

ஜெனிவாவில் தமக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணையை இந்தியா ஆதரித்தால், இந்தியாவும் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டும் என்ற பிரச்சினையை இலங்கை எழுப்பவுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறவும், விசாரணை நடத்தவும் வலியுறுத்தும் பிரேரணை, மீதான வாக்கெடுப்பு நாளைமறுதினம் வியாழக்கிழமை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நடைபெறவுள்ளது.

இந்த வாக்கெடுப்பின்போது, பிரேரணையை ஆதரித்தே இந்தியா வாக்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில், இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஆதரித்து இந்தியா வாக்களித்தால், இந்தியாவின் பொறுப்புக்கூறல் பிரச்சினையை இலங்கை எழுப்பும் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் பிரிவினைவாதத்துக்கு ஊக்கமளித்தமை, இந்தியப் படைகளின் தலையீடுகள், உள்ளிட்ட பல விவகாரங்களில் இந்தியாவும் பொறுப்புக் கூற வேண்டும் என்று இலங்கை வலியுறுத்தலாம் என்று ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது.

அனைத்துலக விசாரணை ஒன்று நடத்தப்பட்டால், இந்தியாவினது தலையீடுகள் குறித்தும் விசாரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# காலனித்துவ சூழ்ச்சியை முறியடிக்க வேண்டும்

## திஸ்ஸவிதாரண வேண்டுகோள்

கொழும்பு,மார்ச் 25

நாட்டுக்கு எதிரான காலனித்துவ சூழ்ச்சிகளை முறியடிப்பதற்கு அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என்று சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண வேண்டுகோள் விடுத்துள்ளார்.


திஸ்ஸ விதாரண

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சூழ்ச்சித் திட்டம் வெற்றியளித்தால் அதனால் நாட்டு மக்களே பாதிக்கப்படுவர்.

அரசின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க மாகாண சபைகளின் அதிகாரத்தை அரசுக்கு வழங்க வேண்டியது அவசியமானது.

போர் இடம்பெற்ற காலத்தில் ஏராளமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன. அப்போது மனித உரிமை மீறல்கள் தொடர்பில் எவரும்குரல்கொடுக்கவில்லை- என்றார். (ச)

# அரசுக்கு எதிராகப் பரப்புரை; தூதரகம் ஒன்றால் நிதி ஒதுக்கீடு

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 25

அரசுக்கு எதிராகப் பரப்புரை செய்வதற்காக வெளிநாட்டு தூதரகமொன்று பத்தாயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இவ்வாறு வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிராண்ட்பாஸில் நடைபெற்ற நிகழ்வுஒன்றில்கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.


விமல் வீரவன்ச

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசுக்கு எதிராக பரப்புரை செய்வதற்காக இந்தப் பணம் பரப்புரை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சில பரப்புரை நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து இந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டுள்ளன.

அரசுக்கு எதிரான விளம்பரங்களைப் பரப்புரை செய்யும் நோக்கிலேயே பணம் வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் மத்தியில் அரசின் மீது அதிருப்தி ஏற்படுத்த வேண்டும் என்பதே இந்தத் தூதரகத்தின் பிரதான இலக்காக அமைந்துள்ளது-என்றார். (ச)

# புரோட்டீன் அடங்கிய மீன் சூப் கட்டிகள் விரைவில் அறிமுகம்

*கொழும்பு,மார்ச் 25*

*புரோட்டீன் சூப் கட்டிகளை சந்தையில் அறிமுகம்செய்து வைக்க கடற்றொழில், நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு தயாராகியுள்ளது.*

*அமைச்சர் ராஜித சேனாரத்னவின் உத்தரவை அடுத்து மீன் சூப் கட்டிகளை தயாரிப்பது தொடர்பான ஆராய்ச்சியைப் பரீட்சார்த்தமாக மேற்கொள்வதற்கான பணி கைத் தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது.*

*இந்த சூப் உற்பத்தி தொடர்பான ஆய்வு, ஆராய்ச்சி, மூலப்பொருள்கள், இரசாயனப் பொருள் போன்றவற்றுக்கு மூன்றரை லட்சம் ரூபா வரை செலவாகும். அதற்கு அமைச்சு முற் பணத்தையும் செலுத்தியுள்ளது.*

*மீன்கள் மூலமே புரோட்டீன் தேவையை பூர்த்தி செய்யலாம் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். (ச)*

# போகம்பரை சிறைச்சாலை பார்வையிடும் திகதி நீடிப்பு

## இதுவரை சுமார் 3 லட்சம் பேர் பார்வை

கொழும்பு,மார்ச் 25

போகம்பரை சிறைச்சாலையை பொதுமக்கள் சென்று பார்வையிடுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கால எல்லை, எதிர்வரும் 29 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது..


போகம்பரைச் சிறைச்சாலை

கடந்த 15ஆம் திகதி முதல் போகம்பரை சிறைச்சாலையை மக்கள் நேரில் சென்று பார்வையிடுவதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் அனுமதி வழங்கியிருந்தது.

இதுவரை சுமார் மூன்று லட்சம் பேர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மாத்திரம் 84,000 பேர் சென்று பார்வையிட்டதாக சிறைச்சாலைகள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சிறைச்சாலையிலிருந்த சிறைக்கைதிகள் தும்பறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ச-22)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் கிருஸ்ணபிள்ளை கணேசன்



மண்ணில் 21.12.1939
விண்ணில் 23.02.2014

நாள்கள் முப்பத்தொன்று
மறைந்துவிட்டன அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்?
மறையுமா உங்கள் பாச நினைவு?
எங்களை நிர்க்கதியாய் தவிக்கவிட்டு
எங்கு ஓடி மறைந்துவிட்டீர்கள்.

கடந்த 23.02.2014 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்
கிருஸ்ணபிள்ளை கணேசன்
அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியை
இன்று (25.03.2014) செவ்வாய்க்கிழமை
நடைபெற இருப்பதால்
அத்தருணம் தாங்களும் வருகை தந்து
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து இடம்பெறும்
மதியபோசன உபசாரத்திலும் கலந்து
சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காருவன்,
சுழிபுரம்.

குடும்பத்தினர்.

(46079)(7.6.3)

ஆறாம் ஆண்டு நினைவலைகள்



சீவனாய் 30.08.1930
சிவமாய் 25.03.2008

திதி:-சதுர்த்தி

அமரர் முருகேசு துரைராஜா

ஆண்டுகள் ஆறு மறைந்தாலும்
கண்ணீர் நிற்கவில்லை அப்பா!
ஆயிரம் உறவுகள் இருந்தும் என்ன
உங்கள் பாசம் போல் வருமோ
நாங்கள் வாழும் காலங்கள் வரை
உங்கள் நினைவுகள் என்றும் எம்மைவிட்டு அகலாது
உங்கள் ஆத்ம சாந்திக்காக வணங்குகிறோம்!

95, சிவன் பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(45883)(2.6.3)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இனமுறுகல்களைத் தவிர்க்க உள்ளார்ந்து செயற்பட முனைவது இனி எப்போது...?

சிறுபான்மை இனத்தவர்கள் என்றால், எங்கும் எதிலும் அவர்களின் எந்த விடயத்திலும் தலையிடலாம், தடுக்கலாம், தாக்கலாம் என்ற மனோ பாவமும், எவ்வித அச்சமின்மையும் பெரும்பான்மை இன மக்களிடையே வளர்ந்து வருகிறது.

அரசாங்கத்தின் பாதுகாப்பு அலகுகள் அதற்குத் துணை போவன ஆகவும், தூண்டுதலாகச் செயற்படுவனவாகவும் ஓங்கி உயர்ந்து நிற்கின்றன.

நாட்டின் பல பகுதிகளிலும் மிகக் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நாட்டின் சிறுபான்மை இன மக்களின் வாழ்வாதாரங்களைத் தட்டிப் பறிக்கும் அநியாயமான செயற்பாடுகள் பரவலாக நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றைக் கண்டும் காணாத பாவனையில் செயற்படுகிறது கொழும்பு அரசு.

அவற்றில் ஆகப் பிந்தியதே, திருகோணமலை மாவட்டம் குச்சவெளி ஜயா நகரில் இடம்பெற்ற அடாத்தான சம்பவம். ஜயாபுர பிரதேசத்தின் சல்லிபுர முதற்கொண்டு தொடுவாய் வரையான கடற் பகுதியில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பான்மை இன மீனவர்கள், படையினரின்- இராணுவத்தினரின்- கடற்படையினரின்- உதவியுடன் கடற்றொழிலை மேற்கொள்கின்றனர்.

**அதனை ஜயா நகர் மீனவர்கள் ஆட்சேபித்தபோது, எதிர்ப்புத் தெரிவித்துத் தடுக்க முயன்ற வேளை, படையினரும், பொலிஸாரும் அவர்கள் மீது தாக்குதல் நடத்தி உள்ளனர்.**

**எமது பிரதேசத்தில், ஆயிரக் கணக்கான மக்களின் ஜீவனோபாயத் தொழிலாக கடற்றொழிலே விளங்குகிறது. வெளி மாவட்ட மீனவர்கள் இங்கு வந்து தொழில் செய்வதால் எமது மக்கள் முழு அளவில் பாதிக்கப் படுகிறார்கள்-**

**வெளி மாவட்ட மீனவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட பிரதேசத்தையும் தாண்டி, எமது பகுதிக்குள் அத்துமீறித் தொழில் புரிகிறார்கள். அதனை ஆட்சேபித்தமைக்குப் பலனாகவே தமது பிரதேச மீனவர்கள், பொலிஸாராலும், இராணுவத்தினராலும் தாக்கப்பட்டுள்ளனர்- என்று குச்சவெளி பிரதேச சபைத் தவிசாளர் மேலும் தகவல் வெளியிட்டுள்ளார்.**

ஜயாபுர மீனவர்கள் வெளியாரின் தொழில் தலையீட்டை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வேளையில், அவர்களைக் கலைந்து செல்லுமாறு தெரிவித்து மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு தரப்பினரும் தாக்குதல் நடத்தி உள்ளனர்.

சுமார் ஒரு மாத காலத்திற்கு முன்னரும், வெளி மாவட்ட மீனவர்களின் அத்துமீறல்கள், ஆக்கிரமிப்புக்கள் குறித்து குச்சவெளி, புல்மோட்டைப் பகுதிகளின் கடற்றொழிலாளர் கள், கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு மகஜர் அனுப்பியிருந்தனர். அதன் பொருட்டு எந்தவித சாதகமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய(தமிழக) மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறித் தொழில் செய்வதனைத் தடுக்கும் வகையில், தமிழக மீனவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படும் என்று மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்னா எச்சரித்திருக்கிறார்.

வடக்கிலும் கிழக்கிலும் தென்பகுதி மீனவர்கள் தொழில் ஆக்கிரமிப்பில் ஈடுபடுவதனைத் தட்டிக் கேட்க எவரும் இல்லை என்றாகி விட்டது. நாடாளுமன் றிலும் சரி, மாகாண சபைகளிலும் சரி, வடக்கு, கிழக்கின் கடல் வளத்தை அந்தந்த மாகாணத் தொழிலாளர்கள் தக்கவாறு பயன்படுத்துவதற்கு வகை செய்யும் போக்கை- விருப்பத்தைக்- காணோம்!

1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக் கலவரத்திற்கு முன்னர், வடக்கு, கிழக்குக் கடல் வளம் அந்தந்த மாகாண மக்களின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு செலுத்தியது. இறுதிப் போரின் பின்னர் இரண்டு மாகாணங்களின் கடல் வளங்களும் தென்னிலங்கை முகவர்களினதும் முதலாளிகளினதும், அரச தரகர்களினதும் வருவாய்க் குதமாகி விட்டன!

வடக்கு, கிழக்கு உட்பட ஒன்பது மாகாணங்களிலும், மாகாண சபைகள் இயங்குவதால், கடல் வளத்தை அவை தத்தமக்குப் பயன்படுத்த வகை செய்து அவற்றின் பொருளியல் வளர்ச்சிக்கு முதலிடமும் "மத்திய அரசான" கொழும்பிற்கு குறிப்பிட்ட அளவு பங்கும் வழங்குவது குறித்துச் சிந்திக்கக் கூடாதா?

ஜயா நகர் "மோதல்" போன்றவற்றைத் தவிர்க்க அதுவே உகந்த வழி. இன முறுகல்களுக்கு அரசு முட்டுக் கொடுக்காமல், நேர்மையுடன் இவ்வழி சிந்திப்பது எப்போது? அதில் உள்ளார்ந்து உழைக்கும் நெஞ்சுறுதி பெறுவதற்கு மேலும் காலம் தேவை இல்லையே....?



# பாதுகாப்பற்ற நிலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது மஹிந்த அரசு

## சாரு லற்றா ஹொக்

*ஐக்கிய இராச்சியத்தை தளமாகக் கொண்டுள்ள சர்வதேச சிறுவர் படை என்ற தொண்டு நிறுவனத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான திட்ட முகாமையாளர் சாரு லற்றா ஹொக். தற்போது ஜெனிவாவில் நடைபெற்று வரும் மனித உரிமைச் சபையின் கூட்டத்தொடரில் கலந்து கொண்டு உலகெங்கும் படைகளில் இணைக்கப் பட்டுள்ள சிறுவர்களின் உரிமைகளுக்காகவும், போர் வலயங்களில் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகிவரும் பெண்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்து வருகின்றார். முரண்பாடு நிலவும் பிராந்தியங்களில் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாவது தொடர்பிலான ஐக்கிய இராச்சிய அரசினால் முன்னெடுக்கப் பட்டுள்ள சிறப்புத் திட்டத்தில் இணைந்து பணியாற்றி வரும் அவர் இலங்கையில் ஆயுதப் படையினரின் துன்புறுத்தல்களுக்கு ஆளாகி வரும் தமிழ்ப் பெண்கள் தொடர்பில் விசேட செயற்றிட்டத்தையும் மேற்கொண்டு வருகின்றார்.*

செவ்வி கண்டவர்:
சண் தவராஜா

அமெரிக்கா மூன்றாவது தடவையாகப் பிரேரணையைச் சமர்ப்பிக்கின்றது. முன்னைய இரண்டு பிரேரணைகளின் போதும், சர்வதேச சுயாதீன விசாரணை தொடர்பாக எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. உறுப்பு நாடுகள் சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்றுக்கு ஆதரவு வழங்கியுள்ளமை முக்கியமானது. இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாகப் போதிய வாக்குகளைப் பெற முடியாமற் போனால் மாத்திரமே அங்குள்ள நிலைமையில் மாற்றம் எதுவும் ஏற்படாது.

ஆனால் பிரேரணையை நிறைவேற்றுவதற்குப் போதிய ஆதரவு உள்ளதாகவே நான் கருதுகிறேன். பிரேரணையின் வாசகங்கள் மாற்றப்பட்டுள்ளன. பிரேரணை வலுக்குறைக்கப்பட்டுள்ளது. சர்வதேச விசாரணை என்ற அம்சத்துக்குப் போதிய ஆதரவு அற்ற நிலை உள்ளது. மனித உரிமைச் சபையினால் மேற்கொள்ளப் படும் விசாரணை தொடர்பாகவே கூறப்பட்டுள்ளது. அதற்கு இலங்கை அரசைச் சம்மதிக்க வைக்க வேண்டிய தேவை உள்ளது. சாட்சியங்களைத் திரட்டுதல் உட்படப் பல பணிகள் ஆற்றப்பட வேண்டி உள்ளன. அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது.

**ஆனால் இது முதலாவது அடியே. தீர்மானம் நிறைவேற்றப்படுமானால் நீண்ட காலத்தில் பொறுப்புக் கூறுதலை நோக்கி அது இட்டுச் செல்லும்.**

### தமிழ் மக்களின் நிலையில் முன்னேற்றம் ஏற்படுமா?

அதனைக் கூறுவது கடினமானது. ஏனெனில், நிறைவேற்றப்படுகின்ற தீர்மானமானது, பொறுப்புக் கூறலுக்கும், குற்றங்களுக்கான தண்டனை வழங்கலுக்கும் நேரடியாக இட்டுச் செல்லவில்லை. இறுதியாக, இலங்கை நிலைமைகள் முன்னேற வேண்டுமானால், பொறுப்புக் கூறுதல் என்ற விடயம் கவனிக்கப்பட்டாக வேண்டும். குற்றங்கள் செய்தவர்கள் - மானுடத்துக்கு எதிரான குற்றங்களைப் புரிந்தவர்கள், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறியவர்கள், சர்வதேச மனிதஉரிமைச் சட்டங்களை மீறியவர்கள் - நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். இவை நடைபெறாத வரைக்கும் மாற்றங்கள் எதனையும் எதிர்பார்க்க முடியாது.

**எனினும், பொறுப்புக் கூறலுக்கான நிலையை அடைவதற்கான நீண்ட பாதையில் முதற்படியே இது.**

**பெண்களுக்கு எதிரான அடக்கு முறைகளைத் தடுப்பதற்கான சர்வதேச பொறிமுறைகள் ஏதாவது உள்ளனவா?**

வடக்கு, கிழக்கில் வாழும் பெண்கள் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கான பிரதான காரணம், அவர்கள் துணையின்றி இருப்பதுவே. அவர்களே தங்களுக்கான வாழ்வாதாரங்களைத் தாங்களே தேட வேண்டிய நிலையில் உள்ளனர். அந்தப் பிரதேசத்தில் உள்ள பாதுகாப்புப் பொறிமுறையும், இராணுவமயமாக்கலும் தவிர்க்க இயலாத விதத்தில் படையினரோடு அவர்கள் அன்றாடம் பழக வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளன. விடுதலைப் புலிகளோடு தொடர்புகளைப் பேணினார்கள் எனத் தடுத்து வைக்கப்பட்டுப் படையினரின் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு ஆளாவதற்கும் அப்பால், அங்கே நிலவும் சூழல் பெண்கள் பாலியல் ரீதியான சுரண்டலுக்கு ஆளாகும் நிலையை உருவாக்கி வைக்கிறது.

> வடக்கு, கிழக்கில் வாழும் பெண்கள் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கான பிரதான காரணம், அவர்கள் துணையின்றி இருப்பதுவே. அவர்கள்,தங்களுக்கான வாழ்வாதாரங்களைத் தாங்களே தேட வேண்டிய நிலையில் உள்ளனர்.

இந்த நிலைமையில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டுமானால் முதலாவதாகப் பொறுப்புக் கூறும் பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும்.

இரண்டாவதாக, ஐக்கிய இராச்சியம் வன்முறை முரண்பாடு நிலவும் பிராந்தியங்களில் பாலியல் துஷ்பிரயோகத்தை தடுப்பது தொடர்பில் ஒரு பெரிய திட்டத்தை ஆரம்பித்துள்ளது. அரசின் இந்த வருடத்துக்கும் அடுத்த வருடத்துக்குமான ஒரு பிரதானமான திட்டமாக அது உள்ளது. ஐக்கிய இராச்சியம் இது தொடர்பில் பெண்களுக்கு ஆதரவு வழங்கக் கூடிய, பெண்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கக் கூடிய தொண்டு நிறுவனங்களுக்கு பொருளாதார உதவிகளை வழங்கி வருகின்றது. முரண்பாடு நிலவும் பிராந்தியங்களில் வசிக்கும் பெண்கள் தமது தேவைகளுக்காக பாதுகாப்புப் பிரிவினரை நாடுவதைத் தடுப்பதே இதன் நோக்கம்.

### விடுதலைப் புலிகளின் அபாயம்

மஹிந்த ராஜபக்ஷ அரசு தொடர்ச்சியாக ஒரு பாதுகாப்பற்ற நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. தங்களுடைய சொந்த ஊழல் செயற்பாடுகள், தவறான பொருளாதார முகாமைத்துவம் காரணமாகத் தெற்கில் அரச அதிகாரத்துக்கு ஏற்பட்டுள்ள சவால்கள், இராணுவ அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய தேவை போன்ற காரணங்களுக்காக விடுதலைப் புலிகள் தொடர்பான அச்சம் என்ற விடயத்தை வைத்திருக்க வேண்டிய நிலைமை உள்ளது. இத்துணை பெரிய இராணுவத்தைத் தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டுமானால், அதற்கொரு எதிரியை உருவாக்கி வைத்திருக்க வேண்டும். அதனையே நாங்கள் தற்போது இலங்கையில் கண்டு கொண்டிருக்கிறோம்.

# பகை புகை மிகை நகை



மருத்துவர்
யமுனானந்தா

புகைபிடிக்கும் பழக்கம் எமது சமூகத்தில் மேலைத்தேய ஆட்சியின் தாக்கத்தினாலேயே ஏற்பட்டது. புகைத்தலை விலக்குவதால் துன்பம் இல்லாத வாழ்க்கை அமையும் என்பதை "பகை புகை மிகை நகை" என்ற சொற்றொடர் விளக்கப்படுத்துகின்றது. இந்தச் சொற்றொடரை வர்த்தக நிலையங்களில் புகைத்தல் தடை செய்யப்பட்டு உள்ளது என்ற வார்த்தைக்குப் பதிலாக உபயோகித்தால் உண்மையில் புகைப் பிடிப்பவர்கள் கூட கோபம் கொள்ளமாட்டார்கள்.

புகைப்பிடிப்பவரின் வாய் வெப்பத்தினால் கருகி, செவ்விதழ்கள் கருமையாகிக் காணப்படும். அவர்களது செயல்களும் கருமையாக இருக்கும். நடத்தை மாற்றங்கள் காணப்படும். இது ஓர் ஆபத்தான சக்கரமாக மாறி புகைப்பிடித்தலுடன் மதுபானம் பாவித்தல், சமூகவிரோத செயல்கள், குழு அடாவடி, போதைப் பொருள் பாவித்தல் என்பன இசைந்து காணப்படும். இவற்றை அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணம் முதல் வவுனியா வரை மிகவும் தெளிவாகக் காணலாம். சமூகத்தில் வன்முறைகள் அதிகரிப்பதற்கு புகைத்தல் பாவனையும் மறைமுகக் காரணியாக உள்ளது.

எமது சுவாசச் சிற்றறைகள் 80 சதுரமீற்றர் பரப்பளவைக் கொண்டவை. இவை உடலுக்கு உயிர்வாழ அத்தியாவசியமான ஒட்சிசனைச் செங்குருதிக் கலங்களுக்கு கொடுத்து, காபனீரொட்சைட்டை குருதியில் இருந்து அகற்றுகின்றன. சுவாசச் சிற்றறைகள் புகைப்பிடிக்கும்போது நெருப்பினால் சிதைக்கப்படல், எமது சிதைக்கு நாமே கொள்ளி வைக்கும் தன்மை போன்றது. இதனையே பலர் விரும்பிச் செய்கின்றனர். மேலும் விலை கொடுத்துச் செய்கின்றனர். இதனால் பொருளாதார நட்டத்துக்கு மேலாக நோய் நிலையும் ஏற்படுகின்றது.

புகைப்பிடிப்பவர்களில் அரைவாசிப் பேர் அதனாலேயே இறக்கின்றனர். மேலும் புகைப்பிடிப்பவர்களுக்கு அருகில் இருப்பவர்களும் புகைப்பிடிப்பவர்களை விட அதிக அளவில் நோய்ப்பாதிப்புக்கு ஆளாகின்றனர். இதனாலேயே பொது இடங்களில் புகைத்தல் தண்டனைக்கு உரிய குற்றமாகக் கருதப்படுகின்றது. புகைத்தலை ஊக்குவித்தாலும் குற்றமே. ஆனால் அது இன்னமும் சட்டரீதியாக்கப்படவில்லை.

புகைப்பிடிப்பதனால் சுவாசப்புற்று நோய், சுவாசப் பாதைப் புற்றுநோய், சுவாசப்பை அழற்சி, இதயப் பலவீனம், மாரடைப்பு, பாரிசவாதம், காலுக்குச் செல்லும் இரத்த ஓட்டம் தடைப்படல், வாய்ப்புற்றுநோய், களப்புற்றுநோய், இரைப்பைப்புற்றுநோய், இரைப்பைப்புண், சிறுநீர்ப் பைப்புற்று நோய், என்புமுறிவு, காசநோய், தோல் அழற்சி, கண்புரை ஏற்படல், தோல் சுருங்குதல் , செவிட்டுத்தன்மை ஏற்படல், பற்சிதைவு, விரல் நிறம் மாறல், கருப்பைக் கழுத்துப் புற்றுநோய், ஆண்களின் விந்து உறுப்புக்கள் செயலிழப்பு என்பன ஏற்படும். இவை புகை பிடிப்பவர்களுக்கு அருகில் இருந்து புகையினைச் சுவாசிப்பவர்களுக்கும் ஏற்படுகின்றது.

புகைபிடிக்கும் போது வெளியேறும் புகையில் 4,000 வரையிலான இரசாயனப் பதார்த்தங்கள் காணப்படுகின்றன. இதில் 60 வகையான இரசாயனப் பதார்த்தங்கள் புற்று நோயை ஏற்படுத்தும் தன்மையை உடையவை. இவற்றில் ஐதரசன் சயனைட்டு, அமோனியம், ஆசனிக், டி.டி.ரி, மெத்தனோல், காபன் மொனோக்சைட், பென்சீன், தார், நிக்கொட்டின் போன்றவை முக்கியமானவையாகும். புகைப் பிடிக்கும் பிறழ்வு நடத்தையில் இருந்து விடுபட வேண்டுமாயின், அதற்கான சமூக உளக்காரணிகளை ஆராய்தல் வேண்டும்.


புகைப்பிடிப்பவர்களுக்கு அருகில் இருப்பவர்களும் புகைப்பிடிப்பவர்களை விட அதிக அளவில் நோய்ப் பாதிப்புக்கு ஆளாகின்றனர்.

சில குடும்பங்களில் பெற்றோர், சகோதரர்கள் புகைப்பிடிக்கும் பழக்கம் உடையவர்களாகக் காணப்படின், பிள்ளைகளும் புகைப்பிடிக்கும் பழக்கத்துக்கு ஆளாகின்றனர். புகைப்பிடித்தால் எவ்வாறு இருக்கும் என்கின்ற ஆவல், சிறுவர்களைப் புகைப்பிடிக்கத் தூண்டுகின்றது. இதற்கு திரைப்படங்களில் வரும் காட்சிகளும், விளம்பரங்களில் வரும் காட்சிகளும் காரணமாக இருக்கின்றன. உதாரணமாக 1978 ஆம் ஆண்டில் "சுவையுங்கள் திரிரோசஸ் புகையின்பம்" என்ற விளம்பரம் பிரபல்யம் பெற்று இருந்தது. 1980 ஆம் ஆண்டில் பிற்பகுதியில் விளையாட்டு வீரர்களது படங்கள் புகைத்தலுடன் இணைந்து இருந்தது. ஆனால் இந்நிலை தற்போது மாறி இத்தகைய விளம்பரங்கள் சட்ட ரீதியாகத் தடை செய்யப்பட்டுள்ளதுடன் புகைப்பிடித்தல், உடல் நலத்துக்கு கேடாகலாம் என்ற விளம்பரம், புகைப் பெட்டிகளில் பொறிக் கப்பட்டு வந்தது. மிக அண்மையில் புகைப் பெட்டியின் 50 வீதமான பகுதியில் புகைத்தலால் ஏற்படும் உடற் பாதிப்புக்கள் பற்றிய படங்களைப் பொறிக்குமாறு சட்ட ரீதியாகத் தீர் மானிக்கப்பட்டுள்ளது. அடுத்து பிரதேச மட்டத்தில் புகைத்தலைத் தவிர்ப்பதற்காகச் சில தினங்களில் புகைப் பொருள்களின் விற்பனையை நிறுத்தும் நடைமுறையும் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. இவையாவும் மிகவும் ஆரோக் கியமான அணுகுமுறைகளாகும்.

சகபாடிகளின் சேர்க்கையால் பலர் புகைப்பிடிக்கும் பழக்கத்தை பழகிக்கொள்கின்றனர். இது பொதுவாக பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், ஒன்றாக வேலை பார்ப்பவர்களிடையே ஏற்படுகின்றது. ஆனால் அண்மையில் இது பாடசாலை உயர் வகுப்பு மாணவர் களிடையேயும் பரவலாகக் காணப்படுகின்றது. மரண வீடு, திருமண வீடு மற்றும் களியாட்டங்களின் போது இலவச மாக புகைப்பிடிக்கக் கிடைக்கும் வாய்ப்பே பொதுவாக சிறுவர்கள், இளைஞர்களிடையே புகைப் பழக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

புகைப்பிடிக்கும் பழக்கம் தங்களுக்கு சமூகத்தில் உயர் அந்தஸ்தைத் தரும் என்ற முரண் நோக்கில் சிலர் புகைப்பிடிக்கும் பழக்கத்தை ஆரம்பிக்கின்றனர். மேலும் சிலர் தமது சுதந்திரத்தின் எல்லையை தாம் புகைக்கும் புகையினால் வரையறை செய்ய முயல்கின்றனர்.

உளவியல் ரீதியில் ஆராயும்போது, சிறுவயதில் தாய்ப்பால் குடித்தலில் ஏற்பட்ட இடையூறுகள் பிற்காலத்தில் புகை பிடிக்கும் பழக்கத்துக்கு ஆளாகும் ஏதுநிலையினை உருவாக்கி இருந்தமையும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே இத்தகை யவர்களில் விசேட கவனம் எடுப்பதால் அவர்கள் புகைத்தல் பழக்கத்துக்கு ஆளாவதைத் தடுக்கலாம். மேலும் சிலர் சுவைப்புலன், தொடுகைப்புலன் என்பவற்றில் ஏற்படும் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் முகமாகப் புகைப்பிடித்தலில் ஈடுபடுகின்றனர்.



புகைப்பிடிப்பவரின் வாய் வெப்பத்தினால் கருகி, செவ்விதழ்கள் கருமையாகிக் காணப்படும். அவர்களது செயல்களும் கருமையாக இருக்கும். நடத்தை மாற்றங் கள் காணப்படும். இது ஓர் ஆபத்தான சக்கரமாக மாறி புகைப்பிடித்தலுடன் மதுபானம் பாவித்தல், சமூகவிரோதச் செயல்கள், குழு அடாவடி, போதைப் பொருள் பாவித்தல் என்பன இசைந்து காணப்படும். இவற்றை அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணம் முதல் வவுனியா வரை மிகவும் தெளிவாகக் காணலாம். சமூகத்தில் வன்முறைகள் அதிகரிப்பதற்கு புகைத்தல் பாவனையும் மறைமுகக் காரணியாக உள்ளது.

---

## தவக்காலச் சிந்தனை

## மனிதம் காத்து புனிதமடைவோம்

இயேசு தனது திறந்த பணி வாழ்வை ஆரம்பித்த போது கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சீமோனையும், அந்திரேயாவையும் " என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்" (மாற் 1:17) என அழைத்தார். அந்தச் சீடர் வழியாக இந்த அழைப்பு எமக்கும் தரப்பட்டுள்ளது. மனிதரைப் பிடிப்பது என்பது சிறைப்படுத்தல், துன்புறுத்துதல், அழித்தல் எனப் பொருள்படுவதா? நாம் ஒவ்வொருவரும் நன்மை பயக்கக் கூடிய எமது அன்றாட செயற்பாடுகளினால் மனிதரை ஈர்ப்போ ராக மாற வேண்டும். இறைவழிக்கு அழைத்துச் செல்லும் கருவிகளாக பணிபுரிய வேண்டும். அன்பு மனிதப் பண்பு, புரிந்துணர்வு, மன்னிப்பு என்னும் கனிவுள்ள சங்கிலிகளால் அனைவரையும் பிணைத்து மனித மாண்பை வளர்க்க வேண்டும். இதுவே இறை வன் கூறும் மனிதரைப் பிடிக்கும் நல்வழிகள்.

இவ்வுலகு இப்போது இருப்பதுபோல் நெடுநாள் இராது. இனியுள்ள காலம் குறுகியதே. இறைவனால் எமக்குத் தரப்பட்டுள்ள வாழ்வின் காலத்தை தகுந்த முறையில் பயன்படுத்துவோம். இவ்வுலக செல்வங்களுக்கும் அதிகாரம், பதவி, இன, மொழி மேலாண்மை, புகழ், வெற்றிக்களிப்பு என்பவற்றுக்கும் முன்னுரிமை கொடுப்பதை விடுத்து மனிதத்துக்கு முதலிடம் கொடுத்து சமநீதி காத்து இயேசுவின் அழைப்புக்கு சாட்சிகளாக மாறுவோம்.

யே.சுபீட்சன், கொழும்புத்துறை

---

## மின்சார சபையினரின் கவனத்துக்கு

வாசகர் திருமுகம்

கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை மின்சார சபையின் அலுவலகத்தில் மாதாந்தம் மின் கட்டணத்தைச் செலுத்தி வருபவர்களில் நானும் ஒருவன். ஒழுங்காக மாதா மாதம் மின் கட்டணம் செலுத்தப்படும். ஆனால் மின் கட்டணங்கள் அடுத்து வரும் மாதத்தில் நிலுவையாகக் காட்டப்பட்டு இரண்டு மாதங்களையும் சேர்த்து கணக்கிட்டு அனுப்பி வைக்கிறார்கள். கடந்த ஜனவரி மாத மின் கட்டணக் கணக்கு கூற்று பெப்ரவரி 15 ஆம் திகதி சனிக்கிழமை கைக்குக் கிடைத்தது. 17 ஆம் திகதி திங்கட்கிழமை அதன்படியான தொகை என்னால் செலுத்தப்பட்டது.


ஆயினும் பெப்ரவரி மாதத்துக்கான கணக்குக் கூற்று மார்ச் 16 ஆம் திகதி கிடைக்கப் பெற்றபோது அதில் முன்னைய மாதத்தின் நிலுவையையும் சேர்த்தே கணக்கிட்டு அனுப்பிவைத்துள்ளனர்.

மாதாந்தம் கழிக்கப்படாமை தொடர்பாக முன்பொருதடவை சுட்டிக்காட்டிய போது, பிரதி மாதமும் 20 ஆம் திகதி கணக்கு முடிக்கப்படும். அதற்கு முன்னதாகச் செலுத்தினால் அந்த மாதத்திலேயே கழித்து கணக்கிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இதற்கமைய கணக்குக் கூற்று கிடைத்து இரண்டாம் நாளே கட்டணம் செலுத்தப்பட்டும்,குறித்த தொகை கழிக்கப்படாமலே அனுப்பப்பட்டுள்ளது.

தொலைக்காட்சிச் செய்தியில் மின்சார சபையின் அலுவலகங்களில் கட்டணங்கள் செலுத்தப்படும்போது உடனுக்குடன் கழிப்பதற்கு வசதியாக கட்டணம் செலுத்தும் நடைமுறை கணினி மயப்படுத்தப்பட்டுள்ளது என்கின்றனர். வங்கிகள், தபால்நிலையங்கள் ஆகியனவற்றில் செலுத்தும் வசதிகள் இருந்தும் உடனுக் குடன் கழிக்கப்படும் என்பதாலேயே இவர்களிடம் செல்கிறோம். இவர்களும் இப்படி நடந்து கொண்டால் நாங்கள் என்னதான் செய்வது?

மேலும் மின் கட்டணம் செலுத்துவதற்கு சிவப்பு நோட்டீஸ் அதாவது இறுதி அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னர் கட்டணத்தைச் செலுத்த வந்தவர்களுடன், ஒழுங்காக முறைப்படி உரிய வேளையில் மாதாந்தம் செலுத்துபவர்களையும் ஒன்றாகவே நடத்துவது பெரும் வேதனைக் குரியது. பெருந்தொகையை நிலுவையாக வைத்திருந்தவர்கள் நிறைந்த வரிசையில் எவ்வளவு நேரம் தான் கால் கடுக்க நிற்பது? மாதாந்தம் ஒழுங்காக செலுத்தியமைக்காக தண்டனையா இது? வெளிப்பார்வைக்கு நாங்களும் சிவப்பு நோட்டீஸ்காரர் என்றே கணிக் கப்படுகிறது. "இவ்வளவு பேரும் சிவப்பு நோட்டீஸ் வந்த பின்னரே செலுத்துகிறார்கள். நாங்களும் அப்படிச் செலுத்தலாம் தானே" என்ற எண்ணமும் ஒழுங்காகச் செலுத்துவோருக்கு ஏற்பட இது வழிவகுக்கும் அல்லவா?

*கி.வே.கிருஷ்ணானந்தன்,*
*சிவன் பண்ணை வீதி.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**:இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.



**இடபம்**: எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். சிலரின் நயவஞ்சகச் செயலை நினைத்து வருந்துவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் நயமாகப் பேசுங்கள்.



**மிதுனம்**:கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு.



**கடகம்**: கனிவாகப் பேசிக் காரியம் சாதிப்பீர்கள். உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களைத் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.



**சிங்கம்**: நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வேற்றுமதத்தவர் அறிமுகமாவார். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பழைய வேலையாள்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள்.



**கன்னி**: எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப்போனாலும், எதிர்பாரா்த ஒரு வேலை முடியும். புதிய வேலை அமையும். பணப்பற்றாக்குறையைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.



**துலாம்**: துணிச்சலாகச் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். விருந்தினர்களின் வருகையால் வீடு களைகட்டும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு அதிகரிக்கும்.



**விருச்சிகம்**: நீண்ட நாள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். புதிய நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.



**தனுசு**: அநாவசிய பேச்சைத் தவிர்ப்பது நல்லது. உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். சிறுசிறு அவமானங்கள் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் அலுவலக இரகசியங்களை வெளியிட வேண்டாம்.



**மகரம்**: விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். வியாபாரத்தில் போராடி இலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும்.



**கும்பம்**:நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். மற்றவர்களுக்காக சில செலவுகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.



**மீனம்**: உங்கள் போக்கில் சிறிதளவு மாற்றம் செய்வீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

## நாளை

**பங்குனி-12 புதன்கிழமை | 26.03.2014**

திதி: தசமி மு.ப.11.24 வரை
நட்சத்திரம்: உத்தராடம்
மு.ப.08.54 வரை

சுபநேரம்: 04.45-06.15 வரை
இராகுகாலம்:.12.15-01.45 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### குருவின் தகுதி

வியாபார முறையில் கணக்குப் போட்டுப் பார்க்கும் எண்ணத்தை விட்டொழி. ஏதாவது ஒரு பொருளின் மீது உள்ள பற்றுதலை மட்டும் விட்டுவிட உன்னால் இயலுமானால் விடுதலை வழியில் புகுந்துவிட்டாய். பொது மகளிரைக் காணாதே. பாவியைப் பாராதே. சாதுவைக் காணாதே. அந்தப் பொது மகளிரும் தெய்வ அன்னையரே. இவ்வாறு சந்நியாசி சொல்வார். ஒருமுறை சொல்வார், இருமுறை சொல்வார். பிறகு அறியாமையில் மூழ்கியவராய் 'ஒழுக்கமற்றவளே ! தீயவளே !' என்பார். அறியாமை ஒரு கணத்தில் மறையக்கூடும். சிறிது சிறிதாக மறையும் என்று சொல்வது தவறு. குரு இலட்சியத்தினின்று நழுவிய போதிலும் குரு பக்தி மிக்க சீடர்கள் இருக்கிறார்கள். ராஜபுதனத்தில் ஒரு சீடனைக் கண்டேன். அவனுடைய குரு மதம் மாறினார்.

கிறிஸ்தவ மதத்தைத் தழுவிவிட்டார். எனினும் அவரது சீடன் தனது காணிக்கையை நிறுத்தவில்லை. தொடர்ந்து அளித்து வந்தான். மேலைநாட்டு எண்ணத்தை விடு. ஒரு குருவைத் தேர்ந்தெடுத்தபின் அவரை ஒட்டியிரு. வேதாந்தத்தில் ஒழுக்கமில்லை என்று கூறுவோர் குழந்தைகளே. அவர்கள் கூறுவதும் ஒரு வகையில் சரிதான். வேதாந்தம் ஒழுக்கத்திலும் விழுமியது; உயர்ந்தது; அதற்கும் அப்பாற்பட்டது. உயர்ந்தவை பற்றியே பேசுங்கள். ஏனெனில் நீங்கள் சந்நியாசியாகிவிட்டீர்கள்.

## அரியவகை டைனோசர் கண்டுபிடிப்பு





அமெரிக்காவில் 6 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் வாழ்ந்த புதிய வகை டைனோசரின் படிமங்களை தொல்லியல் நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

வட அமெரிக்காவின் மத்திய மேற்கு பகுதியில் உள்ள, டக்கோட்டாவில் பாறைப் படி மங்களை ஆய்வு செய்கை யில் இந்த அரிய வகை டைனோசரின் படிமங்கள் கிடைத்துள்ளன.

இவ்வகை டைனோசர் முதலை மற்றும் இமு கோழிக்கு நிகரான உடலமைப்பைக் கொண்டது.

சுமார் 200 கிலோ எடையும் ஒன்றரை மீற்றர் உயரமும் கொண்ட இவ்வகை உயிரினங்கள் மொசப்பத்தேமியாவின் இதிகாசங்களில் பேய்ப் பறவை என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

கூரிய மூக்கு மற்றும் இறகு கொண்ட 'அன்சு' என்று அறிவியல் ரீதியாக அழைக்கப்படும் இந்த டைனோசர் வகைகளுக்கு பற்களோ, நகங்களோ இல்லை.

இதுகுறித்து தொல்லியல் ஆய்வாளர்கள் கூறுகையில், டைனோசர்களில் 'ஓவிரப்டோரோசர்ஸ்' என்று அறியப்படும் இவ்வகை உயிரினங்கள் ஆறரைக் கோடி ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் வாழ்ந்திருக்கக் கூடும் என்று கருதுவதாகத் தெரிவித்துள்ளனர். தற்போது கிடைத்துள்ள இப் புதுவகை டைனோசரின் உடல் அமைப்பை வைத்து நரகத்தில்இருந்துவந்தகோழிஎன்று இதற்கு பெயரிடப்பட்டுள்ளது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | 2 | | | 5 | | |
| 7 | | | 4 | 3 | 6 | | | |
| | 6 | 2 | | | | | | |
| 2 | 9 | | 3 | | 1 | | 5 | 8 |
| 1 | 8 | | 6 | | 7 | | 2 | 3 |
| 6 | 3 | | 5 | | 2 | | 1 | 7 |
| | | | | | | 7 | 4 | |
| | | | 7 | 2 | 4 | | | 5 |
| | | 8 | | | 5 | | | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 9 | 6 | 8 | 3 | 2 | 1 | 4 |
| 3 | 8 | 1 | 4 | 2 | 5 | 6 | 7 | 9 |
| 6 | 4 | 2 | 9 | 1 | 7 | 3 | 5 | 8 |
| 5 | 2 | 8 | 7 | 3 | 4 | 1 | 9 | 6 |
| 1 | 7 | 6 | 5 | 9 | 2 | 4 | 8 | 3 |
| 4 | 9 | 3 | 1 | 6 | 8 | 5 | 2 | 7 |
| 8 | 3 | 5 | 2 | 7 | 6 | 9 | 4 | 1 |
| 9 | 6 | 4 | 8 | 5 | 1 | 7 | 3 | 2 |
| 2 | 1 | 7 | 3 | 4 | 9 | 8 | 6 | 5 |



## பான் ஏசியா வங்கியின் யாழ். கிளை 4 ஆம் ஆண்டுப் பூர்த்தி

பான் ஏசியா வங்கி யாழ். கிளையின் நான்கு ஆண்டுகள் பூர்த்தி விழா கடந்த செவ்வாய்க்கிழமை ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள வங்கி அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது.

இந்த 4ஆம் ஆண்டு நிறைவு விழா மதகுருமார்களின் ஆசியுடன் நடைபெற்றதுடன், இந்நிகழ்வில் வங்கியின் முகாமையாளர், ஊழியர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

2010ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்ட மேற்படி பான் ஏசியா வங்கியின் யாழ். கிளையில் ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம், மருத்துவக் காப்பீட்டுடன் கூடிய நிலையான வைப்பு, டைன்னடானியம் கறுப்புக் கடனட்டை மற்றும் வெஸ்ரேன் யூனியன் பணப்பரிமாற்ற சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (த)

## தலைமைத்துவத்தில் பத்தாண்டை கொண்டாடிய செலிங்கோ லைஃப்

காப்புறுதித் துறையில் கடந்த பத்தாண்டு காலமாகத் தலைமை தாங்கும் நிறுவனமான செலிங்கோ லைஃப் அதன் தலைமைத்துவத்தின் தசாப்த கால நிறைவை தனது ஊழியர்களைக் கௌரவித்துக் கொண்டாடியது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற வருடாந்த விருது வழங்கும் விழாவில் அதன் சாதனை படைத்த ஊழியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கம்பனியின் விற்பனை மற்றும் செயற்பாட்டு மட்ட அதிகாரிகள் சுமார் 1500 பேர் இந்த கண்கவர் விழாவில் பங்கேற்றனர். இவர்களுள் சுமார் 200க்கும் அதிகமானவர்கள் 2013ம் ஆண்டின் தமது சிறந்த பங்களிப்புக்காகப் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கேளிக்கை அம்சங்களுடன் கூடிய இந்த கண்கவர் விழாவில் இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் சுவிஸ் ரீ யின் ஆயுள் மற்றும் சுகாதாரப் பிரிவின் தலைவராக உள்ள விவேக் குருவிலா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்திய செலிங்கோ லைஃப் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆர்.ரெங்கநாதன் ஆயுள் காப்புறுதித் துறையில் சந்தையில் தலைமைத்துவத்தை பிடிப்பது மிகவும் கஷ்டமான விடயம். இந்தத் தலைமைத்துவத்தை தொடர்ந்து பத்து வருடங்களுக்குத் தக்க வைத்துக் கொள்வது என்பது அதைவிடக் கடினமான விடயம். கடந்த எட்டு வருடங்களாக மக்கள் மத்தியில் பிரபல்யம் மிக்க காப்புறுதி வர்த்தக முத்திரையாக செலிங்கோ ஆயுள் காப்புறுதி திகழுகின்றது என்றும் அவர் கூறினார். இதன் மூலம் இலங்கை மக்கள் எம்மீது கொண்டுள்ள அளப்பரிய நம்பிக்கை வெளிப்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

விருதுகளைப் பெற்றுக் கொண்ட பலருக்கு பணப்பரிசு, சான்றிதழ், பதக்கம், விருது என்பனவற்றுக்கு மேலதிகமாக கனடா, மலேஷியா, பாங்கொக் ஆகிய இடங்களுக்கான சுற்றுலா பயண வாய்ப்புக்களும் வழங்கப்பட்டன. இலங்கையின் சகல மாவட்டங்களிலும் மிகச் சிறப்பாக பணியாற்றிய தலைவர்கள்; கிளை விற்பனை பிரிவு தலைவர்கள், விற்பனை ஆலோசகர்கள் ஆகியோர் தமது தனிப்பட்ட மற்றும் குழு செயற்பாடுகளுக்காக கௌரவிக் கப்பட்டனர்.



உயர்விருதுகளை வென்றவர்கள்: சிறந்த கிளைத் தலைவர் ஈ.எச். டி.ஜே. சாந்த மொரட்டுவை கிளை, சிறந்த பிரிவுத் தலைவர் திருமதி.எஸ்.கோவிந்தராஜு கொழும்பு வடக்கு கிளை, சிறந்த விற்பனை ஆலோசகர் பி.ஸ்ரீதரன் கொழும்பு வடக்கு பிரிவு 4. இந்த நிகழ்வின் அதி உச்ச அம்சமாக செலிங்கோ லைஃப் வென்றெடுத்த மக்கள் தெரிவு விருது ஆர்.ரெங்கநாதனுக்கு வழங்கப்பட்டது. (த)

## நிறுவனங்கள் இலாபத்தை மட்டும் கருதாமல் மக்களின் தேவை அறிந்து செயற்படவேண்டும்

### திசைகாட்டி நிறுவனத்தின் குழுமத்தலைவர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்.மாரச் 25

நிறுவனங்கள் இலாப நோக்கத்துடன் மட்டும் செயற்படாமல் மக்களின் தேவை அறிந்து சமூகத்துக்காக செயலாற்றவேண்டும் என்று திசைகாட்டி பிறைவேட் லிமிட்டெட்டின் குழுமத் தலைவர் எஸ்.செல்வராஜா தெரிவித்தார்.

திசைகாட்டி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியின் நியமன நிகழ்வு நேற்று முன்தினம் நிறுவனத்தில் நடைபெற்றது.

அதன்போது அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்.

விசா மோசடிகளில் சிக்கிக்கொள்ளாமல் மக்களைப் பாதுகாப்பதற்காக இந்த விசா ஆலோசனை நிறுவனம் ஆரம்பி
க் கப்பட்டது.எமது நிறுவனம் தனியாக இலாபத்தை மட்டும் கருத்தில் கொண்டு செயலாற்றுவது கிடையாது.வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதுடன் நவீன உலகுக்கு ஏற்ப கல்வி மற்றும் சமய,சமூகப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. நிறுவனங்கள் தனியாக இலாபத்தை மட்டும் கருத்தில் கொண்டு செயல்படுவதால் மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெறப்போவதில்லை. முக்கியமாக மக்களின் தேவைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

நிறுவனத்தின் செயற்பாட்டுக்கு அப்பால் சமூகப்பணிகள் அவசியமாகவுள்ளன. எனத் தெரிவித்தார்.

திசைகாட்டி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக வி.இந்துஜாவுக்கான நியமனக் கடிதத்தை திசைகாட்டி பிறைவேட் லிமிட்டெட்டின் குழுமத் தலைவர் எஸ்.செல்வராஜா கையளித்தார். நிகழ்வில் திசைகாட்டி நிறுவனத்தின் கலை இலக்கிய மன்றத்தினர்,சமய அபிவிருத்தி மன்றத்தினர் மற்றும் உறுப்பினர்கள்,ஊழியர்கள் கலந்து கொண்டனர். (த-14)

## 'பத்தும் வாசி' வெகுமதி திட்டம்





புதுவருட பருவ காலத்தில் தனது வாடிக்கையாளர்களுக்கு வெகுமதிகளை வெற்றி கொள்வதற்கான வாய்ப்புகளை அதிகளவில் வழங்கி மகிழ்ச்சியில் ஆழ்த்தும் வகையில், வீவா 'பத்தும் வாசி' எனும் நுகர்வோர் ஊக்குவிப்புத் திட்டத்தை வீவா அறிமுகம் செய்துள்ளது. இந்தத் திட்டத்தின் ஊடாக வீவா மோல்ட் சேர்க்கப்பட் ஆகாரபான ஊக்குவிப்புத் திட்ட பக்கட்டினை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர் கள் இருவரில் ஒருவருக்கு 100 கே 35 டயலொக் ஸ்மார்ட் போன்கள் மற்றும் 7 மில்லியன் ரூபா பெறுமதியான ரீலோட்களையும் வெற்றி கொள்வதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட் டுள்ளது.

ஜிஎஸ்கே நிறுவனத்தின் போஷாக்கு பிரிவு முகாமையாளர் தர்ஷன ஜயசிங்க கருத்து தெரிவிக்கையில், 'வீவா பத்தும் வாசி திட்டத்தின் ஊடாக வீவா பக்கட்களை கொள்வனவு செய்யும் இரண்டில் ஒரு வாடிக்கையாளருக்கு அன்பளிப்பொன்றை வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு காணப்படுகிறது. ஏனைய ஊக்குவிப்பு திட்டங்களுடன் ஒப்பிடுகையில், இந்த திட்டத்தின் ஊடாக வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு அதிகளவில் காணப்படுகிறது' என்றார்.

இந்தத் திட்டத்தின் ஊடாக அனுகூலங்களை பெற விரும்பும் வாடிக்கையாளர்கள் வீவா பத்தும்வாசி என விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள 400 கிராம் பைக்கற் ஒன்றை கொள்வனவு செய்து, அதனுள்காணப்படும்சுரண்டும்அட்டையிலிருந்து தமக்குரிய அன்பளிப்புப் பற்றி தெரிந்து கொள்ளலாம். 50 வீதத்துக்கும் மேற்பட்ட சுரண்டும் அட்டைகள் அன்பளிப்பைக் கொண்டதாக அமைந்திருக்கும். அது ஒரு ஸ்மார்ட் போனாக இருக்கலாம் அல்லது ரீலோட்டாக இருக்கலாம். 'வீவா பத்தும் வாசி' திட்டம் 2014 மார்ச் மாதம் 1 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. தொலைத்தொடர்பாடல் சேவைகளை வழங்குவதில் முன்னணியில் திகழும் டயலொக் ஆக்சியாடா இந்த திட்டத்துக்காக வீவா உடன் கைகோர்த்துள்ளது. ரீலோட்களை வெற்றி பெற்ற வாடிக்கையாளர்கள் 123 எனும் இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி, தமக்குரிய ரீலோட் பெறுமதிகளை பெற்றுக் கொள்ளலாம். ஸ்மார்ட் போன் வெற்றியாளர்கள் தமது கையடக்க தொலைபேசிகளை அருகிலுள்ள டயலொக் ஆர்கேட்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## இலங்கை மென்பொருள் அபிவிருத்தியில் வலுச்சேர்க்கும் 99 எக்ஸ் ரெக்னொலொஜி




மென்பொருள் அபிவிருத்திச் செயற்பாடு என்பது சர்வதேச ரீதியில் 'Agile' எனும் முறையின் மூலம் புரட்சிகரமான மாற்றத்தை எதிர்கொண்டவண்ணமுள்ளது. இந்த பாரம்பரியத்துக்கு மாற்றீடான திட்ட முகாமைத்துவ முறையானது, இலங்கையைச் சேர்ந்த சில தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் மூலமாகவும் பின்பற்றப்பட்ட வண்ண[illegible]ள்ளன.

தொழில்து[illegible] பிரவேசிக்கும் முன்னர் இந்த அடிப்படை நுட்ப முறைகளைப் பற்றி தெளிவாக அறிந்து கொள்வதற்காக, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மாணவர்களுக்கு இதன் முக்கியத்துவம் பற்றித் தெளிவுபடுத்தவென 99 எக்ஸ் ரெக்னொலொஜி நிறுவனம், வர்த்தக முகாமைத்துவத்துக் கான தேசிய பாடசாலை (NSBM) உடன் இணைந்து செயலமர்வு ஒன்றை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது.

அக்லி மென்பொருள் அபிவிருத்தி கட்டமைப்பு என்பது உலகளாவிய ரீதியில் இன்றைய கால கட்டத்தில் பெருமளவில் உபயோகிக் கப்படும் முறையாக அமைந்துள்ளது. அக்லி குறித்த அடிப்படை விடயங்களை கம்பனியின் அனுபவம் வாய்ந்த குழுவினர், பங்குபற்றுநர்களுக்கு விளக்கமளித்திருந்தனர். அத்துடன், நாளாந்த செயற்பாடுகளில் இவற்றின்பயன்பாடுபற்றியும் விளக்கமளித்திருந்தனர். இவர்கள் ஸ்கிரம் எனும் முறையை அதிகளவு பிரயோகித்திருந்தனர். அக்லியை அறிமுகம் செய்வதற்கு மிகவும் இலகுவானதும், பிரபல்யமானதுமான முறையாக இது அமைந்துள்ளது. இலங்கையில் 99 எக்ஸ் ரெக்னொலொஜி மூலம் இந்த முறை பின்பற்றப்படுகிறது. விறுவிறுப்பானதும், மகிழ்ச்சியூட்டும் செயற்பாடுகளையும் கொண்ட இந்த செயலமர்வில் 99 எக்ஸ் ரெக் னொலொஜி நிறுவனத்தைச் சேர்ந்த அணியினர் பங்குபற்றுநர்களுக்கு செயற் பாட்டு முறைகள் குறித்து தெளிவாக விளக்கமளித்திருந்தனர். அத்துடன், பாரம்பரிய அபிவிருத்தி முறைகளுக்கும் அக்லி,ஸ்கிரம் முறை களுக்குமிடையில் காணப்படும் வேறுபாடுகள் பற்றி தெளிவான விளக்கங்களை
வழங்கியிருந்தனர். மேலும், செயலமர்வின் போது பங்குபற்றியவர்கள் வினா விடை நேரத்தின் போது, தமது சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

இந்த செயலமர்வு 99 எக்ஸ் ரெக்னொலொஜி பல்கலைக்கழகங்களுடன் இணைக்கும் பகுதியான டொட்டிரியுட் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த பிரிவின் பிரதான நோக்கம், பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவசியமான ஆளுமைகள், வாய்ப்புகள் மற்றும் அனுபவத்தை தகவல் தொழில்நுட் பத்துறையில் ஏற்படுத்திக் கொடுப்பதாகும். இதற்காக தொழிற்துறைக்கும் பல்கலைக்கழக கல்வி கட்டமைப்புக்கும் இடையில் கட்டமைப் பிலான ஒன்றிணைவை ஏற்படுத்திய வண் ணமுள்ளது. (த)

# தமிழர்கள் மண்ணை இழந்தால் அனைத்தையும் இழக்க நேரிடும்

### கூட்டமைப்பு கூறுகிறது

மட்டக்களப்பு,மார்ச் 25
தமிழர்கள் மண்ணை இழந்தால் எதிர்காலத்தில் எல்லாவற்றையும் இழக்க நேரிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு,படுவாங்கரைப் பகுதியில் அமைந்துள்ள பட்டிப்பளைப் பிரதேச இந்து ஆலயங்களின் ஒன்றியத்தின் பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பிரதேசம் தமிழரின் சொத்தாகும். இதற்கு ஒரு தனித்துவ மண் வாசனை இருக்கின்றது.

அதைக் கட்டிக்காக்க வேண்டிய தேவை எம் அனைவருக்கும் உள்ளது.

எமக்கு உரித்தான கலாசாரம், வர்த்தகம், நிலம் போன்றவற்றை பேணிக் காக்க வேண்டியது கட்டாய தேவையாக ஆகியுள்ளது.

போராட்டத்தில் லட்சக்கணக்கான மக்களை இழந்த ஒரே இனம் எமது தமிழ் இனம்தான். ஏறக்குறைய மூன்று லட்சம் பேரை நாங்கள் விடுதலைப் போராட்டத்தில் இழந்து இருக்கின்றோம்.

அதனைத் தரவுகள்மூலமாக என்னால் நிரூபிக்க முடியும்- என்றார். (ச-31)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



யாழ்ப்பாணம்
பிரதேச செயலகத்தின்
யாழ்நகர் மேற்கு
சமுர்த்தி வங்கியின் முகாமையாளர்
திருமதி சுதர்மினி நவநீதன்
அவர்களின்
அன்புத் தந்தை
அமரர்
ஆறன் துரையப்பா
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கம்
யாழ்ப்பாண மாவட்டம்,
யாழ்ப்பாணம்.
(சி/12832) (7.6.3)



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
12 ★ 02 ★ 1950
உதிர்வு
16 ★ 03 ★ 2012
திதி:
அபரபக்க நவமி

அமரர் சுப்பிரமணியம் விக்கினேஸ்வரன்
ஆண்டிரண்டு ஆனதைய்யா ஆறவில்லை உங்கள் நினைவு
நீங்கள் இல்லாமல் என் வாழ்வு நீர்க்குமிழ் ஆனதைய்யா
வாடுகின்றேன் உனை நினைத்து வாராயோ எனை எண்ணி
அன்போடு எம்மை அரவணைத்தீரே அப்பா!
ஏற்றமிகு வாழ்விற்கு ஏணியாய் இருந்தீர்களே– அப்பா!
ஒரு முறையேனும் உங்கள்
திருமுகம் காட்டி செல்வீர்களா அப்பா!
கண்ணில் எட்டாத்தூரம் காலன் அழைத்தானோ
கதறுகின்றோம் நாம் இங்கு அன்பு நிறை மாமாவாய் என்றும்
ஆசையுடனே வலம் வந்தீர்
பேரப்பிள்ளைகளை வாய் நிறைய அழைத்து
ஆசை மொழி பேசிடுவீர்
தேற்றுவார் யாருமின்றித் தவிக்கின்றோம் நாம் இங்கு
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கைதடி வடக்கு, கைதடி. (46068)(4.6.3) குடும்பத்தினர்.


## மாசடைதல் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச் 25
யாழ்.மாவட்ட திணைக்களத் தலைவர்களுடனான சுற்றாடல் மாசடைதல் தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறுமென யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

சுற்றாடல் மாசடைதல் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வதற்கென கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 20 ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்று விசேட செயலணிக்குழு நியமிக்கப்பட்டுள்ளதையடுத்து இந்தக் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## குளிர்த்தி அபிஷேகம்

வடமராட்சி,மார்ச் 25
புலோலி, மந்திகை கண்ணகை அம்மன் கோயிலில் வருடாந்த குளிர்த்தி அபிஷேகம் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 11.30 மணிக்கு அம்பாளுக்கு விஷேட அபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து மூலஸ்தான பூசைகள் நடைபெறும் இக்குளிர்த்தி அபிஷேகத்துக்கான ஏற்பாடுகளை மந்திகை வர்த்தகர்களும், பொதுமக்களும் இணைந்து மேற்கொண்டுள்ளனர். (க-173)

## நிர்வாகசபை தெரிவு

அச்சுவேலி,மார்ச் 25
அரசசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் கோப்பாய் பிரதேச செயலர்பிரிவு சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகள் தெரிவின்போது தலைவராக வை.குணசேகரம், உபதலைவராக ரி.தங்கராசா, செயலாளராக எம்.புவனேந்திரன், உபசெயலாளராக மா.ஞானலிங்கம், பொருளாளராக என்.ஜெகதீஸ்வரன், நிர்வாகக்குழு உறுப்பினராக ஐ.தங்கராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (த-11)


## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை செல்வராசா

யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், ஐயனார் கோயிலடி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை செல்வராசா 23.03.2014 ஞாயிற்றுக்கிழமை தனது 75ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி சியாமளா விஜயகிருஷ்ணன் (முன்னாள் யா/யாழ்.இந்துமகளிர் கல்லூரி, தற்போது யா/இராமநாதன் கல்லூரி மருதனார்மடம் ஆசிரியை), மயூரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற உமையாளன் மற்றும் ரமணன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயகிருஷ்ணன் (பிரதித்திட்டப் பணிப்பாளர், மீள் எழுச்சித்திட்டம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு - கிளிநொச்சி), கோமதி (பிரான்ஸ்), வைஷ்ணவி (கனடா) ஆகியோரின் மாமனாரும், அருண் (யாழ்.இந்துக்கல்லூரி மாணவன்), அபிராமி (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி), ஆரணி (பிரான்ஸ்), காருண்யா (பிரான்ஸ்), கிரிஷன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மல்லாகம் ஐயனார் கோயிலடியில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (26.03.2014) புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் பி.ப.2.30 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திரு.திருமதி.சியாமளா விஜயகிருஷ்ணன்
021 224 0836/077 296 3760

ஐயனார் கோயிலடி,
மல்லாகம். (16085(12)(3.6)


## ஓமந்தை விபத்தில் கிராம சேவகர் படுகாயம்

வவுனியா, மார்ச் 25
வவுனியா ஓமந்தை ஏ-9 வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் படுகாயமடைந்த நிலையில் கிராம சேவையாளர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று காலை 9 மணியளவில் ஓமந்தைப் பகுதியில் தமது மோட்டார் சைக்கிளில் கிராம சேவகர் பயணித்த வேளை வவுனியா பக்கமாக இருந்து வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதிக் கொண்டதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

ஓமந்தை சேமமடுப் பகுதி கிராம சேவகர் எஸ்.மார்க்கண்டு (வயது-58) என்பவரே இந்த விபத்தில் படுகாயமடைந்திருந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் சுயநினைவற்ற நிலையில் சிகிச்சை பெற்று வருவதாக வவுனியா பொது வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. விபத்து குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-402)


## ஆண்டு நான்கின் நினைவில்

தோற்றம்
30.12.1932
மறைவு
07.04.2010
திதி: பங்குனி அபரபக்க நவமி
சேவையின் நாயகனாய்
பெரும்பணி புரிந்தவரே!
மாறுபடாக் கொள்கைபூண்ட
மாசற்ற மாணிக்கமே!
நான்காண்டுகள்
கடந்து சென்றாலும்
எம் இதயங்களில்
வாழ்கின்றீர்கள்!



அமரர்
தளையசிங்கம் நவரத்தினராசா
(ஓய்வுபெற்ற செயலாளர், நகரசபை - சாவகச்சேரி)

குடும்பத்தினர்.
பெருங்குளம், மட்டுவில் வீதி,
சாவகச்சேரி. (45959)(12)(3.6)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

நல்லையா
தர்மகுலசிங்கம்
(குலம்)
(முன்னாள் ஓய்வுபெற்ற
கிராம சேவையாளர்-
வவுனியா)



தோற்றம்
26.01.1952
மறைவு
25.03.2013

"குலம் என்ற பெயர் ஒன்றே போதும் உங்கள் புகழ்தன்னைப் பூமியிலே கூறும்"
நிகழ்காலம் ஏற்கமறுத்த - இறந்த காலத்தில் உண்மையான உங்களை
நினைவுகளால் தேடியபோது - உணர்த்தியது உள்மனது நீங்கள் இறந்து
ஓராண்டாகி விட்டதென்பதை....

இல. 67, நாவலர் வீதி,
பண்டாரிகுளம். வவுனியா.
குடும்பத்தினர்.
(45974) (7.6.3)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
03.09.1962
மறைவு
25.03.2013
திதி:-வளர்பிறை திரயோதசி
(12.04.2014)

அமரர் தங்கராசா அசோகலிங்கம்
(முன்னாள் ஆசிரியர்)
பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் ஒளிப்பிளம்பாய்
பிரபக்தியில் தன்யனாய்! நிர்மலனாய்!
புடமிட்டு வாழ்ந்த புருஷோத்தமரே!! எங்கள்
வாழ்வுதனை நெறிப்படுத்தி - பெரு
விருட்சமாய் மாற்ற நினைத்தாயே - இன்று
புல்லாய் புதராய் ஆகி
தவிக்கின்றோம் இத் தரணிதனில்.....

"மலர்மாளிகை", வல்வெட்டி. மனைவி,மகள்.
(46002)(2.6.3)

# வவுனியாவில் இயல் விழா

வவுனியா,மார்ச் 25
வவுனியா தமிழ் மாமன்றம் நடத்தும் "இயல் விழா" எதிர்வரும் 30 ஆம் திகதி வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. காலை நிகழ்வு காலை 9 மணிக்கும் மாலை நிகழ்வு மாலை 4.30 மணிக்கும் இடம்பெறவுள்ளன.
இயல் விழாவில் பட்டிமன்றம், சுழல்சொற்போர், கவியரங்கு, விவாத அரங்கு உட்பட பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (க-402)

**பச்சிலைப்பள்ளி பல நோக்கு கூட்டுறவுச்சங்கம், பளை**

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக பொருத்தமானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. ***பதவி***: களஞ்சிய முகாமையாளர் 208/13
2. ***சம்பளத்திட்டம்***: 9450 - 75 X 10 - 80 X 10 - 11000 இத்துடன் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அதிகரிப்பும் படிகளும் வழங்கப்படும்.
3. ***கல்வித்தகைமை:***

(அ) கூட்டுறவுப்பணியாளரின் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்துக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளரின் 15ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 4 வருடத்துக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

(ஆ) கூட்டுறவுப்பணியாளர் (சாதாரணதரம்) பத்திரம் / க.பொ.த (சாதாரணதரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூயகணிதம், சிங்கள/தமிழ் பாசைஎன்பன வற்றினை உள்ளடக்கிய 6 பாடங்களிலான சித்தி, சம்பந்தப்பட்ட துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

* கணினி அறிவும் திறனும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* மேற்படி பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தினால் கோரப்படும் ரொக்கப்பிணையும், ஆதனப்பிணையும் வழங்கத் தயாராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்புதல்**

சங்கத் தலைமையகத்தில் ரூபா 20/= செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்துடன் கல்வித்தகைமைச்சான்றிதழ், அண்மையில் பெற்ற வதிவிடத்தை உறுதிப் படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ், ஏனைய தகைமைகள் இருப்பின் அச்சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்பட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **10.04.2014** ஆம் திகதிக்கு முன்னதாக **தலைவர், பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம், புலோப்பளை வீதி, பளை** என்னும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "**கிளைமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்**" என குறிப்பிடுதல் வேண்டும்.

தலைவர்,
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம், பளை.

(சி12933)
(12.3.8)

# போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர் மீது படையினர், பொலிஸார் தாக்குதல்

## குச்சவெளிப் பிரதேசத்தில் பதற்றம்

திருகோணமலை,மார்ச் 25
வெளிமாவட்ட மீனவர்கள் தமது கடற் பகுதிக்குள் அத்துமீறி மீன் பிடிப்பதற்கு எதிர்ப் புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை, குச்சவெளி, ஜாயா நகரில் பிரதேச மீன வர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்ட மீனவர்கள் மீது பொலிஸாரும்,இராணுவத்தினரும் கூட்டாக தாக்குதல் நடத்தியுள்ளனர். அதனால் அந்தப் பிரதேசத்தில் பதற்ற நிலை காணப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-
நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணிக்கு புத்தளம், சிலாபம், நீர் கொழும்பு, கலாவத்த, மாம்புரி, வென்னப்புவ ஆகிய பிரதேசங்களில் இருந்து நான்கு படகுகளில் வந்த வெளிமாவட்ட மீனவர்கள் ஜாயாபுர பகுதியில் அத்துமீறி மீன் பிடித்துள்ளனர்.
அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வெளி மாவட்ட மீனவர்களின் வருகையை தடை செய்யுமாறு கோரி ஜாயா நகரில் ஆயிரத்தும் மேற்பட்ட மீனவர்கள் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத் துக்குச் சென்ற பொலிஸாரும்,இராணுவத்தினரும் மீனவர்களை கலைந்து செல்லுமாறு கூறி தாக்குதல் நடத்தியுள்ளனர்.
இந்தச் சம்பவத்தில் மீனவர்கள் பலர் காயமடைந்துள்ளனர். அத்தோடு அவர்கள் திசை தெரியாது ஓடி கடைசியில் ஜாயா பள்ளிவாசலில் ஒன்றுகூடியிருந்தனர் என்று குச்சவெளிப் பிரதேச தவிசாளர் எஸ்.தௌபீக் மற்றும் மீனவர் சங்கத் தலைவர் ஏ.எம். அஷ்ரப்கான், மீனவர் சங்கச் செய லர் ஏ.ஆர்சம் ஆகியோர் தெரிவித்தனர்.

**வெளிமாவட்ட மீனவர்கள் மீன் பிடிப்பதனால் எமது பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது.**

வெளிமாவட்ட மீனவர்களுக்கு என்றுசாய்புர பிரதேசம் வரை ஒதுக்கப் பட்டிருந்தபோதிலும், நேற்று முன் தினம் 4 படகுகளில் வந்த வெளி மாவட்ட மீனவர்கள் சல்லி முனை, தொடுவாய் பகுதிகள் அடங்கிய ஜாயா புர பிரதேசத்துக்கு வந்து படையி னரின் உதவியுடன் மீன்பிடிக்க முனைந்துள்ளனர்.
அதற்கு அந்தப் பிரதேச மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தபோது, அவர்கள் மீது படையினரும், பொலிஸாரும் இணைந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் குச்செவளி பிரதேச தவிசாளர் தெரிவித்ததாவது:-
நாம் எமது பிரதேசத்தில் மீன்பிடிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வில்லை. அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட பிரதேசத்தில் மீன் பிடிக்கலாம்.
எமது பிரதேசத்தில் வெளிமாவட்ட மீனவர்கள் மீன்பிடிப்பதனால் எமது பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. இதனைக் கருத்தில்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (ச)

## கோழி விற்பனைக்கு

முட்டை இடும் இளம் கோழிகள் (பிறிமா பிரவுண்)உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 393 6455
(33419)
(7.8.3)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
10.09.1946

மறைவு
09.02.2014

கடந்த (09.02.2014)ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி
**அமரர் இராஜேஸ்வரி நவரத்தினம்**
அவர்களின்
வீட்டுக்கிருத்தியம் நாளை(26.03.2014)புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் நிகழவிருக்கும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.
இல.6/1, பிரம்படி வீதி, தலையாழி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
குடும்பத்தினர்.
(46090)(5.8.3)

## கேள்வி அறிவித்தல்

வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை
செட்டிகுளம் பிரதேசத்தினுள் உள்ள புகையிரதக்கடவை வீதிகளை சீர் செய்தல்
வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை, வடமாகாணம்

01. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, **வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை, வடமாகாணம்,** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப் பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் **வீதி அமைப்புக்கான** இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர் வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை (தொலைபேசி 024-3248703 தொலைநகல் 024-2260913,)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் 08.04.2014 வரை காலை 09.00 மணி முதல் மாலை 15.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்படிவமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், வெங்கலச் செட்டிகுளம் பிரதேசசபை,வெங்கலச்செட்டிகுளம்** எனும் இடத்திலிருந்து **25.03.2014** ஆம் திகதியிலிருந்து **08.04.2014** ஆம் திகதி வரை **காலை 09.00** மணிக்கும் **மாலை 14.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**1000/=** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை** எனும் முகவரிக்கு **09.04.2014** ஆம் திகதி **மாலை 14..30** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| செட்டிகுளம் பிரதேசத்தினுள் உள்ள புகையிரதக்கடவை வீதிகளை சீர் செய்தல் | 2.9 | 3 மாதம் | C8 | 29,500.00 | 07.05.2014 |

**கூட்டு வேலைகளின் மொத்தப்பெறுமதி கேள்வித்தெரிவிற்கு உட்படுத்தப்படும்.**
**கேள்விச்சபையின் தீர்ப்பே இறுதியானது.**

**தலைவர்,**
வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை, வெங்கலச்செட்டிகுளம்.
வடக்கு மாகாணம் -
**25.03.2014**
(சி/12934)(10.6.3)

## மரண அறிவித்தல்



**முத்துத்தம்பி பாலசுப்பிரமணியம்**

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், சுவிற்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி பாலசுப்பிரமணியம் நேற்று (24.03.2014) திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - மனோன்மணி தம்பதிகளின் மகனும், மூத்தவிநாயகர் கோயிலடி, நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - பராசக்தி தம்பதியரின் மருமகனும், கௌரிதேவியின் அன்புக் கணவரும், நீரோஜன், றவீனா ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மாதேவி, வேலாயுதபிள்ளை (ஓய்வுநிலை பிரதி அதிபர் - கொக்குவில் இந்துக்கல்லூரி, நிரு ரியூசன் சென்ரர், நிர்வாகி), யோகேஸ்வரி, செல்வராணி, செல்வக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற மகாதேவா மற்றும் ஞானச்சந்திரன், இராஜசிங்கம், ரேணுகா, சுஜாத்தா, கிஸ்ணகுமாரி, செல்வராணி, காந்திமதி, விக்கினேஸ்வரி, ரோகினி, கேதீஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிற்சர்லாந்தில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்,
மு.வேலாயுதபிள்ளை (சகோதரன்),
மைத்துனர் - க.ஞானச்சந்திரன்.
021 222 3108

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(46093)(12)(3.6)

# தொகை மதிப்பு படிவத்தால் ஆசிரியர்கள் திண்டாட்டம்

## அரச பொது ஊழியர் சங்கம் மனு

அம்பாறை,மார்ச் 25

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர் தொகை மதிப்புப் படிவம் அவர்கள் மரணமடையும் திகதி தவிர ஏனைய முழு விவரங்களையும் கோரியுள்ளது. இதனால் அதிபர், ஆசிரியர்கள் பெரும் திண்டாட்ட நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள மனுவில் தெரிவித்துள்ளது.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

14 ஆவணப் பிரதிகளுடன் தொகை மதிப்பு படிவத்திலுள்ள 49 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டிய தர்ம சங்கட நிலை கிழக்கின் அதிபர், ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள சகல வலயக் கல்வி அலுவலகங்கள், அதிபர், ஆசிரியர்கள் தொடர்பான முழு விவரங்களையும் ஏற்கனவே தெளிவாக வைத்துள்ளன.

இதற்கென திட்டமிடல் பணிப்பாளர்கள் கொண்ட திட்டமிடல் பிரிவும் வலயக் கல்வி அலுவலகங்களில் இயங்குகின்றன.

ஒவ்வொரு வருடமும் அதிபர், ஆசிரியர்கள் தொடர்பான முழு விவரங்களும் படிவங்கள் மூலமாக கோரப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டு வரும் சூழ்நிலையில், புதிதாக தற்சமயம் வழங்கப்பட்டுள்ள தொகை மதிப்புப்படிவம் வழங்கப்பட்டிருப்பது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

கஷ்டப் பிரதேச கொடுப்பனவு வழங்கல், ஆசிரியர் இடமாற்றம் சீர் செய்யப்படல் போன்றவற்றுக்காக இந்த அதிபர், ஆசிரியர்கள் தொடர்பான தொகை மதிப்பு படிவம் வழங்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

49 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டி இப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கான வழிகாட்டல் குறிப்புக்கள் தமிழிலும் வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட 14 ஆவணப் பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதிபர், ஆசிரியர்கள் உயிரிழக்கும் திகதி தவிர ஏனைய முழு விவரங்களும் கோரப்பட்டுள்ள விதத்திலான இத்தகையதொரு படிவம் இதுவரை எங்கும்வெளியிடப்பட்டதில்லை.

அதிபர், ஆசிரியர்கள் தொடர்பான முழு விவரங்களும் படிவங்கள் மூலமாக ஒவ்வொரு வருடமும் அதிபர்களிடம் கோரப்பட்டு அவை தொடர்பில் மதிப்பீ டுகள் இடம்பெறுகின்றன. இவை மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இத்தகைய நிலையில் தற்பொழுது அதிபர், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 49 வினாக்களைக் கொண்ட தொகை மதிப்புப் படிவம் அவசியம் தானா? என்பதை தாங்கள் கவனத்தில் எடுத்து இவ் விடயம் தொடர்பாக அவசியமான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோருகின்றோம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

# தேர்தல் சட்டத்தை மீறிய 121 பேர் இதுவரை கைது

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

கொழும்பு,மார்ச் 25

தேர்தல் சட்டங்களை மீறிய 121 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தேர்தல்சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரை 123 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைத்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.


அஜித் ரோஹண

தேர்தல் சட்ட மீறல்களுடன் தொடர்புடைய 38 வாகனங்களும், பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன என்றும்-

அவற்றில் 3 அரச வாகனங்களும் உள்ளடங்குகின்றன என்று அவர் கூறினார்.

வாக்களிப்புத் தினத்தில், வாக்காளர்களை சட்டவிரோதமாக வாகனங்களில் ஏற்றிச் செல்லும் கட்சி அல்லது சுயேச்சை குழுக்களின் ஆதரவாளர்களைக் கைது செய்வதற்கான விசேட வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களும் கைப்பற்றப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

# புதையல் தேடிய 7 பேர் கைது

கொழும்பு,மார்ச் 25

ஹங்வெல்ல, லபுகம பிரதேசத்தில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு நேற்று முன்தினம் இரவு கிடைக்கப்பெற்ற தகவலைத் தொடர்ந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் அவிசா வளை பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பகுதியில் சேவையாற்றுபவர் என்று தெரியவந்துள்ளது. சந்தேகநபர்கள் ஹங்வெல்ல, பஞ்ஞாகுல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறினர்.

இந்தச் சந்தேக நபர்களை நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்தி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில் 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை
T.P : 077 0418053

**மாபிள் பதித்தல்**

உங்கள் வீட்டிற்கு மாபிள் பதிப்பதற்கு ஒரு சதுர அடிக்கு ரூபா 40/= மட்டும். அழகாக பதித்து கொடுக்கப்படும்.
தொடர்பு:077 961 5242 (33420) (3.6.4)

**கோழி விற்பனைக்கு**

புறொயிலர் இறைச்சிக்கோழி kg ரூபா 280/= உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:கோப்பாய் சந்தி (33421) (3.6.4)
(கைதடி வீதிப்பக்கம்) T.P:078 462 5621

**Town ACE விற்பனைக்கு**

53 - XXXX இல Town ACE வாகனம் விற்பனைக்குண்டு.
T.P : 077 1532485

**A/L பிரத்தியேக வகுப்புகள்**

English / Tamil Medium
Uplifting classes (walk-in)

| BIOLOGY | CHEMISTRY |
|---|---|
| நறியோ மாஸ்ரர் | இந்திரன் மாஸ்ரர் |
| 077 773 0840 | 077 665 5290 |

உங்களிடமும் நாங்கள் வரலாம்
எங்களிடமும் நீங்கள் வரலாம்
வருவது என்று முடிவெடுத்தபின் பேசுங்கள்

**அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு**

அன்புடையீர்!
கடந்த 24.02.2014 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு

**அமரர் கந்தையா சின்னம்மா**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26.03.2014) புதன்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு :-
எமது சக்திக்கு அப்பாற்பட்ட வகையில் அன்னார் மீது அன்பு கொண்ட அனைவரையும் தனிப்பட்ட ரீதியில் அழைக்க முடியாதுள்ளதால் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

**Day Care**

We provide
Infant/ Toddler Care
(6 months - 3 years)
Mon-Fri -7.30-5.30
Kid Care (3+ - 5 years)
Mon-Fri -12.30-5.30
Admissions Open!
*English speaking environment*
*Age-appropriate activities:*
*Educational play, Story telling,*
*Drama & Role play,*
*Craft work & Singing,*
*Pool play & park visit*
*Spacious and safe environment*
24 hrs CCTV monitoring
**Free English sessions**
**Free Snacks**
ICT, Elocution, European Languages, Chess, Art & Organ classes (on request)

**ICT**

| | |
|---|---|
| Gr 1, 2 | Intro to Computer, MS Paint, MS Word |
| Gr 3, 5 | MS Office, Intro to GUI & Internet E-mail, Web site creation |
| Gr 6, 9 | Intro to Programming MS access, HTML & Photoshop |
| Gr 10,11 | Intro to S/w Development-VB, H/w, XML & Adobe Illustrator |
| Gr 12 | S/w Development-.Net-Sql, Php-Mysql & N/w |

Free typing from 8+
Free Hardware from12+
Trainings available for ICT, GIT & BIT
*Admissions Open!!*

Visalam
Locally, Widening to Beyond
127/1 Temple Road Jaffna
021 221 9695, 075 979 9695
admin@visalamholdings.com

**பேக்கரி உரிமையாளர்கள் கேக் தயாரிப்பாளர்கள் பிஸ்கற் தயாரிப்பாளர்களின் கவனத்திற்கு!!!**



காலம், காலமாக தரத்தில் உங்கள் நம்பிக்கையை வென்ற
றோயல் பேக்கிங் பவுடர் தற்பொழுது
1kg பைக்கற்றில்!!
மிருதுவான கேக் தயாரிப்பதற்கும்,
அனைத்து வகையான பேக்கரி மற்றும்
பிஸ்கற் தயாரிப்புகளிற்கும் இன்றே பாவியுங்கள்.
தரத்திற் சிறந்த, விலையில் குறைந்த
"றோயல் பேக்கிங் பவுடர்"
Specially made for Bakery uses
Manufactured By:
Royal Industries
No.22,1/1, Adamally Buiding
Wolfendhal Street,
Colombo-13.
ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. : 021 222 2567

**NSB மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை**

தேசிய சேமிப்பு வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.01.2013 வரையிலும் அடகு வைத்து குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மீட்கப்படாத நகைகள் 29.03.2014 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அந்தந்தக் கிளைகளில் நடைபெறும் ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

கிளை விவரம்:

| இல. | கிளை |
|---|---|
| 01 | அச்சுவேலி |
| 02 | சுன்னாகம் |
| 03 | சாவகச்சேரி |
| 04 | கிளிநொச்சி |
| 05 | காரைநகர் |
| 06 | பருத்தித்துறை |
| 07 | மன்னார் |
| 08 | சங்கானை |
| 09 | மானிப்பாய் |

இந்த ஏலவிற்பனையை இரத்துச்செய்யும் அல்லது பிற்போடும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

பிராந்திய முகாமையாளர் (வடக்கு),
தேசிய சேமிப்பு வங்கி
(46027) (10)

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
**செல்லத்துரை சிவஞானம்**
தோற்றம்: 07.01.1957
மறைவு: 16.03.2012

வருடங்கள் இரண்டு ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கலைவாணி வீதி,
ஏழாலை வடக்கு.
நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

# போதைக்கு அடிமையானோருக்கு முதலாவதாக சாவகச்சேரி மருத்துவமனையிலேயே விடுதி

## சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் புகழாரம்

**மாற்றுவலுவுடையோர், முதியோர், பாதிக்கப்பட்ட பெண்கள் போன்றோருக்குத் தனி யான சிகிச்சைப் பிரிவுகளையும், போதைக்கு அடிமையாகி மீள முடியாமல் தத்தளித்த வர்களுக்கு புனர்வாழ்வளிக் கும் குருந்தம் விடுதியையும் முதன் முறையாக ஆரம்பித்துள்ளது இந்த மருந்துவமனை.**

தென்மராட்சி, மார்ச் 25

போதைக்கு அடிமையாகி அதிலிருந்து மீள முடியாமல் தத்தளித்தவர்களுக்கு புனர் வாழ்வு அளிக்கும் குருந்தம் விடுதியை முதன் முதலில் ஆரம்பித்து ஏனைய மருத்துவ மனைகளுக்கு முன்னுதாரணமாக சாவகச்சேரி மருத்து வமனை திகழ்வதாக சர்வ தேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநர் ரஞ்சித் பெர் னாண்டோ தெரிவித்தார்.

சாவகச்சேரி மருத்துவமனை யின் கண் சிகிச்சைப் பிரிவுக்கு நேற்றுமுன்தினம் கண் வில் லைகளை வழங்கிய பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறி னார். அங்கு அவர் தொடர்ந்து கூறுகையில்:

தன்னலம் கருதாது, மருத் துவத்துறையில் சமுதாயம் சார் செயற்பாடுகளை மேற் கொள்ளும் சாவகச்சேரி மருத் துவமனையின் புகழ் நாடு முழு வதும் பரவியுள்ளது.

மாற்றுவலுவுடையோர், முதி யோர், பாதிக்கப்பட்ட பெண் கள்போன்றோருக்குத்தனித்தனி யான சிகிச்சைப் பிரிவுகளை யும், போதைக்கு அடிமையாகி மீள முடியாமல் தத்தளித்த வர்களுக்கு புனர்வாழ்வளிக் கும் குருந்தம் விடுதியையும் முதன் முறையாக ஆரம்பித்துள் ளது இந்த மருந்துவமனை.

சமுதாய நோக்கத்துடன் செயற் படும் ஒவ்வொரு நடவடிக் கையும் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

மருத்துவமனை யில் போதிய ஆளணிப் பற்றாக் குறை காணப்படுகின்றபோதி லும், அது சமுதாயத்துக்கு சிறந்த சேவையாக வழங்கி வரு வது மக்களுக்கு வழங் கும் அரிய சேவையாகக் கருத முடிகிறது.

நாட்டில் உள்ள பொதுச் சேவை நிறுவனங்கள் இவ் வாறான சமுதாயம் சார் செயற்பாடு களை ஊக்குவித்தால், யாழ். போதனா மருத்துவமனை யின் சேவைகளை இந்த மருத்துவமனையூடாக இங் குள்ள மக்கள் பெறக்கூடிய வாய்ப்புகள் உருவாகும்.

மருத்துவமனையின் சமுதா யம் சார் செயற்பாடுகளை மதித்து ஒரு தொகுதி கண் வில்லைகளை முதல் கட்ட மாக வழங்குவதுடன் மேலும் பல உதவிகளைப் பெற்றுக் கொடுக்க 306 பி1 மாவட்ட லயன்ஸ் கழகம் ஆக்க பூர்வ மான நடவடிக்கைகளை மேற் கொள்ளும்- என்றார். (வ-9)

# 218 பயனாளிகளுக்கு கைப்பணி உபகரணங்கள்

யாழ்ப்பாணம். மார்ச் 25

வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 3 மாவட்டங் களைச் சேர்ந்த 218 பேருக்கு க்கைப்பணி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங் களில் இருந்து குறித்த பய னாளிகள் தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில்கள் அபி விருத்தி முயற்சி அமைச்சின் ஏற்பாட்டில் பனைசார் கைப் பணி உற்பத்தியாளர்கள் மற் றும் கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில்களை மேற்கொள்ளும் கைப்பணி யாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் வாழ்வின் எழுச் சித்திட்டத்தின் கீழ் இந்த உபகர ணங்கள் வழங்கப்படவுள் ளன.

உரிய உபகரண வசதிகள் இல்லாத காரணத்தால் கைப் பணி உற்பத்தியாளர்கள் தர மான உற்பத்திகளை உற்பத்தி செய்ய முடியாது நலிவடைந்த நிலையில் உள்ளனர். இதன டிப்படையில் தெரிவு செய்யப் பட்ட 218 பயனாளிகளுக்கு இந்த உபகரணங்கள் வழங் கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் 60 பய னாளிகளுக்கும் , கிளிநொச்சி மாவட்டத்தில் 98 பயனாளி களுக்கும் முல்லைத்தீவு மாவட் டத்தில் 60 பயனாளிகளுக்கும் இந்த உபகரணங்கள் எதிர் வரும் ஏப்ரல் மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் வழங் கப்படவுள்ளதாக பனை அபி விருத்திச் சபைத்தலைவர் பசு பதி சீவரத்தினம் தெரிவித்துள் ளார். (வ-14)

# உசன் நாகம்மாள் வீதியை புனரமைத்துத் தாருங்கள்

தென்மராட்சி, மார்ச் 24

சாவகச்சேரி பிரதேசசபை எல் லைக்குட்பட்டதும் நீண்ட கால மாக மணல் வீதியாகக் காணப் படுவதுமான உசன் நாகம்மாள் வீதி யைப் புனரமைத்துத் தருமாறு உசன் கிராம அபிவிருத் திச் சங்கத்தினர் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவரைக் கோரியுள்ளனர். உசன் கெற் பேலி வீதியிலிருந்து பிரிந்து விடத் தற்பளைக்குச் செல்லும் குறுகிய பாதையான இந்த வீதியைபெருமளவு மக்கள் தின மும் பயன்படுத்தி வருகின்றனர்.

மழை காலத்திலும், கோடை காலத்திலும் குறித்த வீதியால் பயணிப்போர் சிரமங்களை எதிர் நோக்குவதால் இந்த வீதியைப் புதிதாக நிர்மாணித்து வழங்குமாறும் அவர்கள் கோரியுள்ளனர். (வ-9)



கைதடி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கடந்த 10 ஆம் திகதி பேரணி ஒன்றை நடத்தியது. சீதனக் கொடுமை, பாலியல் துஷ்பிரயோகம், வீட்டு வன்முறை போன்றவற்றை ஒழிக் கக் கோரி பேர ணியில் கலந்துகொண்ட பெண்களால் கோஷங்கள் எழுப்பப்பட்டன. (வ-288)

# மாங்குளம் உணவகங்களில் சுகாதாரம் பேணும் நடவடிக்கை


மாங்குளம், மார்ச் 25

மாங்குளம் நகரத்தில் உள்ள உணவகங்களில் பணிபுரிப வர்கள் சுத்தம் பேணுவதுடன் சுகாதாரத்தையும் கடைப்பிடிப் பதை அத்தாட்சிப்படுத்தும் அடை யாள அட்டைகளை வைத்தி [illegible] வேண் டும் என மாங் குளம் பிரதேச பொது சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இரவு வேளையில் கூட உண வகங்கள் பரிசோதனை செய் யப்பட்டு சுகாதாரம் உறுதிப் படுத்தப்படும் எனவும் அவர் கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மாங்குளம் நகரி லுள்ள வர்த்தக நிலை யங்களில் வெள்ளி மற்றும் விடுமுறை நாள்களில் புகைத் தல் பொருள் களை விற்பனை செய்வதில் லையென இங் குள்ள வர்த்தக சங்கம் தீர் மானித்துள்ளது.

இதேவேளை ஒட்டுசுட்டான் வர்த்தக சங்கம் புகைத்தல் பொருள்களை விற்பனை செய் வதில்லையென முடிவு மேற் கொண்டமை குறிப்பிடத்தக் கது. (க-18)



*நீண்டகாலம் சேவையாற்றிய ஒருவருக்கு லயன்ஸ் கழக ஆளுநர் விருது வழங்குகிறார்.*

# லயன்ஸ் கழகத்தில் நீண்டகாலம் சேவையாற்றியோருக்கு விருது

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தில் இணைந்து பத்து வருடங் களுக்குமேலான காலம்சேவை யாற்றி வரும் அங்கத்தவர் களில் சிலருக்கு சர்வதேச லயன்ஸ் கழகத்தால் ஒதுக்கப் [illegible] விருதுகள், நேற்று முன் தின [illegible] மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ வால் வழங்கப் [illegible] டன.

கழகத் [illegible] வர் லயன் [illegible].தளிர்ராஜ் [illegible] மையில் நடைபெற்ற நிகழ்வில் 35 வருட சேவையை நிறைவு செய்த சாவகச்சேரி லயன்ஸ் கழக ஆரம்பகால உறுப்பினர் லயன் எஸ்.கே.நவரத்தினம் மற்றும் நீண்டகாலமாகச் சேவையாற்றி வரும் லயன் கா.சற்குணதேவன், லயன் செ.சுப்பிரமணியம், லயன் கே.பிரதீபன் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் லயன்ஸ் கழக மாவட்ட உறுப்பினர்களும் சாவகச்சேரி லயன்ஸ் கழக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (வ-9)

# பனை கித்துள் வாரம் ஏப்ரல் முதல் வாரத்தில்

**கைப்பணி உற்பத்தியாளர்களை அறிமுகப்படுத்தும் நோக்குடன் நாடளாவிய ரீதியில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.**

யாழ்ப்பாணம். மார்ச் 25

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில்கள் அபி விருத்தி முயற்சி அமைச்சின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதி யில் எதிர்வரும் ஏப்ரல் முதல் வாரத்தில் பனை கித்துள் வாரம் அனுட்டிக்கப்படவுள்ளது.

கைப்பணி உற்பத்தியாளர் களை அறிமுகப்படுத்தும் நோக் குடன் நாடளாவிய ரீதியில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்பட வுள்ளன.

வாரத்தின் ஆரம்பத்தில் வட மாகாண பனைசார் உற்பத் தியாளர்களது கைப்பணியை ஊக்குவிக்க உபகரணங்கள் வழங்கல்மற்றும்விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படவுள்ளன.

அதனைத் தொடர்ந்து எதிர் வரும் ஏப்ரல் 4ஆம்,5ஆம், 6ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் மாபெ ரும் கண்காட்சி ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள கைப்பணி உற்பத்தியாளர்கள் இந்தக் கண்காட்சியில் பங்கு பற்றவுள்ளனர். குறிப்பாக வட மாகாணத்தில் இருந்து பனை சார் கைப்பணி உற்பத்தியா ளர்கள் இந்தக் கண்காட்சியில் பங்குபற்றவுள்ளனர்.

இதனூடாக உற்பத்தியாளர் களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் முகவர்களுக்கு அறிமுகப் படுத்தவும் வாய்ப்புக் கிடைத் துள்ளது. (வ-14)

# இலவச மருத்துவ பரிசோதனை முகாம்



தென்மராட்சி, மார்ச் 25

மிருசுவில் தெற்குப் பிரதேச மக்களுக்கான இலவச மருத் துவ பரிசோதனை முகாம் எதிர்வரும் 6 ஆம் திகதி மிரு சுவில் நேயம் சனசமூக நிலை யத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கம், மருத்துவமனைநீரிழிவுசிகிச்சை நிலையம், சாவகச்சேரிலயன்ஸ் கழகம் ஆகியவை இணைந்து இந்த மருத்துவ பரிசோதனை முகாமை நடத்தவுள்ளன.

முகாமில் நீரிழிவு, இரத்த அழுத்தம்,கண்,பொதுமருத்துவம் போன்றவற்றுக்கான பரிசோத னைகள் நடத்தப்படும். கண் பரிசோதனையில் பார்வை யில் குறைபாடு காணப்படும் வறிய மக்களுக்கு இலவச மாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. (வ-9)


# இலங்கை அரசுக்கு எதிராக இந்தியா தனித் தீர்மானம்; வலியுறுத்தி தமிழக ஆளுநர் அலுவலகம் முற்றுகை

சென்னை, மார்ச் 25

இலங்கை அரசு ஈழத் தமிழர்கள் மீது புரிந்த இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள் மீதான சுதந்திரமான சர்வதேச விசாரணை அமைத்திட ஐ.நா மனித உரிமைகள் சபையில், இந்திய அரசு உடனடியாக தனித் தீர்மானம் கொண்டு வர வலியுறுத்தி தமிழகத்தைச் சேர்ந்த 18 இயக்கங்களினால், தமிழக ஆளுநர் மாளிகை முன்பாக நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது.





இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் சபையில் தற்போது அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானம் கனதியானது அல்ல என்று தமிழகத்தின் பல்வேறு அமைப்புக்களும் தெரிவித்து வருகின்றன. அதனால் இந்திய அரசு, இலங்கைக்கு எதிரான தனித் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்று அவை வலியுறுத்துகின்றன.


அதனை இந்திய மத்திய அரசுக்கு எடுத்துரைக்கும் முகமாகவே, தமிழக ஆளுநர்மாளிகை முன்பாக நேற்றைய தினம் 18 தமிழ் அமைப்புகள் ஒன்றிணைந்து மாபெரும் போராட்டத்தை நடத்தின. சுமார் 200 இற்கும் மேற்பட்டவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இலங்கைக்கு எதிராக இந்தியா தனித் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்றும், அந்தத் தீர்மானத்தில் இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்றும் அங்கு நடந்த போர்க் குற்றங்களை விசாரணை செய்ய சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதும் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கோரினர்.

அத்துடன் கடந்த இரண்டு ஆண்டுகளும் அமெரிக்கத் தீர்மானங்களை இந்தியா நீர்த்துப் போகச் செய்து இலங்கையை பாதுகாத்து தமிழர்களுக்கு துரோகம் இழைத்தது. அவ்வாறு இந்த ஆண்டு தீர்மானத்தில் இந்தியா எந்தவித நீர்த்துப் போகச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஆளுநர் மாளிகைக்குள் புக முயன்றதால் பொலிஸார் 200 இற்கு மேற்பட்டோரையும் கைது செய்தனர். பின்னர் நேற்று மாலையே அவர்கள் விடுவிக்கப்பட்டனர். (ற-5)

## விபத்தில் இருவர் காயம்



கோப்புப் படம்

வலி.வடக்கு மார் 25

காரைநகர் சங்கானை வீதியில் விபத்தில் காயமடைந்த இளைஞர்கள் இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்த விபத்து நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் ஏழாலை வடக்கைச் சோந்த கதிர்காமநாதன் சஞ்சீவன் (வயது 22) , கிழக்குபல்கலைக்கழக மாணவனான சின்னத்தம்பி கவாஸ்கர் (வயது - 23) ஆகிய இருவருமே காயமடைந்து சங்கானை வைத்திய சாலை யில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

கசூரினா கடற்கரையில் குளித்துவிட்டு மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் திரும்பிய இளைஞர்கள் இருவர் ஓட்டோ ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-86)

# சர்வதேச ரீதியாக ஆபத்தில் இலங்கை

## எச்சரிக்கிறார் அனுர குமார திஸநாயக்க

கொழும்பு, மார்ச் 25

இலங்கை சர்வதேச ரீதியாக கடும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது. மனித உரிமைகள், ஜனநாயகம் என்பன தொடர்பில் துரிதமான தீர்மானங்களை, முடிவுகளை எடுக்காததாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் அனுரகுமார திஸாநாயக்க.

பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மஹிந்த ராஜபக்ஷ அரசை மேலும் 6 ஆண்டுகளுக்கு ஆட்சியில் நிலைக்க செய்யக் கூடாது. நடைபெறவுள்ள தேர்தல் சாதாரணமான நிலைமையின் கீழ் நடத்தப்படும் தேர்தல் அல்ல. நாடு தற்போது பல பெரும் நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளது.

அரசு இந்த நெருக்கடிகளுக்கு தீர்வுகண்டிருக்கலாம். ஆனால் அதிகாரம் என்ற நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அரசு தேர்தல் ஒன்றை நடத்துகிறது. நாட்டின் பொருளாதாரம் பெரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. மக்களின் உரிமைகள் மற்றும் பொதுச் சேவைகளுக்கான ஒதுக்கீடுகள் குறைக்கப்படுகின்றன.

விவசாயிகளுக்கான ஓய்வூதியம், மீனவர்களுக்கான மானியம், அரச ஊழியர்களுக் கான வீட்டுக் கடன் என்பன இரத்துச் செய்யப்பட்டுள்ளன. கல்வி, சுகாதார சேவைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைக் கப்பட்டுள்ளன. அரசாங்கம் பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கி வருகிறது.

மறுபுறம் நாட்டின் ஜனநாயகம் வீழ்ச்சியடைந்துள்ளது. ஜனநாயகத்தை நிலைநாட்ட ஏற்படுத்தப்பட்டுள்ள சகல நிறுவனங்களும் செயலிழந்துள்ளன. நாடாளுமன்றம் வெறும் உரையாற்றும் இடமாக மாற்றப்பட்டுள்ளது. ராஜபக்ஷவின் விருப்பத்தை செயற்படுத்தும் இடமாக நீதித்துறை கட்டமைப்பு மாற்றப்பட்டுள்ளது.

ஊடகங்கள் மஹிந்த ராஜபக்ஷவின் ஸ்தோத்திர கீதங்களை மட்டுமே பாடும் இடங்களாக மாற்றப்பட்டுள்ளன. மக்களின் நியாயமான போராட்டங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு அடக்கப்பட்டுள்ளன. அதேபோல் தேசிய பிரச்சினையை பாரதூரமான இடத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு பின்னர் நாட்டில் வேகமாக தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்பி இருக்கலாம்.

எனினும் ராஜபக்ஷ அரசு, அதிகார மோகத்தில் புலி, பயங்கரவாதி என்ற வார்த்தைகளை பயன்படுத்தி வாழ்ந்து வந்ததுடன் புதிய நிலைமைகளுக்கு ஏற்ப மாறவில்லை.

அதேபோன்று நாடு சர்வதேச ரீதியாக கடும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ளது. மனித உரிமைகள், ஜனநாயகம் என்பன தொடர்பில் துரிதமான தீர்மானங்களை முடிவுகளையும் எடுக்காததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# புலிகளின் மீளிணைவு இராணுவத்தின் பொய்

## *வாசுதேவ கூறுகின்றார்*

கொழும்பு, மார்ச் 25

விடுதலைப் புலிகள் அமைப்பு வடக்கு மாகாணத்தைத் தளமாக கொண்டு மீண்டும் ஒருங்கிணைந்து செயற்பட ஆரம்பித்துள்ளது என்று வெளியாகியுள்ள தகவல்களை நம்பமுடியாது என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார .

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பொலிஸ் மற்றும் இராணுவப் பேச்சாளர்கள் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை குறித்து நான் ஆச்சரியமடைகின்றேன். இந்த அறிக்கைகள் ஜெனிவாவில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு உதவியாக அமையும்.

வடக்கில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள புலிகளைத் தேடும் தேடுதல்கள் காரணமாக அந்த பிரதேசத்தில் வாழும் மக்கள் பெரும் சௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# அரசியல் செல்வாக்கைத் தவிர்த்து எமக்கு நிரந்தர நியமனம் வழங்குக

## முல்லை சுகாதார தொண்டர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம். மார்ச். 25

நீண்டகாலமாக தொண்டர்களாகப் பணியாற்றிவரும் தமக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என முல்லைத்தீவு சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட சுகாதாரத் தொண்டர் கள் கோரிக்கை விடுத்துள்ள னர். இது தொடர்பான மனு ஒன்று நேற்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ந.வேத நாயகனிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் நீண்ட காலமாக சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றி வருகின்றோம். நீண்ட கால அனுபவம் உள்ள எம்மைப் புறக்கணித்து விட்டு கடந்த வருடம் எந்தத் தகைமைகளும் இன்றி வேறு வேலைகளில் இருந்தவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நாம் எந்தவித கொடுப்பனவுகளும் இன்றி சுகாதார தொண்டர்களாக மாத்தளன், பொக்கணை, முள்ளி வாய்க்கால் பகுதிகளில் போர்க் காலச்சூழலிலும் கடமையாற்றினோம். ஆனாலும் எம்மை நிரந்தர நியமனத்துக்கு உள்வாங்காது புறக்கணித்துள்ளதுடன் கடந்த வாரமும் 8 பேருக்கு இரகசியமான முறையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

முறைகேடான விதத்தில் வழங்கப்படும் இந்த நியமனங்கள் குறித்து வணிக கைத்தொழில் அமைச்சர், வடமாகண சுகாதார செயலாளர், வடமாகாண சுகாதார அமைச்சர், வடமாகாணசபை உறுப்பினர், முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர், ஆகியோருக்கு தெரியப்படுத்தியும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை .

அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி வழங்கப்படும் இந்த நியமனங்களை உடனடியாக நிறுத்தி மருத்துவ சேவையில் நீண்டகாலமாக பணியாற்றும் எமக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட தொண்டர்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறோம் என அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுவின் பிரதிகள் வடமாகாண முதலமைச்சர், வடமாகாண ஆளுநர், வணிக கைத்தொழில் அமைச்சர், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர், வடமாகாண சுகாதார அமைச்சர், வடமாகண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோருக் கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-14)

# ஹக்கீம் - பொது பல சேனா மோதல்கள் அலரி மாளிகையில்-இயக்கப்படும் நாடகம்


## குற்றஞ்சாட்டுகின்றது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, மார்ச் 25

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் பொதுபல சேனா அமைப்புக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல்கள் அலரி மாளிகையினால் உருவாக்கப்பட்டுள்ள தொலைக்காட்சி நாடகம் என்று விமர்சித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முஸ்லிம் காங்கிரஸ்க்கும் பொதுபல சேனாவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இந்த நிலைமையானது முற்றும் முழுதான நாடகமாகும்.



முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அரசில் அங்கம் வகித்துக் கொண்டே அரசு மீது குறை கூறி வருகிறார். தேர்தல்கள் நடத்தப்படும் காலங்களில் மாத்திரம் இருத் தரப்புக்கும் இடையில் இந்த முரண்பாடு ஏற்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாகவே ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்திற்கு சென்றார். உண்மையில் அவர் இருக்க வேண்டியது எதிர்க் கட்சியில்தான்" - என்று தெரிவித்துள்ளார். (ற)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இலங்கைக்கு

வாழ் சிங்கள மக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன், நெதர்லாந்து, பெல்ஜியம், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் இருந்து வருகை தந்த சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள மக்கள் அதில் கலந்துகொண்டிருந்தனர். அவர்களோடு அரசுக்கு ஆதரவான ஒருசில தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களும் இணைந்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "அமெரிக்கா, ஈராக், எகிப்து, லிபியா ஆகியவற்றை அழித்துவிட்டது. அடுத்து இலங் கையா?", "இலங்கையின் நண்பர்களே இலங்கையைப் பாதுகாருங்கள், "ஐ.நா. சபையே அனைவரையும் சமமாகப் பாருங்கள்", "திருமதி பிள்ளையே ஏன் பக்கச்சார்பாக நடக்கிறீர்கள்?", "மீள் நல்லிணக்கத்திற்கு காலமும் இடை வெளியுமே தேவை", "அச்சுறுத்தல் அல்ல" என்று எழுதப்பட்ட பதாதைகளைத் தாங்கியிருந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் சார்பாகப் பேசிய சிங்கள கலாசார அமைப்பின் தலைவரான ரஞ்சித் குலதுங்க, "இன்றைய ஆர்ப்பாட்டம் யாருக்கும் எதிரானது அல்ல. எமது பிரச்சினையை நாமே தீர்த்துக்கொள்ள .வேண்டும் எனவே அதற்கு இடம்தரப்பட வேண்டும். எமது போராட்டம் தமிழ் மக் களுக்கோ, முஸ்லிம் மக்களுக்கோ, ஐ.நா. சபைக்கோ எதிரானது அல்ல. எங்கள் நாட்டில் பிரச்சனை எதுவும் இல்லை. எங்களை எங்கள் பாட்டில் இருக்க விடுங்கள் எனக் கேட்டே நாங்கள் இங்கு குழுமி இருக்கிறோம்" - என்றார்.

இதேவேளை, கிளிநொச்சியில் கைது செய்யப்பட்ட திருமதி ஜெயகுமாரி பாலேந்திரன் அவரது மகள் விபூஷிகா ஆகியோரை விடுதலை செய்யக் கோரி இன்று செவ்வாய்க்கிழமை ஜெனிவாவில் புலம்பெயர் தமிழ் மக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மறுபுறம் ஜெனிவா வந்துள்ள வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் பிரதித் தவிசாளரும், வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் மீள்குடியேற்ற குழுவின் தலைவருமான ச. சஜீவன் மனித உரிமைகள் சபையில் பலஸ்தீனிய மக்கள் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர் அங்கு உரை யாற்றுகையில்,

"வலிகாமம் வடக்கில் 1990 ஆம் ஆண்டு முதல் இடம் பெயர்ந்த மக்கள் 34 இடம் பெயர்ந்தோர் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். போர் முடிவடைந்து விட்டது என்று அரசு அறிவித்துள்ள போதி லும், இன்னமும் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட வில்லை. இதுவரை பத்தாயிரம் குடும் பங்கள் மீளக் குடி யேற்றப்படாமல் உள்ளனர். தமிழ் மக்களை மீளக் குடிய மர அனுமதிக்க முடியாது எனத் தெரிவிக்கும் இராணுவம் தமது குடும் பங்களை இப்பகுதியில் குடியேற்றப் போவதாக அறிவித்துள்ளது என்று தெரிவித்தார். (ற)

### மேலும்

அதையடுத்து மேலும் கடுமையாக்கப்பட்ட இரண்டாவது திருத்த வரைவு கடந்த15 ஆம்திகதி ஜெனிவாவில் சமர்ப்பிக் கப்பட்டிருந்தது.

அதன்பின்னரும் தீர்மான வரைவு குறித்த கலந்துரையாடல்களை பல்வேறு தரப்பினருடன் நடத்தியது அமெரிக்கா. அந்தக் கலந்துரையா டல்களில் இலங்கை தொடர் பான தீர்மானத்தை மேலும் கடுமையாக்க வேண்டும் என்றே வலியுறுத்தப்பட்டது.

அவற்றை உள்வாங்கிக் கொண்டதான இலங்கை தொடர்பான இறுதித் தீர்மான வரைவு நேற்று ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

**ஆணையாளருக்கு அதிகாரம்**

மூன்றாவதும் இறுதியுமான இந்தத் திருத்த வரைவு, இலங்கை அரசினால் நிய மிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு விசாரணை நடத்திய 21 பெப்ரவரி 2002 ஆம் ஆண்டுக்கும் 2009 ஆம் ஆண்டு மே வரையான காலப்பகுதியில் இரு தரப்பினராலும் இழைக்கப்பட்ட குற்றங்கள் குறித்து விரிவாக சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தை கேட்டுக் கொள்வதாக அமைந்துள்ளது.

இந்த இறுதி வரைவின் - 8 ஆவது பந்தியி லேயே குறிப்பிடத்தக்கதான இந்த மாற்றம் செய்யப்பட்டுள் ளது. அதன்படி, 'நல்லிணக்க ஆணைக்குழு கவனம் செலுத்திய காலப் பகுதியில் இலங்கையில் இருதரப்பினராலும் இழைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் மோசமான மனித உரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்கள் தொடர்பாக, விரிவான சுதந்திர மான விசாரணையை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட நிபுணர்கள் மற்றும் சிறப்பு நடைமுறைகளின் உதவியுடன், உண்மைகளை நிறுவி, மீறல்கள் இடம்பெற்ற சூழல் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த வேண்டும்.' என்று ஐ.நா மனித உரிமை ஆணை யாளர் பணியகம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசுக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்படவுள்ள இந்தத் தீர்மானம், எதிர்வரும் 28 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது. (ற-5)

### பிரேரணை

ரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியே அமெரிக்கா தலைமையில் 5 நாடுகள் ஒன்றிணைந்து ஜெனிவா மனித உரிமைகள் சபையில் குறித்த பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளன. இந்த பிரேரணைக்கு ஆதரவு திரட்ட அமெரிக்கா கடும் பிரயத்தனம் மேற்கொண்டு வரும் நிலையில் இலங்கையும் தனக்கு ஆதரவு திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. (ற)

### பரந்தனில்

யில் குறித்த சடலம் சிதைவடைந்திருந்த நிலையில் பற்றைக்குள்ளிருந்து கண்டெடுக்கப்பட்டிருந்தது.

இதுவரை கிளிநொச்சி வைத்தியசாலையில் குறித்த சடலம் வைக்கப்பட்டிருந்தபோதும், சடலத்தை அடையாளம் காண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. இவ்வாறான தொரு நிலையில் குறித்த சடலத்தின் உடல் கூற்றுப் பரிசோதனைகள் இன்று கிளிநொச்சி வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு, புதைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

அடையாளம் காணப்படாத சடலங்களை, புதைப்பதற்கு முன்னர் அடையாளம் காண் பதற்குரிய நடவடிக்கைகள் வழமையாகப் பின்பற்றப் படும். ஊடகங்கள் வாயிலாக குறித்த சடலத்தை அடையாளம் காணுமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட பின்னரே புதைப் பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது வழமை. (ற-5)

### பொலிஸாரின்

நுண்கலைக்கழக மாணவர்கள் நேற்று முற்பகல் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பேராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் "விபூசிகா, ஜெயகுமாரியை கைது செய்த நீ இவர் களை ஏன் கைது செய்ய வில்லை?", "பொலிஸே மாணவர்களைப் பொங்கவைக்காதே", "பொலிஸே லஞ்சத்துக்கு விலைபோகாதே", "திட்டமிட்டு எம்மைப் பழி வாங்காதே", "நாங்கள் பயங்கரவாதிகள் அல்ல மாணவர்கள்!", "ஆதாரம் இருந்தும் அவர்களை ஏன் கைது செய்யவில்லை?", "பொலிஸாரே பக்கச்சார்பாக நடக்காதே", "அமைதியான கல்விச் சூழலை ஏற்படுத்தித்தா" போன்ற வாசகங்கள் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை, போராட்டத்தையடுத்து தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நுண்கலைக்கழக மாணவர்கள் 6 பேரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி துஷ்மந்த தெரிவித்தார். அவர்கள் நீதி மன்றில் முற்படுத்தப்பட்டு தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்களில் 5 பேர் மாணவர்கள். ஒருவர் நுண்கலைக்கழகத்தில் முன்னர் உணவகம் நடத்தியவர் என்று கூறப்படுகின்றது.

கடந்த 22ஆம் திகதி இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவர் செய்திருந்த முறைப்பாட்டில் சுமார் 12 இற்கும் மேற்பட்டோர்களே தம்மைத் தாக்கியதாக முறைப் பாடு செய்திருந்தார். அத்துடன் அவர்கள் கொண்டு வந்திருந்த மோட்டார் சைக்கிள் இலக்கத்தையும் பொலிஸாரிடம் கொடுத்திருந்தார்.

அவர்களில் மாணவனான சந்துரு மற்றும் நுண்கலைக் கழகத்தில் முன் னர் உணவகம் நடத்திய அகிலன் ஆகிய இருவரையும் பொலிஸார் முன்னரே கைது செய்துள் ளனர் என்றும், அதன்பின்னர் மாணவர்களான சிவானந்தன், ரகுநாதன், கோசலன் மற்றும் சசிதரன் ஆகியோர் தாம் தான் இறுதியாண்டு மாணவ னைத் தாக்கியதாகக் கூறி பொலிஸில் சரணடைந்தனர் என்றும் சக மாணவர்கள் தெரிவித்தனர்.

அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பொலிஸ் பொறுப் பதிகாரி, "இந்தச் சம்பவம் தொடர்பில் 6 பேர் கைது செய்யப்பட்டனர். மோட்டார் சைக்கிளின் உரிமையாளரிடம் இருந்து அவ ரது நண்பர்களே மோட்டார் சைக்கிளை எடுத்துச் சென்று குறித்த மாணவரைத் தாக்கியுள்ளனர்."- என்று தெரிவித்தார்.

அதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக செய்தி சேகரிக்க செய்தியாளர்களுக்கு அனுமதி வழங்க பல்கலைக்கழக பாதுகாப்பு ஊழியர்கள் மறுத்து விட்டனர். (ற-4-21-101)

### விபூஷிகாவும்

றதாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து, 13 வயதான விபூஷிகா மற்றும் அவ ரது தயார் ஜெயகுமாரி ஆகியோர் கைது செய்யப்பட்டி ருந்தனர். பயங்கரவாத தடுப் புப் பிரிவினரால் தேடப்பட்டு வந்த சந்தேக நபரைத் துரத் திச் சென்ற போது, அவர் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோ கம் மேற்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த சந்தேகநபருக்கு அடைக்கலம் கொடுத்தமை மற்றும் அவர்களுடைய வீட்டிலிருந்து, நிலத்தின் கீழ் இருப்பவற்றைக் கண்டறியும் கருவி மீட்கப்பட்டமை என்பன தொடர்பிலேயே ஜெயகுமாரி மற்றும் மகள் விபூஷிகா ஆகிய இருவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இவர்களைக் கைது செய்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிஸார் வவுனியாவில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டு விட்டு மறுநாள் 14 ஆம் திகதி இரவு கிளிநொச்சி நீதிமன்ற பதில் நீதிவானின் வீட்டில் முற்படுத்தினர். அதனையடுத்து தாயார் ஜெய குமாரியை 18 நாள் பூஸாவில் தடுத்து வைத்து விசாரிக்கவும், விபூஷிகாவை மருத்துவ மனையில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தவும் உத்தரவிட்டிருந்தார். இதன் பின்னர் இரு நாள் மருத்துவ மனையில் தங்க வைக்கப்பட்டிருந்த விபூஷிகா மீளவும் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருந்தார். இதன் போது அவரை கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தில் தற் காலிகமாக தங்க வைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

விபூசிகா இன்னமும் விடுவிக்கப்படாமையால் அவருக்காக கொழும்பிலுள்ள சட்டத்தரணிகள் சிலர் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

### இலங்கை

பாலியல் ரீதியான, உடல் ரீதியான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அவற்றை உறுதிப்படுத்தும் சாட்சியங்களைத் தாம் பெற்றுள்ளதாகத் தெரிவித்திருந்த அந்த அறிக்கை, விடுதலைப் புலிகள் அமைப்புக்கு உதவியமைக்காகப் பழி வாங்கும் நோக்கில் இவ்வாறான சித்திரவதைகளைத் தற்போதும் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் குற்றஞ் சாட்டியிருந்தது.

அந்தக் குற்றச்சாட்டுக்களை இலங்கை இராணுவம் முற்றாக நிராகரித்துள்ளது. இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை இராணுவத்தின் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய, "பிரிட்டனில் இருந்து வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கை இலங்கை இராணுவத்தை அவமானப்படுத்தும் நோக்கில் வெளியிடப்பட்டுள்ள ஓர் அறிக்கை. அந்தக் குற்றச்சாட் டுக்களை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். கைதிகளை இலங்கை இராணுவத்தினர் எந்த வகையிலும் சித்திரவதைக்கு உட்படுத்துவதில்லை. கைதிகள் தொடர்பான தெளிவான சட்ட வரையறையின் ஊடாகவே இலங்கை அரசு நடவடிக்கைகளைஎடுத்துவருகின்றது" என்று தெரிவித்துள்ளார். (ற)

### தேடப்படும்

ரால் தேடப்பட்டு வரும் கோபியின் (கஜீபன்) நண்பர் ஒருவரே என்று 'உதயனுக்கு' தெரிவித்தார் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண.

தமிழீழ விடுதலைப் புலிகளை மீள ஒருங்கிணைக்கும் நோக்குடன், புலம்பெயர் நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்துள்ள முன்னாள் போராளியான கோபி என்பவரை பயங்கரவாத பொலிஸார் தேடி வருவதாகப் பகிரங்கப்படுத்தியிருந்தனர். குறித்த நபரே கிளிநொச்சி தருமபுரத்தில் பொலிஸார் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றவர் என்றும் கூறப்படுகின்றது.

அதையடுத்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்திற்கும் இந்த நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டிருந்தது. கடந்த சனிக்கிழமை வட்டுக்கோட்டையில் திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதன்போது 300 பேர் வரையில் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தனர். இந்தச் சுற்றிவளைப்பில் எவரையும் கைது செய்யவில்லை என்று பொலிஸார் ஆரம்பத்தில் தெரிவித்திருந்தாலும், தற்போது சுற்றிவளைப்பின்போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பயங்கரவா தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். மாணிக்கம் காந்தன் என்ற இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திய பொலிஸ்பேச்சாளர் அவர் கோபியின் நெருங்கிய நண் பர் என்றும் தெரிவித்தார். (ற-5)

### தேடப்படுவோர்



தேவியன்

குமாறு பொதுமக்களிடம் கோரியுள்ளது பயங்கரவாத தடுப்புப் பிரிவு.

தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானப் படை உடையுடன் இருக்கும் ஒருவரது ஒளிப் படத்தை வெளியிட்டுள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவு குறித்த நபரைத் தேடி வருவதாகத் தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தேவியன் என்று அழைக்கப்பட்ட, முன்னாள் போராளியே தற்போது தேடப்படுவோர் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளார்.

இவர் வடக்கு, கிழக்குப் பகுதிக்கு வந்து செல்ல வும் வாய்ப்புகள் உள்ளதாகவும் பயங்கரவாத தடுப்புப் பிரிவு கூறியுள்ளது. இவர் பற்றிய தகவல் அளிப்பவர்களுக்கு ஒரு மில்லியன் ரூபா சன்மானமும் அறிவிக்கப்பட் டுள்ளது.

இது தொடர்பில் நேற்று மாலை பொலிஸ் பேச்சாளரிடம் 'உதயன்' வினவியது. எனினும் அவர் இது தொடர்பில் தனக்கு இதுவரை தகவல் தெரியாது என்று தெரிவித்தார்.

ஏற்கனவே கோபி, மற்றும் அப்பன் ஆகிய இருவரைத் தேடி, வடக்கில், தேடுதல்கள் தீவிரப்பட் டுள்ள நிலையில், இந்தப் புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதனால் முன்னாள் போராளிகள் மீதான கெடுபிடிகள் அதிகரிக்கவும், வடக்கிலும், கிழக்கிலும் தேடுதல்கள் தீவிரப்படுத்தப்படவும் வாய்ப்புகள் உள்ளன என்று கருதப்படுகிறது. (ற-5)

### இருநாட்டு

கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

எல்லைதாண்டி மீன்பிடிப்பது மற்றும் இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக இருநாட்டு மீனவர்களிடையே பேச்சு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இருநாட்டு அரசமட்டத்திலான அமைச்சர்களின் சந்திப்பு கடந்த ஜனவரி மாதம் 15 ஆம் திகதி புதுடில்லியில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இரு தரப்பு மீனவர்களுக்கும் இடையில் ஜனவரி மாதம் 27 ஆம் திகதி சென்னையில் முதலாவது பேச்சு இடம்பெற்றது.

இரண்டாம் கட்டப் பேச்சு மார்ச் 13 ஆம் திகதி கொழும்பில் இடம் பெறும் என்று தெரிவிக் கப்பட்டிருந்தது. அதற்கு முன்பதாக இலங்கைக்கடற்படையால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் 174 பேரையும் விடுவித்தால் மாத்திரமே இரண்டாவது பேச்சு இடம்பெறும் என்று தமிழக அரசு தெரிவித்திருந்தது. அதையடுத்து தடுத்து வைக்கப்பட்டிருந்த சகல தமிழக மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் கடந்த வாரம் தமிழக மீனவர்கள் 75 பேர் இலங்கைக் கடற்படையினரால் மீளவும் கைது செய்யப் பட்டுள்ளனர். அவர்களை உட னடியாக விடுவிக்குமாறும், அவ்வாறு விடுவித்தால் மட்டுமே தமிழக மீனவர்கள் பேச்சில் கலந்து கொள்வார்கள் என்றும் தமிழக அரசு மீண் டும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. எனினும் தமிழக மீனவர்களை இனி விடுவிக்கப் போவதில்லை என்று கடற்தொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே இன்றையதினம் இடம் பெறவிருந்த பேச்சு நிறுத்தப்பட்டுள்ளது.

மீனவர்களுக்கிடையில் பேச்சு நடந்தால் மட்டுமே இதுகுறித்து தீர்வு கிடைக்கும். எனவே கொழும்பில் பேச்சு நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று புதுச்சேரி மீனவர்கள் இலங்கை கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சுக்கு தொலை நகல் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர் என்று இலங்கை மீன்பிடித் துறை அமைச்சின் ஆலோசகர் எஸ்.பி. அந்தோனிமுத்து தெரிவித்துள்ளார்.

அந்தத் தொலைநகலில், ஏற்கனவேதிட்டமிட்டவாறு இலங்கை - இந்திய மீனவ பிரதிநிதிகளுக்கிடையேயான பேச்சை நடத்த வேண்டும் என்றும், அதில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்ட தமது மாநிலத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மீனவர் பேச்சுக்கள் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச்சங்கங்களின் சமாச தலைவர் என்.எம்.ஆலம், "இருநாட்டு மீனவர் பேச்சுக்களால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுமா என்பதில் தற்போது சந்தேகம் ஏற்பட்டுள்ளது. கடந்த 30 ஆண்டுகளாக போரால் பாதிக்கப்பட்டுள்ள வட பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் உயர்வடைய வேண்டும். விரைவாக இதுகுறித்து முடிவெடுக்க வேண்டும். இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடுவதைத் தடுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற-5-14-56)

### வடக்கு

வெளியிடப்பட்டிருந்தது. குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் தனது உரித்துக்கள் பறிக்கப்படுவதாக பிரதம செயலாளர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வடக்கு மாகாண சபையினால் தொடர்ச்சியாக பிரதம செயலாளர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டு வருகின்றது.

தொடர்ச்சியான தொந்தரவு கள் தொடர்பிலும், பிரதம செயலாளர் தனது கடமைகளைச் சரிவரச் செய்தே இருக்கின்றார் என்பதை நிரூபிப்பதற் காகவுமே குறித்த வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகவும் பிரதம செயலாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்த முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், வழக்கு தொடரப்பட்டுள்ளமை நல்லது தான் என்றும் அதனூடாக மாகாண சபையின் அதிகா ரங்கள் தொடர்பில் நீதிமன்றமே தீர்ப்பளிக்கட்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

குறித்த வழக்கில் பிரதிவாதிகளாக வடக்கு மாகாண முதலமைச்சர், ஜனாதிபதியின் செயலாளர், வடக்கு மாகாண ஆளுநர், பொதுச்சேவை ஆணைக்குழுவின் தலை வர், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆகியோர் பிரதம செயலாளரால் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் குறித்த வழக்கு விசாரணைக்காக நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரதிவாதிகள் தரப்பில் எவரும் மன்றில்முன்னிலையாகவில்லை. அதனால் எதிர்வ ரும் ஜுலை 14 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்த நீதி மன்றம், அதுவரையில் முதலமைச்சரினால் வெளியிடப்பட்ட மாகாண நிர்வாக நடவடிக்கை தொடர்பான சுற்றறிக் கையை நடைமுறைப்படுத்துவதற்கும் இடைக்கால தடை விதித்தது. (ற-5)

# கோல் மழையில் நனைந்தது நேற்று திக்கமுனை மைதானம்



யாழ்ப்பாணம், மார்ச் 25

அணிகள் மாறிமாறி கோல் போட கோல் மழையால் நனைந்தது பருத்தித்துறை திக்கமுனை மைதானம்.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல்முறையிலான உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டி திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்று நடைபெற்ற இரண்டு ஆட்டங்களிலும் மொத்தமாக 14 கோல்கள் அடிக்கப்பட்டன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக்கழகமும், வல்வை விளையாட்டுக்கழகமும் மோதின. ஆட்டம் ஆரம்பமாகி முதல் 10 நிமிடங்கள் வரை இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக மோதின. இரு அணிவீரர்களும் எதிர் அணிகளின் கோல் பிரதேசங்களை அண் மித்த போதும் முன்கள வீரர் களின் கவனவீனத்தால் கோல் பெறும் சந்தர்ப்பங்கள் பல வீணடிக்கப்பட்டன.

இந்தச் சூழ்நிலையில் ஆட்டத்தின் 11 ஆவது நிமிடத்தில் வல்வை விளையாட்டுக்கழக வீரர் சண்முகதாஸ் தனக்குக் கிடைத்த பந்தொன்றை எதிரணி தடுப்பாட்டக் காரர்களை இலாவகமாக வெட்டிச் சென்று அருமையான கோல் ஒன்றைப் பெற்றார்.

இதனால் நக்கீரன் அணியினர் சற்று நிலைகுலைய அதனைத் தமக்குச் சாதக மாகப் பயன்படுத்திய வல்வை அணியினர் அடுத்தடுத்து 4 கோல்களை அடித்து அசத்தினர். இதில் யசிகரன் 3 கோல்களையும், பிரசாத் ஒரு கோலையும் தமது அணி சார்பாகப் பெற்றுக் கொடுத்தனர். இந்தச் சூழ்நிலையில் 5:0 என்ற கோல்கள் அடிப்படையில் இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட நக்கீரன் அணியினர் தமது ஆட்ட வியூகங்களை மாற்றி முன்னேறித் தாக்குதலில் ஈடுபட்டனர். இருந்த போதும் வல்வை அணியினரின் கோல் காப்பாளரினதும், பின்கள வீரர்களினதும் திறமையாலும் கோல் பெறும் சந்தர்ப்பங்கள் தடுக்கப்பட்டன. இச் சூழ்நிலையில் இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பமாகி 6 ஆவது நிமிடத்தில் வல்வை அணியைச் சேர்ந்த பிரசாத் மேலும் ஒரு கோலைப் போட்டார். இதற்குப் பதிலடி கொடுத்தாற் போல நக்கீரன் அணி வீரர் ரமணன் தமது அணி சார்பாக ஒரு கோலைப் பெற்றுக்கொடுத்தார். அதற்கு அடுத்த நிமிடத்தில் வல்வை விளையாட்டுக்கழக வீரர் யசிகரன் மீண்டும் ஒரு கோலைப் போட மீண்டும் நக்கீரன் அணி வீரர் ஜெய சீலன் பதிலுக்கு ஒரு கோலைப் போட்டார்.

இந்தச் சூழ்நிலையில் ஆட்டம் மேலும் இறுக்கமடைய நக்கீரன் அணிக்கு கோல் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் பல கிடைத்தன. இதனை அவ்வணியின் முன்கள வீரர்கள் சரியாகப் பயன்படுத்தத் தவறிவிட்டனர். அதனால் ஆட்ட நேர முடிவடைவதற்குள் அவர்களால் மேலதிக கோல்களைப் போட முடியாமல் போனது. இறுதியில் 7:2 என்ற கோல் கள் அடிப்படையில் வல்வை விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குமுன்னேறியது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகமும், கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதின. இவ்வாட்டத்தின் ஆரம்பம் முதல் இறுதிவரை உடுப்பிட்டி யுத் அணியின் கையே மேலோங்கி இருந்தது.

ஆட்டம் ஆரம்பமாகி 10 ஆவது நிமிடத்தில் உடுப்பிட்டி யுத் அணிக்கு மூலை உதை ஒன்று கிடைத்தது. அதனை அவ்வணியின் முன்கள வீரர் சங்கர் அருமையாக உதைக்க அவ்வணியின் மற்றொரு வீரரான செல்வரூபன் மிகவும் நேரத்தியான கோல் ஒன்றைப் போட்டு பார்வையாளர்களை பிரமிக்க வைத்ததுடன் பாராட்டையும் பெற்றார்.

அதனைத் தொடர்ந்து இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டுவதற்கு 3 நிமிடங்கள் இருக்கையில் உடுப்பிட்டி யுத் அணி வீரர் சுஞ்சீவன் மீண்டும் ஒரு கோலைப் போட்டு தமது அணியை முன்னிலைப்படுத்த 2:0 என்ற அடிப்படையில் இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக வீரர்கள் மத்தியில் ஒரு உத்வேகம் காணப்பட்டது. இருந்த போதும் உடுப்பிட்டி யுத் அணி வீரர்கள் அவர்களை விட மேலும் உத்வேகத்துடன் விளையாடி அடுத்தடுத்து மூன்று கோல்களைப் போட்டு எதிரணியை நிலைகுலையச்செய்ததுடன் தமது வெற்றியையும் உறுதி செய்தனர். அவ்வணி சார்பாக சுஞ்சீவன், பகிநாதன் மற்றும் சசி சங்கர் ஆகியோர் தலா ஒரு கோலைப் பெற்றனர்.

இந்தச் சூழ்நிலையில் 5:0 என்ற கோல் கணக்கில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

(த-400)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் வட மாகாண ரீதியாக நடத்தும் 'வடக்கின் சுப்பர் கிங்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* *

யாழ்ப்பாணம், மார்ச் 25

பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக்கின் அனுமதியு டன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் திக்கமுனை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி மோத வுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து மருதங்கேணி கணேசானந்தா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* *

யாழ்ப்பாணம், மார்ச் 25

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மனோகரா விளையாட்டுக்கழக் அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரவை சுடர் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* *

யாழ்ப்பாணம், மார்ச் 25

மன்னார் உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களின் முதற்தர அணிகளுக்கு இடையில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை மன்னார் நகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில், மன்னார் சென். சேவியர் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து மூன்றாம்பிட்டி சென். அன் ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோத வுள்ளது. (த-23)

## பச்சிலைப்பள்ளி பிரதேச தடகளப் போட்டி இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 25

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குப் பச்சிலைப்பள்ளி பொது விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்து கொள்வார். (த-23)

## வெற்றி பெற்ற அணிகள்



யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் 'வடக்கின் சுப்பர் கிங்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித்தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வென்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் மன்னார் கில்லறி விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த-23)

## சம்பியனானது கார்மேல் போய்ஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 25

திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக்கழகமும்சைவப் பள்ளிக்கூட நண்பர்களும் இணைந்து நடத்திய அமரர் கணேஸ் தர்மகுலசிங்கம் ஞாபகார்த்த துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

திருநெல்வேலி முத்துத்தம்பி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்ற இப்போட்டியில் வண்ணார் பண்ணை ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகம் விளையாடியது.

நாணயச் சுழற்சியில் வென்ற குருநகர் கார்மேல்போய்ஸ் வி.க முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது முதலில் துடுப்பெடுத்தாடிய குருநகர் கார்மேல் போய்ஸ் வி.க 12பந்துப் பரிமாற்றத்தின் நிறைவில் 7 இலக்குகள் வீழ்த்தப்பட நிலையில் 102 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அதிக ஓட்டங்களாக அ.த தேசியன் 40 ஓட்டங்களையும் சுகதாஸ் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.




வெற்றிக் கிண்ணத்துடன் கார்மேல் போய்ஸ்

பதிலுக்கு103ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கொக்குவில் ஸ்ரீ காமாட்சி வி.க. 2 ஆவது பந்து பரிமாற்றத்தில் பவீனின் சிறப்பான பந்துவீச்சில் தொடக்க ஆட்டக்காரர் இருவரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்ததால் தடுமாறிய ஸ்ரீகாமாட்சி வி. கழகத்தை றொனி, சிந்து ஆகியோரின் பொறுப்பான துடுப்பாட்டம் தடுமாற்றத்தில் இருந்து காப்பாற்றியது.

இறுதியில் 12 பந்துபரிமாற்றத்தின் முடிவில் 96 ஓட்டங்களைப் பெற்று ஆறு ஓட்டங்களால் கொக்குவில் ஸ்ரீ காமாட்சி வி.க தோல்வி அடைந்தது.


இப்போட்டியில் சிறந்த பந்துவீச்சாளராக கார்மேல்போய்ஸ் கழகத்தின் அலனும், ஆட்ட நாயகனாக கார்மேல்போய்ஸ் கழகத்தின் தேசியனும் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர் ஆட்ட நாயகனாக ஸ்ரீ காமாட்சி கழகத்தின் சிந்து தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டியில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான ச.சுகிர்தன் மற்றும் பா.கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்போட்டிக்கு முதலில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நடுவர் ஒருவர் தவிர்க்க முடியாத காரணத்தால் சமூகம் அளிக்காததால் பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தான் நடுவராகக் கடமையாற்றுவதாகக் கூறி நடுவராக கடமையாற்றி இருந்தார். (த)

# போராடி வென்ற செரீனா


செரீனா

நடப்புச் சம்பியனும், உலகின் முதல் நிலை வீராங்கனையுமான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் கடும் போராட்டத்துக்குப் பிறகு 6-4, 4-6, 6-4 என்ற செற் கணக்கில் பிரான்ஸின் கரோலின் கார்ஸியாவைத் தோற்கடித்தார். இந்த ஆட்டத்தின் 3ஆவது செற்றில் 5 ஆட்டங்கள் முடிந்திருந்த நிலையில் மழை பெய்ததால் போட்டி 45 நிமிடங்கள் பாதிக்கப்பட்டது.

மியாமி மாஸ்டர்ஸில் 7 ஆவது பட்டம் வெல்லும் கனவில் இருக்கும் செரீனா, இந்தப் போட்டியில் 63 ஆவது வெற்றியைப் பதிவு செய்துள்ளார். இங்கு இதுவரை 70 போட்டிகளில் விளையாடியிருக்கும் செரீனா 7 இல் மட்டுமே தோல்வி கண்டுள்ளார்.

கடந்த முறை இறுதிச் சுற்று வரை முன்னேறியவரான மரியா ஷரபோவாவும் கடும் போராட்டத்துக்குப் பிறகே தனது 3ஆவது சுற்றில் வெற்றி கண்டார். அவர் 6-4, 6-7 (7), 6-2 என்ற செற் கணக்கில் செக் குடியரசின் லூஸி சபரோவாவைத் தோற்கடித்தார். இந்தப் போட்டியில் ஷரபோவா தவறுகளை செய்தது குறிப்பிடத்தக்கது.

தகுதி நிலை வீராங்கனையான அமெரிக்காவின் கோகோ வான் டேவெக் 5-7, 7-5, 7-5 என்ற செற் கணக்கில் 16ஆம் நிலை வீராங்கனையான ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசருக்கு அதிர்ச்சி தோல்வியளித்தார். (த)

# ஆனந்த் அபாரம்

2014ஆம் ஆண்டுக்கான உலகச் சதுரங்கச் சம்பியன்ஷிப் போட்டியில் நடப்பு சம்பியன் நோர்வேயின் மாக்னஸ் கார்ல்செனுடன் மோதப்போகும் வீரரைத் தேர்வு செய்வதற்கான தகுதிச் சதுரங்க தொடர் ரஷ்யாவின் கந்தி மான்சிஸ்க் நகரில் நடந்து வருகிறது.

இந்திய கிராண்ட்மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் உள்பட 8 முன்னணி வீரர்கள் கலந்து கொண்டுள்ள இந்தப் போட்டியில் ஒவ்வொருவரும் மற்ற வீரர்களுடன் தலா இரு முறை மோத வேண்டும். 14 சுற்று முடிவில் முதலிடத்தைப் பிடிக்கும் வீரர் கார்ல்செனுடன் மோதும் வாய்ப்பைப் பெறுவார்.

இந்த நிலையில் 9ஆவது சுற்றில் விஸ்வநாதன் ஆனந்த், பல்கேரியாவின் வெஸ்லின் தபலோவை எதிர்கொண்டார். வெள்ளை நிற காயுடன் ஆடிய ஆனந்த் 57ஆவது நகர்த்தலில் தபலோவின் சவாலை முடிவுக்கு கொண்டு வந்து வெற்றிக்கனியைப் பறித்தார்.

இதுவரை தோல்வியே சந்திக்காத ஆனந்த்துக்கு இது 3ஆவது வெற்றியாகும். மற்றொரு ஆட்டத்தில் அர்மேனியா வீரர் லெவோன் ஆரோனியனுக்கு, ஷக்ரியர் நேம்ட்யாரோவ் (அஜர்பைஜான்) அதிர்ச்சி அளித்தார். 9 சுற்று முடிவில் ஆனந்த் 6 புள்ளியுடன் மீண்டும் தனி முன்னிலை பெற்றுள்ளார். ஆரோனியன் 5 புள்ளியுடன் அடுத்த இடத்தில் உள்ளார். (த)


விஸ்வநாதன் ஆனந்த்

# 100ஆவது டெஸ்டுக்கு காத்திருக்கும் கெய்ல்



கிறிஸ் கெய்ல்

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல், தனது 100ஆவது டெஸ்டில் களமிறங்கக் காத்திருக்கிறார்.

நியூசிலாந்துக்கு எதிராக ஜூன் மாதம் நடக்கவுள்ள டெஸ்ட் தொடரில் இந்த மைல்கல்லை எட்ட உள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தொடக்க வீரர் கிறிஸ் கெய்ல் (வயது 34). கடந்த 1999ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டி மூலம் சர்வதேச அரங்கில் காலடி வைத்தவர். 2000ஆம் ஆண்டு நடந்த சிம்பாப்வே அணிக்கு எதிரான டெஸ்டில் அறிமுகமானார். இதுவரை இவர் 99 டெஸ்ட்(6933 ஓட்டங்கள்), 255 ஒருநாள்(8743 ஓட்டங்கள்), 38 சர்வதேச 20/20 (1130 ஓட்டங்கள்) போட்டிகளில் விளையாடி உள்ளார்.

இந்நிலையில் கெய்ல் தனது 100ஆவது டெஸ்டில் களமிறங்க உள்ளார் என மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஜூன் மாதம் நியூசிலாந்து அணி சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளது. முதல் டெஸ்ட் ஜமெய்க்காவில் (ஜூன் 8-12) நடக்கிறது.

இப்போட்டியின் மூலம் கெய்ல், தனது 100ஆவது டெஸ்டில் விளையாட உள்ளார்.

தவிர இப்போட்டி, இவரது சொந்த ஊரான ஜமெய்க்காவில் நடக்க இருப்பதால் உள்ளூர் ரசிகர்களின் முன்னிலையில் புதிய மைல்கல்லை எட்ட உள்ளார்.

இதன்மூலம் 100ஆவது டெஸ்டில் விளையாடும் 59ஆவது சர்வதேச வீரர் மற்றும் 9ஆவது மேற்கிந்திய தீவுகள் அணியின் வீரர் என்ற பெருமையும் பெற உள்ளார். (த)

# நடுவர்களை வெளிப்படையாக விமர்சித்தார் ஸ்ருவர்ட் பிரட்


நடுவருடன் ஸ்ருவர்ட் பிரட்

நடுவர்களை விமர்சித்த குற்றத்துக்காக இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ருவர்ட் பிரட்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

20/20 உலகக் கிண்ண முன்னாள் சம்பியனான இங்கிலாந்து அணி தொடக்க ஆட்டத்தில் நியூசிலாந்திடம் தோற்றது.

முதலில் ஆடிய இங்கிலாந்து 6 இலக்குகள் இழப்புக்கு 172 ஓட்டங்கள் எடுத்தது. நியூசிலாந்து 5.2 பந்துப் பரிமாற்றத்தில் 1 இலக்கு இழப்புக்கு 52 ஓட்டம் எடுத்து இருந்தபோது மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டு நிறுத்தப்பட்டது.

இதனால் டக் வோர்த் லூயிஸ் விதி கணக்கிடப்பட்டு நியூசிலாந்துக்கு 5.2 பந்துப்பரிமாற்றத்தில் 44 ஓட்டங்கள் இலக்காக இருந்தது. அந்த அணி 52 ஓட்டம் எடுத்து இருந்ததால் 9 ஓட்டங்களில் வென்றதாக அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ருவர்ட் பிரட் அந்தப் போட்டியில் நடுவர்களாகப் பணிபுரிந்த அலிம்தர் (பாகிஸ்தான்) பால் ரீபெல் (ஆஸ்திரேலியா) மற்றும் 3 ஆவது நடுவர் ராட்டக்கர், 4ஆவது நடுவர் எஸ்.ரவி ஆகியோரைத் தட்பவெப்பநிலை காரணமாக ஆட்டம் நிறுத்தப்படுவது குறித்து எந்தவித வழிமுறை பின்பற்றப்படுகிறது என்று வெளிப்படையாக விமர்சித்துள்ளார்.

பிரட்டின் இந்தச் செயல் வீரர்களின் நடத்தை விதிகளை மீறியதாக இருந்ததால் அந்தப் போட்டியில் இருந்து பெறும் பணத்தில் 15 சதவீதம் அபாரதமாக அவருக்கு விதிக்கப்பட்டது.

இது குறித்து ஐ.சி.சி நடுவர் ஜவகல் ஸ்ரீநாத் கூறியதாவது, ஆடுகளத்தில் இறுதி முடிவை எடுக்க கூடியவர்கள் நடுவர்கள் தான். மழையால் ஆட்டம் பாதிக்கப்படும்போது முடிவு எடுப்பது மிகவும் கடினமானது.

ஆனாலும் நடுவர்கள் எப்போதுமே சிறந்த முடிவை தான் எடுப்பார்கள். அவர்களை வெளிப்படையாக விமர்சனம் செய்வது கிரிக்கெட் விளையாட்டுக்கு ஆரோக்கியமானதல்ல என்றும் வீரர்கள், போட்டி நடுவர்கள், நிர்வாகிகள் இடையே பரஸ்பர மரியாதை இருக்கவேண்டும் என்பதே கிரிக்கெட்டின் முதன்மையானது எனவும் கூறியுள்ளார். இந்நிலையில் தன் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டை பிரட் ஒப்புக்கொண்டுள்ளார். (த)

# ஹெவிட்டை வெளியேற்றினார் நடால்

மியாமி மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெய்னின் ரபேல் நடால் 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார். மகளிர் பிரிவில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், ரஷ்யாவின் மரியா ஷரபோவா ஆகியோர் கடும் போராட்டத்துக்குப் பிறகு காலிறுதிக்கு முந்தைய சுற்றான 4ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

அமெரிக்காவின் மியாமி நகரில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் சனிக்கிழமை நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் 2ஆவது சுற்றில் உலகின் முதல் நிலை வீரரான ரபேல் நடால் 6-1, 6-3 என்ற நேர் செற்களில் முன்னாள் முதல் நிலை வீரரான ஆஸ்திரேலியாவின் லெய்டன் ஹெவிட்டைத் தோற்கடித்தார். மழை காரணமாக இரண்டரை மணி நேரம் தாமதமாகத் தொடங்கிய இந்த ஆட்டத்தை 66 நிமிடங்களில் முடிவுக்கு கொண்டு வந்தார் நடால்.

வெற்றிக்குப் பிறகு பேசிய நடால், 2012 இலிருந்து இந்தப் போட்டியில் விளையாடாத நிலையில் இப்போது மீண்டும் விளையாட வந்திருப்பது சிறப்பானது. எனது வருகையை தெரியப்படுத்த இது போன்ற ஒரு வெற்றியோடு தொடங்குவதைவிடச் சிறந்த வழி எதுவுமில்லை என்றார்.

ஹெவிட்டுக்கு எதிராகத் தொடர்ந்து 6ஆவது வெற்றியைப் பதிவு செய்திருக்கும் நடால், அடுத்ததாக உஸ்பெகிஸ்தானின் டெனிஸ் இஸ்டோமினைச் சந்திக்கிறார். இஸ்டோமின் தனது 2ஆவது சுற்றில் 6-7 (8), 6-0, 6-3 என்ற செற் கணக்கில் ரஷ்யாவின் டிமிட்ரி துர்சுனோவைத் தோற்கடித்தார். (த)






# இலங்கை உலக சாதனை சுருண்டது நெதர்லாந்து

20/20 கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி உலக சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளது. உலகக் கிண்ண 20/20 தொடரின், நேற்றைய இரண்டாவது போட்டியில் நெதர்லாந்து அணியை 39ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் இலங்கை இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளது. நேற்றைய போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை நெதர்லாந்து அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

இந்நிலையில் தனது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த நெதர்லாந்து 10.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 39 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

அணியின் துடுப்பாட்டத்தில் 5 வீரர்கள் ஓட்டங்கள் எதனையும் பெறாமல் ஆட்டமிழந்தனர். ஆகக் கூடுதலாக ரொம் கூப்பர் 16 ஓட்டங்களைப் பெற்றார். வேறு எவரும் இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற வில்லை. இலங்கை அணியின் பந்துவீச்சில் அஜந்த மெண்டிஸ் மற்றும் அஞ்சலோ மத்தியூஸ் ஆகியோர் தலா 3இலக்குகளை வீழ்த்தினர், மலிங்க 2 இலக்குகளையும், குலசேகர ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.
40 ஓட்டங்களைப் பெற்றால் எனப் பதிலுக்கு ஆடிய இலங்கை அணி ஒரு இலக்கை மட்டும் இழந்து 5 பந்துப் பரிமாற்றங்களில் வெற்றி இலக்கை அடைந்தது. குசல் பெரேரா 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். (த)

# பீலேயின் பொருள்கள் ஏலம்

பீலே என்ற சப்தம் கேட்டவுடனேயே முன்னால் சென்று கொண்டிருக்கும் பிரேசில் நாட்டவர் திரும்பிப் பார்க்கும் அளவுக்கு பிரேசில் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்ற உதை பந்து வீரர் பீலே. அவர் பயன் படுத்திய பொருள்கள், அவரின் அரியசெயல் களைப் பாராட்டி வெளியிடப்பட்ட அஞ்சல் தலைகள், படங்கள் ஆகியவற்றை ஏலம் விட்டுப் பெரும் பணத்தைத் திரட்டி விடலாம் என்ற ஒரு பிரேசிலியரின் கருத்து தவறானதல்ல.

பிரேசிலுக்காக அவர் ஆடிய கடைசி ஆட்டத் தில் அணிந்திருந்த சட்டை உள்ளிட்ட பல பொருள் கள் ஏலத்துக்கு வரவிருக்கின்றன என்று பிரேசில் ஊடகங்கள் தெரிவித்தன. அவருடைய விசிறியான மார்க்கோஸ் பாடிஸ்டா கடந்த 30 ஆண்டுகளில் தான் சேகரித்த பீலே ஆயிர மாவது கோல் அடித்த பின் வெளியிடப்பட்ட அஞ்சல் தலை, அவரு டைய உருவப் பொம் மைகள், படங்கள் ஆகியவை அடங்கிய சுமார் நூறு பொருள் களை ஏலம் விடத் திட்டமிட்டுள் ளார். இந்த ஏலத்தில் தனக்குப் பல்லாயிரக் கணக்கான டொலர்கள் கிடைக்கும் என்று அவர் நம்புகிறார். அவர் கடைசியாக அணிந்த பிரேசில் அணியின் சீருடைக்கு 1400 ரியாயிஸ் (பிரேசில் நாணயம்) என்று மார்க்கோஸ் நிர்ணயித்துள்ளார். இதற்கு அடுத்த விலை யில், 17 வயதில் அவரது முதலாவது உலகக் கிண்ண வெற்றி குறித்த ஆவணப் படத்தை விளம்பரப் படுத்தும் சுவரொட்டி இருக்கிறது. இதற்கு இவர் நிர்ணயித்துள்ள விலை மூவா யிரம் ரியாயிஸ் ஆகும். (த)

5 தினங்களில் உங்கள்
கனடாக் கனவு
கலைந்து போகுமா ?

வெறும் 23 இலட்சங்களில் 50 வயது
வரை கனடாவில் படிக்க, உழைக்க
சட்ட ஆலோசனைக்கு
நிறைவு நாள் 30.03.2014
விரையுங்கள்

திசைகாட்டி (பிறைவேர்) லிமிற்
175 பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 2219016, 021 4993501

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
தமிழ்க்குழந்தைகளோ அல்லது ஆங்கிலக் குழந்தைகளோ மற்றவர்கள் பேசுவதை அவதானித்தே தத்தம் மொழியைப்பேசப்பழகுகின்றன. மாறாக இலக்கணம் கற்றுவிட்டல்ல!
SAAMSON இல் ஆங்கிலப்பயிற்சியானது இதுபோன்றே உரையாடற் பயிற்சி மூலம் வழங்கப்படுவதால் நீங்கள் யாராக இருந்தாலும் 3 மாதங்களிலேயே சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவு ஆரம்பம் 29.03.2014 சனிக்கிழமை
பிரிவு : 4 03.00-05.00
அரச ஊழியர்கள், தனியார் ஊழியர்கள், தொழில் தேடுவோர் வெளிநாடு செல்வோர், இளைஞர், யுவதிகள் இணையமுடியும்.
வாரநாள் வகுப்புகள் (செவ்வாய்.வியாழன்) காலை 9.00-11.00
SAAMSON LANGUAGE SCHOOL 179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

IELTS A1 B1 B2
MBA(London) Qualified Trainer Call: 0213208342
Visit: http://edu.kugroup.info/ielts
0777302882 IELTS Centre@KU
தனிப்பட்ட முறையில், உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய. அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் 16 வருட அனுபவமுள்ள ஒரே கல்வி நிறுவனம்.
K.U Education, No 626 1/1, K.K.S Rd, Jaffna

தேவை
யாழ். நகரிலுள்ள அலுவலகம் ஒன்றுக்கு A/L சித்தியடைந்த பெண் அலுவலர்கள் (Clerk) தேவை.
தொடர்பு: 021 499 3502
(46087)
(12.3.6)

# இரண்டு ஓட்டங்களால் வென்ற தென்னாபிரிக்கா

பங்களாதேஷில் நடைபெற்று வரும் 20/20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில், நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் நியூசிலாந்தும் தென்னாபிரிக்காவும் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து களத்தடுப்பைத் தேர்வு செய்தது. தென்னாபிரிக்காவின் தொடக்க ஆட்டக்காரர் டி கொக் 4 ஓட்டங்களிலும் ஆம்லா 41 ஓட்டங்களிலும், டூ பிளிசிஸ் 13 ஓட்டங்களிலும் டிவில்லியர்ஸ் 5 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

ஆனால் பின்வரிசையில் களமிறங்கிய டுமினியின் அதிரடியான ஆட்டத்தால் அந்த அணி சவாலான இலக்கை எட்டியது. டுமினி 57 பந்துகளில் 86 ஓட்டங்கள் குவித்தார். 20 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் அந்த அணி 6 இலக்குகள் இழப்புக்கு 170 ஓட்டங்கள் குவித்தது. இதையடுத்து 171 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு, குப்திலும் வில்லியம்சனும் சிறப்பான தொடக்கம் அளித்தனர். வில்லியம்சன் 51 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் இலக்குகள் அடுத்தடுத்து வீழ்ந்ததால், ஆட்டம் தென்னபிரிக்கா வசம் சென்றது.

எனினும், அதிரடி ஆட்டக்காரர் பிரண்டன் டெய்லர் நம்பிக்கை அளிப்பவராக இருந்தார். வெற்றிக்கு 14 பந்துகளில் 21 ஓட்டங்கள் தேவைப்பட்டபோது, மோர்னி மோர்கல் வீசிய 19ஆவது பந்துப்பரிமாற்றத்தில் நியூசிலாந்து அணி 14 ஓட்டங்கள் குவித்தது. கடைசி பந்துப்பரிமாற்றத்தில் 7 ஓட்டங்கள் தேவை. ஆனால், அந்த பந்துப்பரிமாற்றத்ததை வீசிய ஸ்ரெய்ன், 4 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினார். (த)

## மரண அறிவித்தல்

### பாலசுந்தரம் மகேந்திரன்

(புகையிரத பாதை பரிசோதகர் வவுனியா)



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் மகேந்திரன் நேற்று முன்தினம் (23.03.2014) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுந்தரம் - செல்வமணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற வல்லிபுரம் - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் சிவமலரின் அன்புக்கணவரும் கோபிநாத் (ஜேர்மனி), கோகுல்நாத் (Dimo-யாழ்ப்பாணக்கிளை), ராகுல்நாத் (மத்திய மகாவித்தியாலயம் வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மனோகரன்(GIZ யாழ்ப்பாணம்), மாலதி (ஆங்கில விரிவுரையாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), மனமோகன் (கனடா), மாதினி (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் சிவபாலன், சிறீதரன், ரகு, சுதாகரன் காலஞ்சென்ற சுதர்சன் (காந்தி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.03.2014) புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வவுனியா பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 01, புகையிரத நிலைய விடுதி, வவுனியா.
வவுனியா : 0779255935,
தொலைபேசி : 021 2224352

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை முருகேசு (V T முருகேசு)

(இளைப்பாறிய மாநகர சபை உத்தியோகத்தர்)



காரைநகர் மணற்பிட்டியைப் பிறப்பிடமாகவும், ஆயிலியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை முருகேசு நேற்று (24.03.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை- இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான அருணாசலம்- செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கணபதிப்பிள்ளை மற்றும் பாக்கியம், பாலாமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற அன்னத்தின் பாசமிகு கணவரும், கலாவதி, தனபாலன், ரகுபாலன், வசந்தி, காலஞ்சென்ற பானுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருச்செல்வன், தனபாலசிங்கம், சாந்தி, றாதா, துரைரத்தினராசா ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (27.03.2014) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆயிலி,
காரைநகர்.
(46092)
(10.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.